
பொழிவு - 17
குவிப்பு - 02
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
பெப்ரவரி 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2014"

## அமெரிக்க போர்க்குற்ற நிபுணரிடம்
# போர்க்குற்ற ஆதாரங்களை அடுக்கினார் மன்னார் ஆயர்

இலங்கை அரசின்மீதான போர்க்குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவின் போர்க்குற்ற நிபுணரிடம் ஆதாரங்களுடன் அடுக்கினார் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை. கடந்த 08.01.2014 அன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்காவின் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்தனர். யாழ் ஆயர் இல்லத்தில் வைத்து யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை ஆகியோரையும் இந்தக் குழுவினர் சந்தித்தனர்.



சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் முடிவில் இரு ஆயர்களும் ஊடகவியலாளரிடம் தெரிவித்ததாவது - இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அது தொடர்பான உண்மையை ஆராய்வதற்காக வந்திருப்பதாக ஸ்ரீபன் ராப் எம்மிடம் தெரிவித்தார். அத்துடன் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயவுள்ளதாகவும் ராப் எம்மிடம் கூறினார்.

வடக்கு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்தனர். அவர்கள் இதனூடாகத் தமக்கு ஏதாவது தீர்வு வரும் என்று நம்பியிருந்தார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகள் இன்னும் பூர்த்தியாக்கபடவில்லை. வடக்கு மாகாணத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைக்கான அதிகாரங்கள் குறைவாகவே உள்ளன. இதனையாவது வழங்குவதற்கு அரசு தயாராக இல்லை. மாகாண அரசுடன் மத்திய அரசு முறுகல் நிலையையே கடைபிடிக்கின்றது. இந்த மாகாணசபையினூடாக மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் - என்றனர். இதேவேளை மன்னார் ஆயர் போர்குற்றங்கள் தொடர்பிலான ஆதாரங்கள் சிலவற்றை அமெரிக்க அதிகாரிகளிடம் கையளித்துள்ளார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளியுங்கள்
## மட்டு. ஆயர் பாதுகாப்புச் செயலரிடம் வேண்டுகோள்

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கும் அல்லது அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையாவுக்கும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குமிடையில் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.



## உள்ளே .....!

- "மனித மாண்பும் குடும்ப வாழ்வும்" என்ற இந்த ஆண்டிற்கான மையப்பொருளை மையப்படுத்திய - அருட்தந்தை [illegible] செல்வம் அவர்கள் எழுதிய சிறப்புக் கட்டுரையை 6ஆம் பக்கத்தில் காணலாம்.
- மன்னார் மறைமாவட்ட மறைக்கல்விப் பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை 8ஆம் பக்கத்தில் காணலாம்.

# இனிப்பான பாப்பரசர்



பாப்பரசர் பிரான்சிஸ் வத்திக்கானில் ஆராதனை நிகழ்வொன்றில் பங்கேற்றவேளை, அவரது அளவையொத்த அவரது தோற்றத்தைப் பிரதிபலிக்கும் சொக்லேட் உருவச்சிலையொன்று அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சொக்லேட் வடிவமைப்புக்களை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற மைக்ரோ டெல்லா வெக்ஸியா என்பவர் தனது மாணவர்களுடன் இணைந்து 30 நாட்களைச் செலவிட்டு இந்த சொக்லேட் கட்டமைப்பை உருவாக்கியுள்ளார்.

இந்த 1.5 தொன் நிறையுடைய பாப்பரசரின் சொக்லேட் உருவச்சிலை கத்தோலிக்க தொண்டு ஸ்தாபனமொன்றுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



# திருத்தந்தையைச் சந்தித்த 12,000 இலங்கை மக்கள்



இலங்கையின் தேவத்தையில் உள்ள இலங்கை மாதா திருத்தலத்தல அபிசேகத்தின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு உரோமுக்கு யாத்திரகர்களாகச் சென்றவர்களையும், இத்தாலியில் வாழும் இலங்கை மக்களையும் திருதந்தை பிரான்சிஸ் சந்தித்து உரையாடியுள்ளார்.

கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் இலங்கையில் இருந்து சென்ற யாத்திரிகர் குழுவும், இத்தாலியில் வாழும் இலங்கை மக்களும் இணைந்து கடந்த 08.02.2014 அன்று வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். ஏறக்குறைய 12,000 பேர் இதில் கலந்துகொண்டனர். இத்திருப்பலியின்பின் திருத்தந்தை பிரான்சிஸ் இந்த மக்களைச் சந்தித்து உரையாற்றினார். இதன்போது யாத்திரிகர்களுக்கான தமது உரையில் கர்தினால் ரஞ்சித்தை வாழ்த்தி வரவேற்ற பாப்பரசர் பிரான்சிஸ், இலங்கை வருமாறு அழைப்பு விடுத்தமைக்காக அவருக்கு நன்றி வெளியிட்டுள்ளார். "நான் இந்த அழைப்பை வரவேற்கிறேன்" என்று தெரிவித்த பாப்பரசர், "இறைவன் எமக்கு கிருபையை அளிப்பார் என்று நம்புகிறேன்" என்றும் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கை கடந்த வருடங்களில் முகம்கொடுத்திருந்த மோதல்கள் பற்றியும் பாப்பரசர் பிரான்சிஸ் இதன்போது பேசியுள்ளார்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

# செபமாலைத்தாசர் சபைக்கு இரண்டு புதிய குருக்கள்





செபமாலைத்தாசர் துறவற சபையைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்கள் பெப்ரவரி 27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தைச் சேர்ந்த யேசுதாசன் டெனிஸ் குரூஸ் மற்றும் பெரியகோமரசன்குளம் புனித பரலோகமாதா ஆலயத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஞானரூபன் ஆகியோரே புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ள அருட்சகோதரர்கள் ஆவர். பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருக்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது. இவர்கள் பற்றிய விரிவான தகவல்கள் 14ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

## கலாநிதிப்பட்டம் பெற்ற வின்சன்ற் பற்றிக் அடிகளாரை
# வாழ்த்திப் பாராட்டுகின்றோம்!

அருட்பணியாளர் வின்சன்ற் பற்றிக் (அமதி) அடிகளார் யாழ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தின் 29வது பொதுப்பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோதே அடிகளார் இந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

சைவ சித்தாந்தத்தில் கிறிஸ்தவ மனிதன் பற்றிய ஆய்வை இவர் மேற்கொண்டு ஆராய்ச்சி நூலை சமர்ப்பித்திருந்தார். பலவித பணிகளுக்கு மத்தியில் கல்வித்துறையில் நாட்டம் செலுத்தி அதிஉயர் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட வின்சன்ற் பற்றிக் அடிகளாரை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றது. வின்சனற் பற்றிக் அடிகளார் பல உளவியல் நூல்களுக்குச் சொந்தக்காரர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## குமாருக்கு மன்னார் ஆயர் அஞ்சலி

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த ஜனவரி 5ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதன்போது மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படத்திற்கு ஆயர் [illegible] அஞ்சலி செலுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## குலையும் குடும்ப வாழ்வைக் காப்பாற்றுவோம்

குடும்பம் என்பது மனிதத்தின் பிறப்பிடம். வாழ்க்கையை வழப்படுத்த வேண்டிய சிறப்பிடம். சமுக உணர்வைச் சக்தியுடையதாக்கும் உறைவிடம். சமுக சமய நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் ஆற்றுப்படுத்தும் அறிவகம். சமுதாயத்தின் சாரம். அன்பைப் பிறப்பிக்கும் சாதனம். குடும்பம்! மனித குல நாகரீகத்தின் உற்பத்தி தளம். ஆரோக்கியமான பால் உறவிற்கு அங்கீகரிக்கப்பட்ட களம். குடும்பம் என்றால் என்ன என்று ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறு வரையறை செய்கின்றது. "ஒத்த குறிக்கோளுடன் ஒரே வீட்டினுள் வசிக்கும் நபர்களின் இணைப்பே குடும்பம்".

### குடும்பத்தில் குழப்பங்கள்

இன்று குடும்பங்களில் குழப்பங்கள் மலிந்துவிட்டன. இன்று அனேக குடும்பங்கள் கவலையிலும் கண்ணீரிலும் தம் வாழ்நாட்களை நகர்த்துகின்றன. அமைதி இழந்த ஆன்மாக்களாக, உணர்விழந்த நடைபிணங்களாக குடும்பங்களில் மனிதர்கள் வாழ்கின்றனர். குடிவெறியும், விபச்சாரமும், சந்தேக மனப்பான்மைகளும், வைராக்கிய உணர்வுகளும் இன்று குடும்ப வாழ்வை பெரிதும் சீரழிக்கின்றன. குடும்பம் இன்று படிப்படியாக – ஆனால் படைபடையாக சிதைந்து வருகின்றது. குடும்பத்தின் அமைப்பும் வடிவமும் முதியோர் இல்லங்களாக பெண்கள் விடுதியாக அனாதை இல்லங்களாக மாறி வருகின்றது.

குடும்பங்கள் சிறப்பாக இருந்தால் சமுகக் குற்றங்கள் ஏது? அனாதை இல்லங்கள் ஏன்? முதியோர் இல்லங்கள் ஏன்? அன்னை தெரேசாக்கள் எதற்காக? சிதையும் குடும்பங்களால் சிதறும் மனிதர்களைக் காக்க குடும்பம் சீராக இருக்க வேண்டும். இல்லறமாம் நல்லறத்திற்கு மூன்று முகங்கள் உண்டு. அவை: கணவரின் பாதுகாப்பு, மனைவியின் ஒத்துழைப்பு, குழந்தையின் பணிவு.

### கணவன் மனைவி உறவு

தேனுக்கு மலர் பாதுகாப்பு. மலருக்குத் தென்றல் பாதுகாப்பு. நீருக்கு நிலம் பாதுகாப்பு - அதுபோல மனைவிக்கு கணவன் பாதுகாப்பு! "அவர்கள் இனி இருவரல்ல ஒரே உடல்" (மத். 19: 6) என்று கணவன் மனைவிக்கு இடையேயுள்ள ஒன்றிப்பை வேதாகமம் விளக்குகிறது. குடும்ப ஒழுக்கம் பற்றி திருநூலில் புனித பவுல் இவ்வாறு கூறுகின்றார். "திருமணமான பெண்களே, உங்கள கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும். திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள்" (கொலோ.3: 18- 21)

### பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் பொறுப்பு

ஒரு குழந்தையின் முதல் பள்ளி தாயின் மடி. அதன் முதல் ஆசிரியர் பெற்றோர். ஒரு தகப்பன் என்ன நினைக்கின்றான், "நான் குடிப்பேன், கூத்தாடுவேன், சண்டை பிடிப்பேன், மண்டை உடைப்பேன். ஆனால் என் மகன் மட்டும் வளர்ந்து நல்லவனாக வல்லவனாக வர வேண்டும்". ஒரு தாய் என்ன நினைக்கின்றாள், "நான் ஊரெல்லாம் திரிந்து ஆவலாதி அவதூறு பேசுவேன், சண்டைக் கப்பலாக வம்பளப்பேன், ஆனால் என் மகள் மட்டும் வளர்ந்து அடக்க ஒடுக்கமாக ஊரெல்லாம் போற்றும் உத்தமியாக வரவேண்டும்". இது எப்படிப்பட்ட எதிர்பார்ப்பாக இருக்க முடியும்? "பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனம்தளர்ந்து போவார்கள்". (கொலோ. 3: 18-21) "தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவுகட்டி வளர்த்து வாருங்கள்" (எபே. 6: 1-3).

கலைகளிலெல்லாம் மிகச்சிறந்த கலை பிள்ளைகளைச் சிறப்பான முறையில் வளர்க்கும் கலையே" என 3ம் சிங்கராயர் என்னும் திருத்தந்தை கூறினார். குடும்பம் ஓர் அச்சு. பிள்ளை அதன் வார்ப்பு. குடும்பம் ஒரு மரம். பிள்ளை அதன் கனி. எனவே குடும்ப சூழ்நிலையைப் பொறுத்துத்தான் பிள்ளைகளின் முன்னேற்றமும் பின்னேற்றமும் தங்கியுள்ளது.

பெற்றோர் எவ்வழி பிள்ளைகள் அவ்வழி! தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை! தந்தையானவர் ஒரு விளக்கின் அகலாகவும், தாய் அதில் உள்ள எண்ணையாகவும் இவர்களின் குழந்தைகள் எரியும் திரிகளாகவும் இருந்தால் அகல் விளக்கின் ஒளிபோல் குடும்பம் பிரகாசிக்கும் என பலஸ்தீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது.

### பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமை

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தோருக்கு இதுவே தகும்" (கொலோ. 3: 18- 21). "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. இதனால் நீ நலம் பெறுவாய். மண்ணுலகில் நீ நீடுழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி" (எபே. 6: 1-3). விழுதுகள் மரங்களைப் பாதுகாப்பதுபோல் பிள்ளைகள் பெற்றோரைப் பாதுகாக்க (விழுதாக) வேண்டும்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,**
**பதிப்பாசிரியர்**

## கலையருவியின் ஏற்பாட்டில் இடம்பெறும்
# பசாம் போட்டி

மன்னார் மறைமாவட்டச் சமுகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் ஏற்பாட்டில் பசாம் (வியாகுல பிரசங்கம்) பாடல் போட்டிகள் இடம்பெறவுள்ளன. நமது மண்ணின் தவக்கால பாரம்பரியப் பக்தி இலக்கியமான வியாகுல பிரசங்கத்தை அழியவிடாமல் பாதுகாக்கும் நோக்கோடும், இளம் தலைமுறையினரை இக்கலைகளில் ஆர்வம்கொள்ளச் செய்யும் நோக்கோடும் இந்தப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மற்றும் வளர்ந்தோருக்கான போட்டி என இரண்டு பிரிவாக இப்போட்டி இடம்பெறும்.

**முதலாம் பரிசு 6,000.00**
**இரண்டாம் பரிசு 4,000.00**
**மூன்றாம் பரிசு 2,000.00**

- இப்போட்டியில் ஆண் - பெண் ஆகிய இருபாலாரும் பங்கெடுக்கலாம்.
- போட்டியில் பங்கெடுக்க விரும்புகின்றவர்கள் மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை பங்குத்தந்தையின் கையெழுத்தோடு எமது நிலைய முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- மறைமாவட்ட மட்டத்தில் ஒரே போட்டியாக ஒரு இடத்தில் மட்டும் இது இடம்பெறும். மார்ச் 22ஆம் திகதி சனிக்கிழமை இப்போட்டிகள் முருங்கன் பங்கில் இடம்பெறும்.
- குரல் இனிமை, தெளிவு, சாரீரம், பக்தி உணர்வு போன்றவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

## மன்னார் மறைமாவட்டத்தில் குருக்களுக்கான பணி இடமாற்றங்கள்

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் சிலருக்கான பணி இடமாற்றங்கள் தொடர்பான அறிவிப்பை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு :

அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் -
ஆன்மீக இயக்குனர் சிறிய குருமடம், மன்னார்,
மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் பொறுப்பாளர்.
அருட்பணி. செ. இராஜநாயகம் - மறைமாவட்ட நிதியாளர்.
அருட்பணி. எ. டெனி கலிஸ்ரஸ் -
பங்குத்தந்தை, முத்தரிப்புத்துறை.
அருட்பணி. செ. தவராஜ் -
பங்குத்தந்தை, சிலாவத்துறை
(முள்ளிக்குளம் அடங்கலாக)
அருட்பணி. ஜே. ஜெஸ்லி ஜெகானந்தன் -
பங்குத்தந்தை, பம்பைமடு.

புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்கும் அருட்பணியாளர்களுக்கு வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.



## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2013

### மாசி

02 - மரியன்னை ஆலயம் - மன்னார்.
- காணிக்கை அன்னை - பாலைக்குழி, காத்தான்குளம்
- புனித செங்கோல மாதா - அரிப்பு
- காணிக்கை அன்னை ஆலயம் - சாம்பல் தோட்டம்
- வேளாங்கண்ணி ஆலயம் - படகு துறை
- காணிக்கை அன்னை ஆலயம் - துள்ளுகுடியிருப்பு

11 - லூர்து அன்னை ஆலயம் - முதலைகுத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை.
15 - தூய லூர்து அன்னை திருவிழா - மாந்தை
■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## பங்குகளில் சேகரிக்கப்பட்ட மறைபரப்பு ஞாயிறு நிதி விபரம்

(மன்னார் மறைமாவட்ட நிதியாளர் அருட்பணி. எஸ். அன்ரன் அவர்களின் அறிக்கையில் இருந்து)

| பங்கு | தொகை 2012 | தொகை 2013 |
|---|---|---|
| 1. சிலாவத்துறை | 61,336.00 | 75,000.00 |
| 2. வவுனியா | 291,000.00 | 236,205.00 |
| 3. அரிப்பு | 92,000.00 | 114,000.00 |
| 4. மன்னார் | 644,065.00 | 580,810.00 |
| 5. அளவக்கை | 53,200.00 | 70,200.00 |
| 6. பேசாலை | 415,400.00 | 536,410.00 |
| 7. பம்பைமடு | 14,506.00 | 32,993.00 |
| 8. தாழ்வுபாடு | 205,380.00 | 78,500.00 |
| 9. ஓமந்தை | 70,000.00 | 55,000.00 |
| 10. ஆட்காட்டிவெளி | 72,000.00 | 31,880.00 |
| 11. கற்கிடந்தகுளம் | 102,540.00 | 151,600.00 |
| 12. கீளியன்குடியிருப்பு | 50,000.00 | 55,000.00 |
| 13. தேவன்பிட்டி | 300,500.00 | 125,000.00 |
| 14. வேப்பங்குளம் | 135,000.00 | 100,000.00 |
| 15. கோமரசன்குளம் | 57,400.00 | 50,000.00 |
| 16. விடத்தல்தீவு | 62,768.00 | 80,000.00 |
| 17. இலுப்பைக்குளம் | 44,110.00 | 60,000.00 |
| 18. செட்டிகுளம் | 33,000.00 | 35,000.00 |
| 19. தச்சனாமருதமடு | 5,000.00 | 20,000.00 |
| 20. நானாட்டான் | 21,300.00 | 140,000.00 |
| 21. தலைமன்னார் | 113,963.00 | 115,250.00 |
| 22. அடம்பன் | 40,000.00 | 51,370.00 |
| 23. உயிலங்குளம் | 39,800.00 | 54,600.00 |
| 24. வஞ்சியன்குளம் | 28,000.00 | 38,700.00 |
| 25. வங்காலை | 107,350.00 | 226,000.00 |
| 26. மடு | 50,000.00 | 125,000.00 |
| 27. பண்டிவிரிச்சான் | 40,360.00 | 108,652.00 |
| 28. பள்ளிமுனை | 74,500.00 | 60,000.00 |
| 29. தோட்டவெளி | 200,190.00 | 247,000.00 |
| 30. குஞ்சுக்குளம் | 100,000.00 | 63,000.00 |
| 31. எழுத்தூர் | 100,000.00 | 101,500.00 |
| 32. முருங்கன் | 50,300.00 | 34,603.00 |
| 33. காத்தான்குளம் | 67,000.00 | 120,000.00 |
| 34. கனகராயன்குளம் | 7,200.00 | 2,500.00 |
| 35. அந்தோனியார்புரம் | | 130,000.00 |
| 36. சிறுக்கண்டல் | | 30,000.00 |
| மேதகு ஆயர் | | 55,220.00 |
| மொத்தம் | 3,749,168.00 | 4,186,791.00 |

## பூட்டான் நாடு சென்று திரும்பினார்
## எழுத்தாளர் எஸ்.ஏ. உதயன்



கடந்த டிசம்பர் மாதம் 17-21 வரையிலான நாட்களில் பூட்டான் தலைநகர் திம்புவில் தெற்காசிய நாடுகளில் (SAARA) கலாசார நிலையம் ஏற்பாடு செய்து நடத்திய தெற்காசிய நாவல் விழாவில், எழுத்தாளரும், நாவலாசிரியருமான எஸ். ஏ. உதயன் இலங்கை சார்பாகக் கலந்துகொண்டார்.

இவரோடு இவ்விலக்கியப் பயணத்தில் கலந்துகொண்ட இலங்கையைச் சேர்ந்த ஐந்து (5) எழுத்தாளர்களில் ஒரேயொரு தமிழ் எழுத்தாளராகவும், இலங்கைத்தமிழர்கள் சார்பாகவும், பேசாலையைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. உதயன் கலந்துகொண்டமை குறித்து 'மன்னா' பெருமைகொள்கிறது.

தெற்காசிய நாடுகள் அமையத்தின் உறுப்புரிமை நாடுகளில் இருந்து மேல்நிலை நாவலாசிரியர்கள் கலந்துகொண்டு தத்தமது நாடுகளின் எழுத்து வண்மை, மற்றும் வெவ்வேறு பண்பாடுகள் பற்றியும், கலாசாரங்கள் பற்றியும் விரிவான கருத்துரைகளும், தெற்காசிய நாடுகளின் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் எஸ். ஏ. உதயன் 'இலங்கையில் எழுந்த தமிழ் நாவல்களும், எழுத்தாளர்களும்' என்ற தலைப்பிலான கட்டுரையைச் சமர்ப்பித்து பாராட்டுக்கள் பெற்றுக்கொண்டார்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## பிழை திருத்தம்

சென்ற இதழில் (ஜனவரி 2014) மன்னார் மாவட்டத்தில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்கள் என்ற தலைப்பில் (2ம் பக்கம்) இடம்பெற்ற தகவல்களில் மன்/ முருங்கன் ம.வி சேர்ந்த பெனாண்டோ சிரோன் றொட்கே - 2A.B (2ஆம் இடம்) என்ற மாணவன் தவறுதலாக மன்/புனித வளனார் றோ.க.த.வி என்று இடம்பெற்றுள்ளது. இத் தவறுதலுக்கு வருந்துகின்றோம். (ப - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு இலங்கை அரசு எதையும் கொடுக்காது!

## மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு நிகழ்வில் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவிப்பு

தமிழர்களுக்கு எதையும் இலங்கை அரசு கொடுக்காது என்பது எமக்கு நன்றாகத் தெரியும் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார். வவுனியா நகர மண்டபத்தில் நடைபெற்ற மாமனிதர் குமார் பொனம்பலத்தின் 14ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்காக பணியாற்றிய குமார் பொன்னம்பலம் பால் பொங்கி வரும்போது பானை உடைந்ததுபோல் அவர் தனது பணியை ஆர்வத்துடன் செய்யவேண்டிய நேரத்தில் எங்களைவிட்டுப் பிரிந்துள்ளார். எனினும் அவர் ஆற்றியவைகளும் அவருடைய சிந்தனைப் போக்குகளும் எம்மை உற்சாகப்படுத்தி தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளுக்காகப் பாடுபடுமாறு தூண்டிவிட்டுள்ளது. இவரது தந்தையாரும் சிறந்த அரசியல்வாதியாக சட்டமேதையாக இருந்தவர்.

தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்ந்த இனம். ஐம்பதுக்கு ஐம்பது என்ற உரிமை பெற்றுக்கொள்ள வேண்டும். உரிமைத்தாகம் எல்லோருக்கும் உள்ளதைப்போலவே தமிழ் மக்களுக்கும் உள்ளது. தமிழ் இனம் ஒரு தேசியம். அந்த உரிமையில் அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் அவர்கள் தம்மை ஆள்வதற்கான கோரிக்கையை வைப்பதற்கான உரிமை இருக்கின்றது என்பதனை முன்வைத்து செயற்பட்டவர் ஜி. ஜி. பொன்னம்பலம் என ஆயர் தெரிவித்தார்.

## பெத்தலேகம் தேவாலயத்தில் ஜனாதிபதியும் பாரியாரும் வழிபாடு

பாலஸ்தீனத்துக்கான விஜயத்தினை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முதற்பெண்மனியான ஷிரந்தி ராஜபக்ஷவும் இயேசுக்கிறிஸ்து அவதரித்த பெத்தலகேமின் நெற்றுவிட்டி தேவாலயத்திற்குச் சென்று வழிபட்டனர்.

ஜெருசலேம் கிரேக்க ஒத்தொடொக்ஸ் சபையின் தலைவர் மூன்றாவது தியோபிலஸ் கீழைத்தேச நத்தார் பண்டிகைக்கு முதல் நாளான (ஜனவரி 6ஆம் திகதி) திங்கட் கிழமை இராப்போசன விருந்தொன்றை நடத்தினார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ முதற்பெண்மணி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ, பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், பிரதமர் ராமி ஹம்டெல்லா மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்கள் பலர் இந்த இராப்போசன விருந்தில் கலந்துகொண்டனர்.

பெத்தலகேம் நகரில் இயேசு பிறந்த தேவாலயம் இயேசு அவதரித்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேவாலயம் ஜனவரி 7ஆம் திகதி கீழைத்தேச ஒத்தொடொக்ஸ் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகிறது. மேலைத்தேச கிறிஸ்தவ மரபுகளின் பிரகாரம் நத்தார் தினம் டிசம்பர் 25ஆம் திகதி கொண்டாடப்பட்டாலும் கீழைத்தேச ஒத்தொடொக்ஸ் கிறிஸ்தவ பிரிவுகள் பல இயேசுநாதரின் பிறப்பை ஜனவரி 7ஆம் திகதி கொண்டாடுகின்றன.



### திருச்சிலுவைக் கன்னியர்களின் முன்னாள் முதல்வர்

## உலகளாவிய அமைப்பின் ஆலோசகராக நியமனம்

திருச்சிலுவைக் கன்னியர் சபையின் முன்னாள் மாகாணத்தலைவி அருட்சகோதரி வைத்திய கலாநிதி இமாக்குலட் ஜோசப் அவர்கள் உலகளாவிய ரீதியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபைத் தலைவியின் ஆலோசகர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இவர் கடந்த ஒன்பது ஆண்டுகளாக இலங்கையின் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவியாகப் பணியாற்றினார். இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் இவர் சுவிற்சிலாந்து நாட்டில் இயங்கும் இச்சபையின் தலைமையகத்தில் தொடரவிருக்கும் சேவைக்காக இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

**திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகள்**

## மாகாண அமைச்சருடன் கிறிஸ்தவ போதகர்கள் சந்திப்பு

மன்னார் மாவட்ட கிறிஸ்தவசபைப் போதகர்களுக்கும் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கடந்த 20.12.2014 அன்று மன்னார் சாந்திபுரத்தில் அமைந்துள்ள மகிமையின் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது தங்களது பிரச்சினைகள் தொடர்பாக போதகர்கள் தமது கருத்துக்களை அமைச்சரிடம் முன்வைத்தனர். இதன்போது அமைச்சர் தமது உரையில் மதங்களினூடாக மக்களை சமாதானமாக வாழவைக்க வேண்டும். அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் ஒற்றுமையாக வாழும் நிலை நிச்சயமாக உருவாகும் என்று தெரிவித்தார். அமைச்சர் டெனிஸ்வரன் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் மன்னாரில் உள்ள சகல அமைப்பினரையும் சந்தித்து அங்கு நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜோசப் எம்.பி.யை படுகொலை செய்தவர்கள் கூலிப்படையினரே!

### மட்டக்களப்பு ஆயர் யோசப் பொன்னையா திட்டவட்டம்

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம். பி ஜோசப் பரராஜசிங்கத்தினை ஒரு கூலிப்படைதான் படுகொலை செய்தது என்பதனை நான் திட்டவட்டமாகக் கூறுகின்றேன். அதனால்தான் இன்றுவரை அதற்கான விசாரனைகள் முற்றுப்பெறாமல் உள்ளன. இத்தினத்திலே இப்படுகொலை யாரால் செய்யப்பட்டது எதற்காக செய்யப்பட்டது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தல் விடுகின்றேன் என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் எட்டாவது ஆண்டு நினைவு தினம் கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் திகதி மாலை மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்றபோது அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

## நாடு திரும்பியதும் கனடா அரசுக்கு இலங்கை குறித்து அழுத்தம் கொடுப்பேன்

### ராதிகா சிற்சபேன் கூறியதாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் செபமாலை அடிகளார்



இலங்கையிலுள்ள பிரச்சினைகளை உங்களைப் போன்றோர் சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசென்று அதன் மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தாங்கள் கனடா நாட்டின் எம்.பி. யான ராதிகா சிற்சபேசனிடம் கோரியதாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணியாளர் இமானுவேல் செபமாலை கூறினார்.

ராதிகா சிற்சபேசன் மன்னாருக்கு விஜயம் செய்தபோதே அவரிடம் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

செபமாலை அடிகளார் மேலும் கூறியதாவது, கனடா கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பில் எடுத்த நிலைப்பாட்டுக்கு தங்களைப் போன்றோர் கொடுத்த அழுத்தமும் ஒரு காரணம் என ராதிகா எம்மிடம் கூறினார். தான் கனடாவிற்கு திரும்பிச் சென்ற பின்னர் அங்குள்ள அரசுக்கு மீண்டும் இலங்கை விடயம் குறித்து அழுத்தம் கொடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனே ராதிகா சிற்சபேசனை மன்னார் பகுதிக்கு அழைத்து வந்தார். அவரது பயணத்தின்போது பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்போ அல்லது அவர்களால் எவ்வித இடையூறுகளோ ஏற்படவில்லை. மன்னார் பகுதியில் காணாமல்போனவர்களின் பெற்றோர்களை ராதிகா சந்தித்து பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இலங்கையில் யுத்தம் முடிந்து பல ஆண்டுகளாகியும் இன்னமும் எந்தத் தீர்வும் கிட்டவில்லை. உள்நாட்டில் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது எனவும் ராதிகா எம்மிடம் தெரிவித்தார் என செபமாலை அடிகளார் குறிப்பிட்டார்.

## பாப்பரசர் மே மாதத்தில் புனித தேசத்திற்கு விஜயம்

பாப்பரசர் பிரான்சிஸ் புனித தேசத்திற்கான முதல் விஜயத்தை எதிர்வரும் மே 24 தொடக்கம் 26ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ளார். இதன்போது பாப்பரசர் ஜெருசலேம் மேற்குக் கரையின் பெத்லகேம் மற்றும் ஜோர்தான் தலைநகர் அம்மானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பாப்பரசருக்கு புனித தேசத்திற்கு வரும்படி இஸ்ரேல் ஜனாதிபதி ஷிமொன் பரிஸ் மற்றும் பலஸ்தீன நிர்வாகத்தின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பாப்பரசரின் விஜயத்தின்போது அவர் இஸ்ரேல், பலஸ்தீன அமைதி பேச்சுவார்த்தைக்கு ஊக்குவிப்பு வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தரணிக்குளம் புதிய பங்காகப் பிரகடனம்

மன்னார் மறைமாவட்டத்தின் 37வது புதிய பங்காக வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள தரணிக்குளம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது பம்பைமடுப் பங்கில் இருந்து பிரிக்கப்பட்டு புதிய பங்காக மாற்றப்பட்டுள்ளது. தரணிக்குளம் முத். யோசவ்வாஸ் ஆலயத்தை தாய் ஆலயமாகக் கொண்டு இப்பங்கு இயங்கும். சுந்தரபுரம் புனித சவேரியார் ஆலயம், மறவன்குளம் புனித செபஸ்தியார் ஆலயம், கல்மடு புனித அந்தோனியார் ஆலயம், மணிபுரம் புனித பத்திமாமாதா ஆலயம், கோதண்டர் நோச்சிக்குளம் புனித சதாசகாய மாதா ஆலயம், பூம்புகார் புனித சூசையப்பர் ஆலயம் ஆகிய ஏழு ஆலயங்களை உள்ளடக்கியதாக இப்புதிய பங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பங்கின் முதல் பங்குத்தந்தையாக கப்புச்சீன் துறவற சபையைச் சேர்ந்த அருட்திரு. பீற்றர் அமல் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புதிய பங்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. பம்பைமடுப் பங்குத்தந்தை டெனி கலிஸ்ரஸ் இதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## தேவாலயத் தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை அவசியம்

தென்னிலங்கையின் ஹிக்கடுவப் பகுதியில் உள்ள மூன்று கிறிஸ்தவத் தேவாலயங்கள்மீது பௌத்த பிக்குகள் தலைமை வகித்த குண்டர் குழுக்களால் அண்மையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வணக்க ஸ்தலங்கள்மீது நடத்தப்படும் தாக்குதல்களின் வரிசையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தற்போது இலக்காகியுள்ளன. கடந்த காலங்களில் பள்ளிவாசல்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள்மீது இதுவரை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

தாக்குதல் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் மூலம் அவர்களைச் சுலபமாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. அப்படி இருந்தும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## இரசாயனக் குண்டுதாக்குதல்கள் இறுதிப்போரில் நடத்தப்படவில்லை

### வடக்கு ஆயர்களின் கருத்தை நிராகரிக்கின்றது இராணுவம்

இறுதிக்கட்ட போரின்போது இரசாயணக் குண்டுகளையோ அல்லது கொத்துக் குண்டுகளையோ எதிரிகள்மீதான தாக்குதலுக்குப் படையினர் பயன்படுத்தவில்லை என்று அறிவித்துள்ள இலங்கை இராணுவம், இது தொடர்பில் மன்னார் மற்றும் யாழ். ஆயர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அடிப்படையற்றவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மேற்கண்டவாறு கூறினார். இறுதிப்போரில் மட்டுமல்ல, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை இராணுவம் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. சம்பிரதாயங்களுக்கு உட்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தியே எதிரிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. யு.வி.எவ் வினால் அங்கீகரிக்கப்பட்ட குண்டுகளையே விமானப்படையினர் பயன்படுத்தினர். எதிரிகளின் இருப்பிடங்களைக் குறிவைத்து மாத்திரமே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனவே இரசாயனக் குண்டுகள், கொத்துக் குண்டுகள் போன்ற தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டை நாம் நிராகரிக்கின்றோம் என்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் மனித மாண்பு

சகோதரர். செ. தொபியாஸ் CMSF, பிரான்சிக்கன் சகோதரர், மாத்தளை



படைப்பின் சிகரம் மனிதன் என்பது நாம் அறிந்த உண்மை. ஆனால் அதில் ஒரு மாற்றம் உள்ளது. மற்றத் தாவரம் விலங்கினத்தின் தன்னிச்சையான செயல்பாடு மனிதனுக்கு அளிக்கப்படவில்லை. வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையை நோக்கி நடக்கும்போதெல்லாம் மனிதன் பிறரைச் சார்ந்தவனாகவே உள்ளான்.

ஒரு விதை மண்ணில் போடப்படும்போது எந்தவித உருவாக்கு சக்தியுமின்றி அது தானே முளைத்துப் பலன் கொடுக்கின்றது. அவ்வாறே விலங்குகளும். ஆனால் மனிதன் பிறக்கும்போதே ஒரு முழுமை பெறாத நிலையில்தான் பிறக்கிறான். ஏனென்றல் அவன் முழுமை பெற அடுத்தவர் தேவை. மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல என்று கருதி அவனது சாயலிலே அவனுக்குத் துணையாக இருக்கக்கூடிய துணைவியைப் படைத்தார் கடவுள். மனிதன் இணைந்து வாழ அவனை ஒரு குடும்பமாக உருவாக்கினார். ஒருவர் ஒருவரோடு சமுதாயத்தில் சார்ந்து வாழச் செய்தார். இறைவன் ஆசீர் வழங்கி, "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்று வலியுறுத்தி அவர்களுடைய அன்பின் அடையாளமாகக் குழந்தையையும் பெற்று வாழ அழைத்தார். இவ்வாறு மனிதன் ஒரு குடும்பமாகச் சேர்ந்து, மனித மாண்புடன் சமுதாயத்தில் வாழ்வதே இறைவனது படைப்பின் திட்டம்.

கடவுள் நமக்காக வைத்திருக்கும் திட்டத்தை அறியாத நிலையில் - அதாவது நாம் முழுமை பெறாத நிலையில் - இப்பூமியில் நாம் அடி எடுத்து வைத்தோம் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றோம். இது ஒருவிதமான இகழ்ச்சியை எம்முள் உருவாக்குவதுபோல் தோன்றலாம். ஆனால் கடவுள் நம்மைச் சிறுமைப்படுத்த விரும்பவில்லை. மனிதப் படைப்பின் முலம் மகத்துவத்தையும், எமது மாண்பையும் வெளிப்படுத்துகிறார். மற்ற உயிரினங்கள் தன்னிச்சையாக சுதந்திரமாக வளர்ந்தாலும் அவைகள் நிறைவை நோக்கி வாழ்வதில்லை, அவைகள் எந்தவித உறவுமின்றித்தான் வளர்கின்றன. பிறரோடு எந்தவித உறவுமின்றி வாழும்போது நாமும் சில நேரங்களில் மிருகங்களைப்போலதான் நடக்கிறோம். 'நான்' என்ற தற்பெருமையால் நாம் நிறைந்திருக்கும்போது அடுத்தவரோடு உறவுகொள்ள முடிவதில்லை. நம்மைத் தாண்டி வேறு யாரையும் பார்க்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. மாறாக நாம் கடவுளுடைய திட்டத்தை உய்த்துணரக்கசுடியவர்களாக இருந்தால் நமக்கு அப்பாற்பட்ட உண்மை நிலையை அதாவது கடவுள் எனக்குள்ளும் மற்றவரிலும் உள்ளார் என்ற மெய்மையை உணரமுடியும். அப்போதுதான் மற்றவர்களோடு உள்ள உறவில் உருப்பெற்று அவர்கள் கடவுளது கொடை என்ற தன்மையை குடும்பங்களில் அனுபவிக்க முடியும்.

குடும்பங்களில் மனித மாண்பு மீறல்கள் என்பது உடலில் ஏற்பட்ட உள்மனக் காயங்களின் தழும்புகள்போல குணமாக்கப்பட வேண்டியவை; மன்னிக்கப்படவேண்டியவை.

சாதி, மொழி, மதம், பாலினம், நிறம், ஏழை - பணக்கார ஏற்றத்தாழ்வுகள், அதிகார வர்க்கத்தின் ஆணவத்தன்மை, தாழ்வுமனப்பான்மை போன்ற எண்ணற்ற பிரிவுகளையும் பேதங்களையும் கொண்ட நிலையை உணர்ந்துகொண்ட எமது தாய்த் திருச்சபை விழிப்புணர்வு பெற்றாள். நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து 2014ம் ஆண்டை "மனித மாண்பும் குடும்பமும்" எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. "மனித மாண்பைக் குடும்பங்களில் பேணுவோம்" என்று அழைப்புவிடுத்துள்ளது. இது காலத்தின் தேவையே.

அச்சம் பயம் போன்ற அடிமை நிலை இருக்கும் உள்ளத்திலும், சமூகத்திலும் ஏன் குடும்பத்திலும் அமைதி நிலைப்பதில்லை. அன்று இயேசுவின் பிறப்பின்போது வானதூதர்கள் பாடிய புகழ் பாடல் "அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி..... உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக! (லூக். 2:8-14). பயந்த மனநிலையில் "யூதர்களுக்கு அஞ்சி சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள்" (யோவான் 20:19). அன்று தாழிட்டிருந்த சீடர்கள் அமைதியை இழந்திருந்தார்கள். தங்கள் வாழ்வில் இயேசு தங்களோடு இல்லை என்ற உணர்வு அவர்கள் அமைதியைக் கெடுத்திருக்கும்.

இதேபோல் இன்றும் எமது குடும்பங்களில் மனித மாண்பு அற்ற நிலையில் மூடிய கதவுகளோடு வாழ்கிறோம். "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" (யோவான் 20:19-23) என்ற வார்த்தை எம் ஒவ்வொரு குடும்பங்களிலும் ஒலிக்க வேண்டும்.

குடும்பம் ஒரு "இல்லத் திருச்சபை - குட்டித் திருச்சபை" என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. அதாவது திருச்சபையின் போதனைகளும், திருச்சபையின் செயல்களும் ஒவ்வொரு குடும்பத்திலும் பிரதிபலிக்க வேண்டும். இல்லத்திருச்சபை என அழைக்கப்படக்கூடுமான குடும்பத்தில் பெற்றோர் தமது சொல்லாலும் முன்மாதிரியாலும் தம் பிள்ளைகளுக்கு முதன் முதலில் நம்பிக்கையில் போதிப்பார்களாக" (2ம் வத்திக்கான் சங்கம்). இதையே திருக்குறள் 45 இல்வாழ்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்கையில் பண்பும் பயனும் அதுவேயாகும். எனவே நற் பண்புகளை வளர்த்து குடும்பத்தில் மனித மாண்பைக் காப்போம். இறையரசைக் கட்டியெழுப்புவோம். புதுயுகம் காண்போம்.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்.......

### முள்ளுக்கரண்டியை பயன்படுத்த தெரியாத கணவர் விவாகரத்துக் கோருகிறார் மனைவி

தனது கணவர் பட்டாணிகளை உண்பதற்கு முள்ளுக்கரண்டிகளுக்கு பதிலாக பாணைப் பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டி மனைவி விவாகரத்துக் கோரிய விசித்திர சம்பவம் குவைத் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

திருமணம் செய்து ஒரு வாரம் ஆகிய நிலையில் தனது கணவர் பட்டாணிகளை எடுத்து உண்பதற்கு முள்ளுக்கரண்டியை பயன்படுத்தாது பாணைப் பயன்படுத்துவதைக் கண்டறிந்த மனைவி சினமடைந்து விவாகரத்துக் கோரி வழக்குத்தாக்கல் செய்துள்ளார். தனது கணவரின் முறைகேடான உணவு மேசைப் பழக்கத்தால் தான் பெரிதும் அதிர்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குவைத்தில் ஒரு நாளுக்கு சராசரியாக 18 விவாகரத்து வழக்குகள் இடம்பெறுகின்றன. அதேசமயம் வருடமொன்றுக்கு 6672 விவாகரத்து வழக்குகள் பதிவாகின்றன

### குளிக்காமல் 60ஆண்டுகள் சாதனை படைத்த முதியவர்

ஈரான் நாட்டை சேர்ந்த அமோவ் ஹாஜி என்ற முதியவர் 60 ஆண்டுகளாக குளிக்காமல் சாதனை படைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறார். தினம்தோறும் குளிக்காவிட்டால் எதையோ பறிகொடுத்தது போன்று அனைவரும் உணர்வார்கள்.

உலகமே இவ்வாறு சுழன்றுகொண்டிருக்க, ஈரானைச் சேர்ந்த 80 வயது முதியவர் அமோவ் ஹாஜி, கடந்த 60 ஆண்டுகளாக குளிக்காமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

இளவயதில் தனது வாழ்க்கையில் சந்தித்த கசப்பான அனுபவங்களை அடுத்து உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து தன்னை தனிமைப்படுத்திக்கொண்ட இவர் இந்த உலக வாழ்கையையே வெறுத்து பற்றற்ற துறவியின் நிலையில் வாழ்ந்து வருகிறார். இவரை மடக்கிப் பிடித்து குளிக்க வைக்க ஊர்க்காரர்கள் எவ்வளவோ முயன்றும் பயனில்லாமல் போனது.

### 2013இல் சிறை சென்றவர்கள் ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர்

2013ஆம் ஆண்டில் மொத்தமாக ஒரு இலட்சத்து 27 ஆயிரம் பேர் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவர்களில் 29 ஆயிரத்து 826 பேர் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். ஏனைய 91 ஆயிரத்து 494 பேர் வழக்குத் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள். இவர்களுள் 6 ஆயிரத்து 157 பேர் பெண்கள். தண்டனை விதிக்கப்பட்ட பெண்களின் தொகை 878.

வருடாந்தம் சிறைகளுக்கு வருபவர்களில் 70 சதவீதமானவர்கள் நிரபராதிகள். 30 சதவீதமானோர் மட்டுமே தண்டனை பெறுகிறார்கள் என சிறைச்சாலைத் தலைமையகத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### 71 ஊடகவியலாளர்கள் சாவு

2013ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 71 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 20 சதவீதம் குறைவானதாகும் என்று கூறப்படுகின்றது.

உயிரிழப்புகள் குறைவடைந்துள்ளபோதும் அவர்களது பணிகள் தொடர்பாக தாக்கப்பட்ட, மிரட்டப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்றும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை 826 ஆகவும், மிரட்டப்பட்ட மற்றும் தாக்குதலுக்கு உள்ளான செய்தியாளர்களின் எண்ணிக்கை 87 ஆகவும், அவர்களது நாடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டவர்கள் 77 ஆகவும் ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் 6 ஆகவும் உள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

### இலங்கைச் சிறைகளில் 323 வெளிநாட்டவர்கள்

இலங்கைச் சிறைகளில் தற்போது 323 வெளிநாட்டவர்கள் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 306 ஆண் கைதிகளும் 17 பெண் கைதிகளும் உள்ளடங்குகின்றனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் குலதுங்க தெரிவித்துள்ளார்.

### பாவனைக் குதவாத 2000 மூட்டை சீனி மீட்பு

மட்டக்குளியிலுள்ள களஞ்சியசாலை யொன்றிலிருந்து ஒரு கோடி ரூபா மதிப்புள்ள 2000 மூட்டை பாவனைக்குதவாத சீனி கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கொழும்புப் பகுதிக்கான புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. ஜசூர் தெரிவித்தார்.

### மன்னார் வீதி தண்டவாளங்கள் திருட்டு

மதவாச்சிக்கும் தலைமன்னாருக்கும் இடையே நிர்மாணிக்கப்பட்டு வரும் ரயில் தண்டவாளங்கள் சில திருடப்பட்டுள்ளன. சுமார் 150 மீற்றர் நீளமான ரயில் தண்டவாளங்கள் பல இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும் இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் மதவாச்சி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

### 300,000 டொலரை மீள ஒப்படைத்த சாரதி

தனது வாடகைக் காரில் கண்டெடுத்த 300,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை அந்தக்காரின் சாரதி நேர்மையுடன் ஒப்படைத்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

ஜெரார்டோ கம்போவா என்ற சாரதியே இவ்வாறு தனது காரின் பின்பக்கத்தில் பையொன்றில் 6 கட்டுகளாக வைக்கப்பட்டிருந்த மேற்படி பணத்தை கண்டெடுத்து ஒப்படைத்துள்ளார். அவர் 'யெலோ செக்கர் ஸ்டார்' என்ற வாடகைக் கார் கம்பெனியில் கடந்த 13 வருடங்களாக சேவையாற்றி வருகிறார்.

இந்நிலையில் பணத்தின் உரிமையாளர் ஜெரார்டோ கம்போவாவை பாராட்டி அவருக்கு 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை சன்மானமாக வழங்கியுள்ளார்.

### உலக வரலாற்றில் முதல் முறையாக தமிழ் மாணவி விண்வெளி செல்கிறார்

உலக வரலாற்றில் முதல் தடவையாகத் தமிழ் மாணவியொருவர் விண்வெளிக்குச் செல்லவுள்ளார். இவரைப் பிரிட்டன் விண்வெளி ஆராய்ச்சி மையம் விண்வெளிக்கு அனுப்பத் தேர்வு செய்துள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

சிவேன் ஞான குலேந்திரன் என்ற மாணவியே விண்வெளிக்குச் செல்லத் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டனில் பல மாணவர்கள் விண்வெளி தொடர்பாகக் கற்று வருகிறார்கள். செயற்கைக் கோளை விண்வெளிக்கு ஏவுவது, விண்வெளியில் இருந்து நில அளவை செய்வது எனப் பல்வேறு துறைகளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றார்கள்.

இவர்களில் மிகவும் திறமைமிக்க இரு மாணவர்களை விண்வெளிக்கு அனுப்ப பிரிட்டிஷ் விண்வெளி ஆராய்ச்சி மையம் முடிவுசெய்துள்ளது. இதில் மிகத் திறமையாக சித்தியடைந்துள்ளார் பிரிட்டனில் வசிக்கும் தமிழ் மாணவியான சிவேன் ஞான குலேந்திரன். இந்த மாணவி நுண்ணுயிர்களைப் பற்றி நன்கு கற்றுத் திறமை பெற்றிருக்கிறார். அத்தோடு இவர், விண்வெணி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருவதாகவும் பி.பி.சி. தெரிவித்துள்ளது.

### தெலுங்கானா மாநிலம் உதயத்துக்கு காரணமான சோனியாவிற்கு ஆலயம்

தெலுங்கானா மாநிலம் அமைய நடவடிக்கை எடுத்ததற்காக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு ஆந்திராவில் கோயில் கட்டப்பட்டு வருகிறது.

விஜயவாடா பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான சங்கர் ராவ் என்பவர் தமது நிலத்தில் இந்தக் கோயிலைகட்டி வருகிறார். இதற்காக தெலுங்கு தாய் வடிவில் சோனியா காந்தியின் வெண்கல சிலை ஒன்றையும் அவர் அமைத்துள்ளார்.

தனி மாநிலம் அமைக்கப்பட வேண்டுமெனப் பல ஆண்டுகளாகக் கோரிக்கை இருந்தபோதிலும், அதனை சோனியா காந்தியே நிறைவேற்றியிருப்பதாக சங்கர் ராவ் தெரிவித்துள்ளார். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சோனியா காந்தியை கடவுளாக கருதி வழிப்டுவதாகவும் சங்கர் ராவ் கூறியுள்ளார். விஜயவாடாவிலுள்ள சோனியா காந்தி சிலையை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

இதனிடையே சோனியா காந்திக்கு கோயில் அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள பா.ஜ.க. சோனியா காந்தியை வழிபட நினைப்பது, தெலுங்கானா மாநிலத்திற்காக உயிர்த்தியாகம் செய்த ஏராளமான இளைஞர்களை அவமதிப்பது போன்றது என்று கூறியுள்ளது.

### மதுவுக்கு எதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபடும் சிறுமி

மதுவுக்கு எதிராக மதுரையில் இருந்து இன்னொரு சிறுமியான (10 வயது) ஜோதி மணிபிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார், மதுரை இஸ்மாயில் புரத்தைச் சேர்ந்த ஜோதிமணி, நான்காம் வகுப்புபடிக்கிறார். மதுக்கடைகளை மூடக்கோரி, கலெக்டர் அலுவலகம் முன்பு உண்ணா விரதம் இருந்தார் இந்தச் சிறுமி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# போர்க்குற்ற ஆதாரங்கள் முற்றிலும் உண்மையே! முடியுமானால் அவற்றைப் பொய் என்று நிரூபியுங்கள்!

## சிங்களக் கடும்போக்கு அமைப்புகளுக்கு மன்னார் ஆயர் சவால்



அமெரிக்க போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப்பிடம் கையளிக்கப்பட்ட ஆதாரங்களை முடிந்தால் சிங்களக் கடும்போக்கு அமைப்புக்கள் பொய் என்று நிரூபிக்கட்டும் என்று சவால் விடுத்துள்ள மன்னார் ஆயர், அவ்வாறு செய்த பின்னர் எங்களைக் கைதுசெய்வது தொடர்பில் சிந்திக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். நாங்கள் பொய் சொல்லவேண்டிய எந்த அவசியமும் இல்லை என்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் குறிப்பிட்டார்.

**ஆதாரங்கள் கையளிப்பு**

யாழ்ப்பாணத்துக்கு கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி அமெரிக்க ராஜாங்க திணைக்கள விசேட போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் வந்திருந்தார். அவருடன் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோர் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர். இறுதிக்கட்டப் போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் கொத்துக்குண்டுகள், இரசாயணக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு போர்க்குற்ற ஆதாரங்கள் இந்தச்சந்திப்பில் ஆயர்களால் ஸ்ரீபன் ராப்பிடம் கையளிக்கப்பட்டன.

**பொய்க் குற்றச்சாட்டுகள்**

அரசின்மீது பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவரும் மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்களை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும். இவர்கள் இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்ததாக பொய்யான தகவல்களை வழங்கியுள்ளனர். இதனாலேயே ஸ்ரீபன் ராப் இலங்கைமீது சர்வதேச விசாரணை வேண்டுமென்று தெரிவித்துள்ளார். எனவே பொய்யான தகவல்களை வழங்கிய இரு ஆயர்களையும் கைதுசெய்ய வேண்டுமென்று இராவண பலய என்ற சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளது.

**நிரூபியுங்கள் பார்க்கலாம்**

இது தொடர்பில் மன்னார் ஆயரை உதயன் பத்திரிகை தொடர்பு கொண்டு கேட்டபோது, நாங்கள் கொடுத்த ஆதாரங்களை முடிந்தால் பொய் என்று இவர்கள் நிரூபிக்கட்டும். அவ்வாறு செய்த பின்னரே எங்களைக் கைது செய்வது தொடர்பில் கதைக்கமுடியும். எங்களுக்கு பொய்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இறுதிகட்டப்போரில் சிக்குண்ட மக்கள், பங்குத்தந்தையர்கள் எல்லோருடனும் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் எங்களுக்கு பல தகவல்களை வழங்கியுள்ளனர். அதனையே நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். அந்த மக்களிடம் வெளியாட்கள் சென்று தகவல் பெறமுடியாது. அவர்கள் எம்மை நம்பியே வெளிப்படுத்தியுள்ளனர்.

இறுதிப்போரில் நடந்த உண்மைகளை பலர் இரகசியமாக ஐ.நாவுக்கு அனுப்பிவைத்துள்ளனர். நாங்கள் பகிரங்கமாகச் சொன்னதால் எங்களை எதிர்க்கின்றனர் என்றார் அவர்.

# காத்தான்குளம் பங்கின் முக்கிய நிகழ்வுகள்

**ஆண்டு விழா**

கடந்த 07.12.2013 அன்று காத்தான்குளம் பங்கின் பாலையடிப் புதுக்குளம் J.R.S கிராம ஒன்றியத்தின் 10வது ஆண்டு நிறைவும், ஒளிவிழா நிகழ்வும் மிகவும் சிறப்பான முறையில் பாலையடிப்புதுக்குளம் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பங்குத்தந்தை அருட்பணி வசந்தக்குமார் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.



**இசை நிகழ்ச்சி**

புதிய ஆண்டில் இலைமறைகாயாய் உள்ள இளைஞர்களை வெளிக்கொணரும் முகமாக கடந்த 02.01.2014 அன்று மாலை 6.00 மணிக்கு பாலையடிப்புதுக்குளம் புனித செபமாலை மாதா ஆலய முன்றலில் அருட்பணி. ஜோண்சன் (அமதி) அடிகளாரின் வழிநடத்தலில் பங்குத்தந்தை அருட்பணி. செ. வசந்தக்குமார் தலைமையில் இசைக் கச்சேரி எழுச்சிகரமாக நடைபெற்றது. உள்ளூர் பாடகர்களுக்குக் களம் அமைத்துக்கொடுப்பதாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.



**முதியோர் கௌரவிப்பு**

கடந்த 14.01.2014 தைப்பொங்கல் தினத்தன்று பங்கிலுள்ள 90 வயதுக்கு மேற்பட்டோர் காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்ற பொங்கல் திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தையால் அன்பளிப்பு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

## அடம்பன் பங்கில் யோசப்வாஸ் திருவிழா

கடந்த ஜனவரி 16ஆம் திகதி புனித யோசப்வாஸ் திருவிழா அன்று அடம்பன் சந்தியில் அமைந்துள்ள அவரது சுரூபத்திற்கு முன்னால் அடம்பன் பங்குச் சபையினரும், இளைஞர் ஒன்றியமும் இணைந்து பங்குத்தந்தை நியூட்டன் அடிகளாரின் அனுசரணையுடன் மாலை 5.00 மணியளவில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.


இதில் பெருமளவு மக்கள் கலந்து சிறப்பித்தார்கள். பங்குத்தந்தை தமது மறையுரையில் புனிதரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் ஆற்றிய தொண்டையும் வெகு துல்லியமாக மக்களுக்கு எடுத்துக் கூறினார். திருப்பலியில் கலந்துகொண்ட மக்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு தினம் – 2014

வங்காலை மக்களுக்காக 1985இல் உயிர்நீத்த அருட்பணி. மேரி பஸ்ரியனின் 29வது நினைவுதினம் கடந்த 06.01.2014இல் வங்காலை மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நினைவுதின வைபவத்தில் அருட்பணி. வரதன் குலாஸ் அடிகளாரும் திருப்பலியில் பங்குகொண்டு "மேரி. பஸ்ரியன் அடிகளாரும் வங்காலை மக்களும்" என்ற தொனிப்பொருளில் மறையுரை ஆற்றினார்.

அன்றைய தினம் மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவாக வங்காலை மக்கள் 150 பேரால் இரத்ததானம் வழங்கப்பட்டது. இந்த இரத்தம் மன்னார் பொது வைத்தியசாலை வைத்தியர்களிடம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. குறித்த நேரத்திற்குள் இந்தச் செயல் நடைபெற்றமையால் மேலும் பலர் இரத்ததானம் செய்யமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வுகள் தொடர்பான சில படங்களைக் கீழே காணலாம்.

- திருமதி பெப்பி. வி. லெம்பேட், உதவிக்கல்விப்பணிப்பாளர்.





# இளைஞர் ஆணைக்குழுவினால் நாடாத்தப்படவுள்ள போட்டிகள்

இளைஞர்களை ஊக்கப்படுத்தவும் அத்தோடு அவர்களைக் கொண்டு பங்குகளிலே மக்களுக்கு மனித மாண்பும் குடும்பமும் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும். முதற்கட்டமாக தெருக்கூத்து போட்டி ஒன்றை நடாத்தவுள்ளோம். இப்போட்டிகள் மறைக் கோட்ட ரீதியாக நடத்தப்பட்டு முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும். அத்தோடு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

**போட்டி விதிமுறைகள்**

- தலைப்பு (மையக் கருத்து) மனிதத்தை மதிப்போம் நற்குடும்பங்களை உருவாக்குவோம்.
- நேரம் 20-25 நிமிடம் வரை
- பங்கில் இருந்து 01 குழு மாத்திரம் பங்கு கொள்ள முடியும்.
- ஒரு குழுவில் குறைந்தது 10 இளைஞர்கள் நடிகர்களாக பங்கு பெற வேண்டும். பங்கிலுள்ள ஏனைய கலைஞர்களின் உதவிகள், ஆலோசனைகளை பெறலாம்.
- கருத்து, நடிப்பு, இசை, வழங்குகின்ற முறை (presenting), விறுவிறுப்பு, கவர்ச்சி, உடை அலங்காரம் என்பன கவனத்தில் கொள்ளப்படும்.
- இதற்கான முடிவுத்திகதி தை மாதம் 31ம் திகதி ஆகும்.
- தொடர்ந்து வருகின்ற வாரங்களில் மறைக் கோட்ட மட்டத்தில் போட்டிகள் இடம் பெறும். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# வங்காலைப் பங்கின் மேய்ப்புப் பணித் திட்டமிடல் மாநாடு 2014

வங்காலைப் பங்கின் 2014 ஆம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு கடந்த டிசம்பர் 16ஆம் திகதி மாலை 2.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை நடைபெற்றது. மாநாட்டின் தொனிப்பொருள் "மனித மாண்பைக் குடும்பங்களில் தேடுவோம்" என்பதாகும். பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளாரின் தலைமையில் 5 வளவாளர்கள் உட்பட 100க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இதில் பங்கெடுத்தனர். அனைத்துப் பக்திச்சபை உறுப்பினர்கள், பங்கின் முக்கிய அமைப்புக்களில் உள்ளவர்கள், திருக்குடும்ப அமைப்பில் உள்ள அருட்சகோதரிகள் எனப் பலரும் இதில் கலந்து சிறப்பித்தார்கள்.

முக்கிய தலைப்புக்களின்கீழ் மாநாட்டில் கருப்பொருள் ஆராயப்பட்டது. 1. "விவிலியத்தில் குடும்பமும் மனித மாண்பும்" பற்றிய கருத்துரையினை அருட்பணி. வரதன் அடிகளாரும் 2."பெற்றோர் பிள்ளைகளின் உறவுநிலையும் குடும்ப செபவாழ்வும்" பற்றிய கருத்துரையினை திரு. சூசைநாயகம் றெவ்வல் (A.O. நானாட்டான் பிரதேச செயலக நிருவாக அலுவலர்)அவர்களும், 3. "பிள்ளைகளின் கிறிஸ்தவ விழுமியங்களையும் அறிவையும் வளர்க்கும் விதத்தில் பிள்ளை வளர்ப்பு" என்ற கருத்துரையினை முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. M. ஆபேல் றெவ்வல் அவர்களும், 4. "அரசபணி ஆன்மீகப் பணிக்கு தடையல்ல" என்ற கருத்துரையினை திரு. பிறின்ஸ் டயஸ் (ஆசிரிய ஆலோசகர்) அவர்களும், 5."மனித மாண்பைக் குடும்பங்களில் பேணுவோம்" என்ற கருத்துரையினை திரு. S. வெற்றிநாதன் லெம்பட் (முருங்கன் நானாட்டான் பிரதேச சுகாதார அதிகாரி M.O.H) அவர்களும் வழங்கினார்கள். "மனித மாண்பை குடும்பங்களில் பேணுவோம்" என்ற தலைப்பு படக்காட்சிகள் மூலம் மக்களைக் கவரும்விதத்தில் முன்வைப்பு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் மாணவர்கள் இளைஞர்கள் உட்பட வங்காலை பங்கின் இன்றைய நிலை ஆராயப்பட்டது. குழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அருட்பணி. வரதன் மேலதிகமான கருத்துக்களை முன்வைத்தார். இன்றைய மாணவர்கள் இளைஞர்களின் போக்குகள் பற்றிய கருத்துக்களை சரமாரியாகப் பொழிந்தார்கள். இறுதியாக பங்குத்தந்தையின் கருத்துரையுடன் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டு மாநாடு செபத்துடன் இனிதே நிறைவுற்றது.

**தகவல். திருமதி பெப்பி. விக்ரர் லெம்பேட் உதவிக்கல்விப்பணிப்பாளர்.**

## தலைமன்னார் புனித சிசிலியா பாடகர் குழாமின் வருடாந்த தினம்



தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தைச் சேர்ந்த புனித சிசிலியா பாடகர் குழாமினர் தமது வருடாந்த தினத்தை கடந்த 2013.11.23 ஞாயிறு தினம் அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்கள். பாடகர் குழாம் தலைவர் திரு. பி. யோகரட்னம் அவர்கள் தலைமையில் பாடகர் குழாம் உறுப்பினர்கள் தங்களுக்கெனத் தயாரித்த சீருடையை அணிந்து பவனிவந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய ஞாயிறு திருப்பலியை அவர்களே சிறப்பித்தனர்.

திருப்பலியின்பின் பங்குத்தந்தை தனது உரையில் பாடகர் குழாமின் பொறுப்பான அர்ப்பணிப்பையும் தலைவர் அவர்களின் அயராத முயற்சியையும் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

**தகவல் : திரு. எஸ். அல்விறெட் சில்வா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மாண்பும் குடும்பமும்

சிறப்புக் கட்டுரை

# மனித மாண்பும் குடும்ப வாழ்வும்

கரையூர்ச் செல்வம், அ.ம.தி. வவுனியா.

### முன்னுரை

"மனித மாண்பும் குடும்ப வாழ்வும்" என்ற பொருளை 2014ம் ஆண்டின் சிந்தனையாக - வாழ்வாக மையப்படுத்திய ஆயர் குழாமைப் பாராட்டுகின்றேன். ஈழத்தின் நான்கு தமிழ் மறை மாவட்டங்களும் ஒன்றிணைந்து காலத்தின் அவசிய தேவையை உணர்ந்து இப்பொருளை இவ்வாண்டிற்குரிய சிந்தனையாக, வாழ்வாக, செபமாக மையப்படுத்தியமை சிறப்பு. எப்படிப்பட்ட சூழலில், பின்னணியில் நாம் இப்பொருளை மையப்படுத்தியுள்ளோம் என்று பார்ப்பது அவசியம்.

### இன்றைய சூழல் (பின்னணி)

போரினால், ஒரு துப்பாக்கிக் கலாச்சாரத்தினால் சீர்குலைந்த ஒரு சமூகம் எங்கள் தமிழ்ச் சமூகம். மனித வாழ்வை கிஞ்சித்தும் மதிக்காத இளைஞர்களை உருவாக்கியது எங்கள் சமூகம். விடுதலைப் போர் என்ற போர்வையில், செய்த மனிதக் கொடுமைகளை, சித்திரவதைகளை நியாப்படுத்தியது எங்கள் சமூகம். நூற்றாண்டுகளாக வளர்ந்த தமிழ்ப் பண்பாடு - கலாச்சாரம் சீரழிந்தது. போற்றிக் காத்து வளர்த்த கல்வி சிதைந்தது. குடும்பங்கள் பிரிந்தன. நாடு விட்டு நாடு தேடி ஓடினார்கள் தமிழர். சொந்த நாட்டிலும் சென்ற நாடுகளிலும் அகதிகளானார்கள். அகதிக் கலாச்சாரம் ஒன்று உருவாகியது. இங்கெல்லாம் மனித மாண்பு அழிந்தது.

செய்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறாமையினால், தமிழ் நாட்டில் இருந்துவரும் சின்னத்திரைகளும், பெரிய திரைகளும் மனித மதிப்பீடுகளை சிதைத்து வருவதினாலும், நுகர்வுக்கலாச்சாரத்தினாலும், கல்வி வணிகமாக மாறிவிட்டதனாலும், அடக்குமுறைகளினாலும், ஓடும் நதியோடு ஓடிவிடும் மேலெழுந்தவாரியான கலாச்சாரத்தினாலும், மனித மதிப்பீடுகளை கிஞ்சித்தும் மதிக்காமையினாலும் மனித மாண்பு அழிகின்றது; அழிக்கப்படுகின்றது.

குடும்ப வாழ்வு குலைகின்றது; குலைக்கப்படுகின்றது. புறச்சடங்குகளையும், ஆராதனைகளையுமே மதங்கள் வளர்க்கின்றனவே ஒழிய, மதங்கள் வளர்க்கவேண்டிய ஆன்மீகத்தை மறந்துவிடுகின்றன; மறுத்தும் விடுகின்றன. வேலியே பயிரை மேய்கின்றது. குற்றம் புரியும் தலைவர்கள் அரசியலிலும் மதங்களிலும் - மதங்களுக்குப் பின்னாலும் மறைகின்றனர். இனத்துவேசத்தையும், மத வேறுபாடுகளையும் வளர்க்க மதங்களைப் பயன்படுத்துகின்றார்கள் இத்தலைவர்கள். இங்கெல்லாம் மனித மாண்பு அழிகின்றது; அழிக்கப்படுகின்றது. திட்டமிட்டே இவை செய்யப்படுகின்றன. மனிதர் மிருகங்களாக மாறும்பொழுது மனித மாண்பு எங்கே?

### மனித மாண்பு என்றால் என்ன?

படைப்பை முழுமையாகப் பார்க்கின்றோம். பிரபஞ்சத்தின் (Universe) ஒரு பகுதிதான் நாம் வாழும் இந்த உலகம். இந்த உலகில் சமுத்திரங்கள் உண்டு. மிருகங்களும் பறவைகளும் உண்டு. மனிதர்களும் உண்டு. இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை - உறவுடையவை (Inter Connected – Inter related) என்று புதிய விஞ்ஞானம் கூறுகின்றது. நிறுவனமயமாக்கப்பட்ட மதங்களை மேவி வாழ்ந்த ஞானிகள் இதை என்றோ சொல்லியுள்ளார்கள்.

இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருப்பினும் மனிதர்களில் சில சிறப்புக்கள் அவதானிக்கக் கூடியன. அவை எவை? அறிவை வளர்க்க - சிந்தனையை ஆழமாக்க - ஆய்வுகள் செய்ய மனிதனால் முடியும். உணர்வுகளை உணர, உணர்ந்த உணர்வுகளை வெளிப்படுத்த, உணரும் உணர்வில் இருந்து தன்னைப் புறம்பாக்கி தனது உணர்வையே தான் பார்க்கக்கூடிய தன்மை மனிதனுக்குரிய பெரும் சிறப்பு. செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்க, அவற்றைத் தன்னிலும் அயலவர்களிலும் மன்னிப்பது மனிதர்களுக்கே உரிய பெருஞ்சிறப்பு.

தன்னலத்தில் இருந்து விடுபட்டு, பிறர்நலன் கருதி வாழ, தனது தேவைகளையே ஒதுக்கி பிறருடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய மனிதர்கள் தம்மையே மேவி வாழ முடியும் என்று பல பெரியோர்கள், ஞானிகள் காட்டிச் சென்றுள்ளார்கள். இவையெல்லாம் மனிதருக்கே உரிய பெருஞ்சிறப்புக்கள். இவை எல்லாம் எப்படி முடியும்?

மனிதர்களுள் ஒரு சக்தி உண்டு. இந்தச் சக்தியைக் கண்களால் பார்க்கவோ, அன்றேல் செவிகளால் கேட்கவோ முடிவதில்லை. தொட்டு அனுபவிக்க இயலவில்லை. ஆனால் மனிதர்களால் அனுபவிக்க முடிகிறது. அன்பை நாம் பார்த்ததில்லை. ஆனால் அனுபவிக்க முடிகிறது. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? என்று வள்ளுவர் குறள் யாத்தார். அன்பிற்கு எல்லைகள் இல்லை என்று இயேசு சொன்னார். "ஒருவர் தன் நண்பர்களுக்காக உயிர் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறில்லை" என்பது இயேசுவின் பொன் மொழி. இதனால்தானோ, யோவான் தனது திருமுகத்தில் கடவுள்தான் அன்பு, அன்புதான் கடவுள் என்று மொழிந்தாரோ? சைவத்திலும் "அன்பே சிவம்" என்று அழகுறச் சொல்லப்பட்டுள்ளது.

இதையே கிறிஸ்தவம் ஆன்மா என்று அழைக்கின்றது. பௌத்தம் சதுக்க நிலை (original nature) அல்லது புத்தர் இயல்பு (Buddha Nature) என்றும், இந்து மதம் பிராண என்றும் கசிடிக் யூதர் தெய்வீகத்தின் ஒளி என்றும் குவேக்கேர்ஸ் (Quakers) அக ஒளி என்றும் தோமஸ் மேர்ட்டன் உண்மையான நான் (The true self) என்றும், மனித இன உலக இயலாளர்கள் (Humanists) மனித அடையாளம் (Identity) என்றும் அழைப்பர். அனைத்தும் சுட்டிக்காட்டும் உண்மை ஒன்றே. மனிதர்களில் மனித அறிவையும், உணர்வையும் மேவிய ஒரு தெய்வீகம் உண்டு. இந்தத் தெய்வீகத்தை (மனித மாண்பை, மனித மதிப்பை)



பொய்மையினாலும், அகப்பிரிவினாலும் மறைத்து அடக்கிவிட்டால் மனிதர் மிருகங்களாகிவிடுவர். இந்த மிருகத்தன்மைதான் இன்று வளருகின்றது. "மனிதன் மிருகமாகலாம், அவன்/ள் தெய்வமாகலாம்" என்றொரு பழைய பாடல் உண்டு.

### மனித மாண்பும் தன் மதிப்பும்

தன்மதிப்புக்கும் மனித மாண்புக்கும் இடையே நெருக்கமான தொடர்புண்டு. தன்மதிப்பு பற்றி சிந்திக்காமல் மனித மாண்பைப்பற்றி பேசுவது ஆரோக்கியமானதல்ல. அர்த்தமற்றது; பொருளற்றது.

### தன்மதிப்பு என்றால் என்ன?

சிலர் சுயமதிப்பென்று கூறுவார்கள். என்னைப்பற்றி நான் எப்படி நினைக்கின்றேனோ, என்னைப்பற்றி நான் எப்படி உணர்கின்றேனோ எனது ஆற்றல்களைப்பற்றி நான் என்ன எண்ணங்களைக் கொண்டுள்ளேனோ, என்னை நான் எப்படி மதிக்கின்றேனோ, - இவை அனைத்தும் எனது எதிர்காலத்தைப்பற்றி நான் சிந்திக்கும் பாணியைப் பாதிக்கும். என்னைப்பற்றி நான் என்ன கொண்டுள்ளேனோ அதற்கேற்பவே எனது தன்மதிப்பு அமையும்.

மற்றவர்களோடு என்னை ஒப்பிட்டு, மற்றவர்கள் மத்தியில் எனக்குள்ள பெயரையும் புகழையும் பார்த்தே எனது தன்மதிப்பு அமையுமானால், அது ஆரோக்கியமற்றது. இச்செயல் ஒப்பிட்டுப் பார்த்து என்னை எடை போடும் செயலாக மாறும். மற்றவர்களைவிட நான் நல்லவனா? அடுத்த வீட்டுக்காரரைவிட எனது வாழ்வு சிறந்ததா? எனது நண்பர்களைவிட நான் அழகுள்ளவளா/னா? சக ஊழியர்களைவிட நான் மேலோங்கியவளா/னா இப்படிப்பட்ட வினாக்களில்தான் எனது வாழ்வின் எடை உண்டெனில், அவை உண்மைத் தன்மை இல்லை; உண்மை நிலை இருக்காது.

எனது வாழ்க்கையின் இலட்சியங்கள், நோக்கங்கள், என்னைப்பற்றி நான் சிந்திக்கும் உணரும் வகையில்தான் அமையும். உ+ம் என்னைப்பற்றி எனக்குத் தாழ்வுமனப்பான்மை இருக்குமாயின் (ஒப்பிடுவதால் தாழ்வுநிலை ஏற்படலாம்) உயர்ந்த இலட்சியங்களை எனது வாழ்வின் இலக்காக உருவாக்க முடியாது. நல்ல குறிக்கோள்களை மையமாகக் கொண்டு வாழ தாழ்வு மனப்பான்மை தடையாக அமையும்.

உண்மையான, தெளிவான, உறுதியான ஒரு தன்மதிப்பில்தான் இலட்சியங்கள் உருவாகலாம். வாழ்வின் நோக்கங்கள் தெளிவாகலாம். உருவாக்கிய இலட்சியங்களையும், தெளிவான வாழ்க்கை நோக்கங்களை கனவாக்க, நிறைவேற்ற நான் எடுக்கும் வாழ்க்கைப் பயணம் உறுதியாக அமையும். எதிர்கொள்ளும் தடைகளை, முட்டுக்கட்டைகளை, எதிர்நோக்க அகத்தில் இருந்து ஒரு சக்தி வரும்/வளரும்.

தன்னம்பிக்கையில்லாமல், எனது ஆற்றல்களை நித்தமும் கேள்விக்குறியாக்கும்பொழுது இலட்சியப்பாதையில் நானே தடைகளை உருவாக்குவேன்; பிரச்சினைகளை உருவாக்குவேன். மனித மாண்பு இங்கு குறையும்; நோய்வாய்ப்படும்.

### அகவிடுதலை

பொருளாதார விடுதலை, கலாச்சார விடுதலை, அரசியல் விடுதலை, மத விடுதலை பற்றி பேசுவோம். அகவிடுதலை பற்றி பேசுவதில்லை. அன்றேல் பேசுவது குறைவு. எம்மையே நாம் சிறைப்படுத்தியிருக்கும்பொழுது, வெளியில் இருந்து வரும் எவராலும் எம்மை விடுதலையாக்க முடியாது. இப்படிப்பட்ட சிறைவாழ்வினால், மனித மாண்பு சூறையாடப்படுகின்றது. மனித மாண்பே சிறைப்படுத்தப்பட்ட பின்னர், அரசியல் விடுதலையோ, பொருளாதார விடுதலையோ, மத நிறுவன விடுதலையோ எந்த வகையான அர்த்தத்தையும் தராது.

அக விடுதலை என்றால் என்ன? என்னை நானே சிறைப்படுத்திய நிலைதான் அகச்சிறை. அச்சிறையில் இருந்து என்னை விடுதலையாக்குவதே அகவிடுதலை. உ+ம் என்னை நானே மதிக்காமை, என்னை நானே நம்பாமை, என்னை நானே அன்பு செய்யாமை அகச்சிறையாகும். அடக்கப்பட்ட கோபங்களினால், பகை உணர்வுகளினால், பழிவாங்கும் உணர்வுகளை என்னில் வளர்க்கும்பொழுது அகச்சிறை உருவாகிறது. மன்னிக்க மறுக்கும்பொழுது அகச்சிறை. நானே வளர்த்துக்கொண்ட தகாத பழக்கவழக்கங்களை விட்டுவிட விரும்பாதபொழுது அகச்சிறை. பதவிக்காக, பணத்திற்காக கொள்கைகளை நல்லறிவை விற்றுவிடுவது அகச்சிறை. ஒரு பொய்யைச் சொல்லிய பின்னர் அப்பொய்யை மறைப்பதற்கு ஒன்பது பொய் சொல்வது அகச்சிறை. தவறுகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்க மறுப்பது அகச்சிறை.

முகமூடிகள் போட்டு வாழ்வதும், காலப்போக்கில் அந்த முகமூடிகள் நான் என்று உருவெடுக்கும்பொழுது உண்மையான நான் யாரென்று தெரியாது வாழ்வதும் மிகப்பெரிய அகச்சிறை. உண்மையான நான் (True Self) யார் என்ற உணர்வில்லாமல் பொய்யான என்னை (False Self) உண்மையான நான் என்று நினைத்து வாழும்பொழுது அது பொய்யான வாழ்வு. அது அகத்தே பெரிதும் பிளவுபட்ட வாழ்வு. இங்குதான் உளவள நோய்கள் ஆரம்பமாகின்றன. "கவலைப் புறாக்கள் என்மேல் பறப்பதை என்னால் நிறுத்த முடியாது. ஆனால் என் தலையில் அவை கூடுகள் கட்டாமல நிறுத்திவிட என்னால் முடியும்" - சீனப்பழமொழி. மற்றவர்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நான் வாழும்பொழுது எனது தனித்துவம் விற்கப்படுகின்றது. பணத்திற்காக, பதவிக்காக, அமைச்சுக்காக எனது அறிவை விற்று, எனது 'ஆன்மாவை' விற்று தவறுகளை நியாயப்படுத்தும்பொழுது மனித மாண்பு முற்றாக அழிக்கப்படுகின்றது.

### மாயக்கலை

மும்பையின் வாமதிபுரவில் உள்ள பாலியல் தொழிலாளர்களைப் பேட்டிகண்டு ஒரு கட்டுரைத் துணுக்கில் (16.01.2014) பிரசுரிக்கப்பட்டது. இக்கட்டுரையில் "உடலை விற்று உழைப்பவர்கள்" என்று ஒரு சொற்றொடர். உழைப்பு ஒரு மனித மாண்புச் சொல். உடலைவிற்று காசு வாங்குவோர், உழைப்பாளிகள் அல்ல, அவர்கள் விபச்சாரிகள். இது மனித மாண்பை அழிக்கும் ஒரு கீழ்த்தரமான செயல். இந்தக்கட்டுரையின் தலைப்பு, "உடலில் இருந்து ஆன்மாவைப் பிரிக்கும் மாயக்கலையை நாங்கள் அறிவோம். ஆத்மாவைக் கேட்கின்றார்கள். ஆனால் அது விற்பனைக்குரியதல்ல." விபச்சாரிகளின் சொற்களே இவை. உடலில் இருந்து ஆன்மாவைப் பிரிக்க முடியாது. அது ஒரு மாயக் கலையல்ல. உடலையும் ஆன்மாவையும் பிரிப்பது அகத்தே ஏற்படும் ஒரு பிரிவு. "பிரிவு நோயுள்ளது; நோய் பிரிவுள்ளது" என்று ஏபிரகாம் மாஸ்லோ 1970களில் தெளிவாகக் கூறினார். இன்றும் ஏற்றுக் கொள்ளக்கூடியது. அதுசரி, உடலை விற்றுப் பணம் பெறுவோர் விபச்சாரிகள். பணம் கொடுத்து உடலை விற்கும் ஆண்களும் விபச்சாரர்கள்தானே? விபச்சாரிகளை இழிவாகப் பார்க்கும் சமூகம் ஏன் விபச்சாரர்களை இழிவாகப் பார்க்கவில்லை? சமூகத்தின் இரட்டை வேடம். விபச்சாரிகளும் விபச்சாரர்களும் மனித மாண்பை முற்றாக இழந்தவர்கள். இருசாராரும் உடலை மட்டுமல்ல, தம்மையே விற்றுவிடுகின்றார்கள் அதுதான் யதார்த்தம்.

### மிருகங்கள்

இந்தக்கட்டுரையில் இந்த விபச்சாரிகள் சில விபச்சாரக்காரர்களை 'மிருகங்கள்' என்று வர்ணித்துள்ளார்கள். தப்பு, மிருகங்களின் பாலியல் வாழ்வு இந்த மனித மாண்பற்ற விபச்சாரிகளினதும் விபச்சாரக்காரர்களினதும் பாலியல் வாழ்வைவிட மேலானது.

உடலையும் ஆன்மாவையும் நோய்வாய்ப்படுத்தியவர்கள் இந்த விபச்சாரிகளும், விபச்சாரர்களும். இவர்களைப் பகிரங்க வியாபாரத்தில் அனுமதித்த சமூகம் நோய்வாய்ப்பட்டது. இதனால்தான் என்னவோ, திருத்தந்தை பிரான்சிஸ், "இழந்த மாண்பை மீளப் பெறவேண்டும்" என்று குரல் எழுப்பியுள்ளார். இந்த ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக மனித மாண்பை மீட்க நாம் அனைவரும் கைகொடுத்து உதவ வேண்டும்.

## பகுதி - ii குடும்பம்

பெரிய தலைப்பு சிக்கலான தலைப்பு. எங்கே துவங்குவது என்ற கண்ணோட்டம். திருமணத்தில் ஆரம்பிப்போம். கத்தோலிக்க திருமணச் சடங்கில் குருவானவர் திருமணத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வந்த ஆண் - பெண்ணிடம் ஓர் அருமையான பொருள் பொதிந்த வினா ஒன்றைக் கேட்கின்றார். இதை திருமணத்தில் இணைய சம்மதம் தெரிவிப்பதாகவே சடங்கு நூல் சொல்கின்றது. ஆனால் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

**மணமகன் : உன்னை என் மனைவியாக ஏற்றுக் கொள்கின்றேன்.**

**மணமகள் : உங்களை என் கணவராக ஏற்றுக் கொள்கின்றேன்.**

ஏன் மணமகன் "உன்னை" என்றும், மணமகள் "உங்களை" என்றும் அழைக்கின்றார்கள் என்பது என்னைப் பொறுத்தமட்டில் ஒரு கேள்விக்குறி? இங்கு ஒருவரை ஒருவர் மதிக்கும் தன்மையில் ஒரு குழறுபடி. ஆரம்பமே சரியாகத் தோன்றவில்லை. ஒரு பழைய தமிழ்க்கலாச்சாரத்தில் சிக்கி அதில் இருந்து விடுபட விரும்பாத ஆணாதிக்கத்தின் சிறை.

### ஏற்றுக்கொள்ளுதல்

ஏற்றுக்கொள்ளுதல் ஒரு படிமுறை. அது திடீரென்று வருவதல்ல, வரக்கூடியதல்ல. ஒருவரை ஏற்றுக்கொள்ள முன்னர் அவரைப் புரிதல், புரிந்துணர்தல் அவசியம். புரிவதற்கு அவரைப்பற்றிய அறிவு தேவை. ஒருவரைப்பற்றி அவருடைய ஆளுமை ஏற்றத் தாழ்வுகள், பலம், பலவீனங்கள் அவருக்கு ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்கள், அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், அவருடைய ஆரம்பகால குடும்பச் சூழல், அவருடைய பெற்றோர் உடன் பிறப்புக்கள் - அவர்களால் நன்மையும், தீமைமையும் கலந்த பாதிப்புக்கள் - இவை அனைத்தும் சேர்ந்ததே ஒருவரைப்பற்றிய அறிவு. அது அவருடைய கதை.

இந்த அறிவு எங்ஙனம் வரும்? ஆகவே பகிர்தல் அவசியமாகிறது. ஒருவர் ஒருவருடைய வாழ்க்கையை மற்றவரும் படிப்படியாகப் பகிர்தல் அவசியம். இப்படிப்பட்ட ஒரு பகிர்தலுக்கு ஒருவர் ஒருவரில் நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை ஆழமாக வளர, பகிர்தலும் ஆழமாகச் செல்லும். பகிர்தல் ஆழப்படுத்தப்படும்பொழுது நம்பிக்கை வளரும்.

பகிர்தல், செவிமடுத்தல், புரிதல், ஏற்றுக்கொள்ளுதல் என்ற ஒரு படிமுறையில்தான் உறவு வளரும். உறவு ஆழமாக்கப்படும். ஆகவே, ஏற்றுக்கொள்ளுதல் ஒரு முடிவு (A decission). ஏற்றுக் கொண்டால்தான் அன்பு. அன்பு வெறும் உணர்ச்சி அல்ல. உணர்வும் அறிவும் இணைந்த ஒரு முடிவு.

"கண்டவுடன் காதல்" என்பது பழக்கத்திலும் வழக்கத்திலும் வந்த ஒரு சொற்றொடராயினும் அதில் உண்மையில்லை. கண்டவுடன் கவர்ச்சி ஏற்படலாம், ஏற்படுவதுண்டு. கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டவர்கள் பகிர்தலில் ஓர் உறவை ஆரம்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பகிர்தலை மதித்து, செவிமெடுப்பது, கவனம் செலுத்துவது அவசியம். அங்குதான் நம்பிக்கை வளர்கின்றது. இந்தச் செவிமெடுத்தலில் ஒரு வகையான மதிப்பீடுகளோ, ஒருவரைப்பற்றிய அபிப்பிராயங்களை உருவாக்கவோ தீர்ப்புக்கள் சொல்லவோ (அறவே) கூடாது. ஒரு ஒத்துழைப்புடன் செவிமெடுக்கும்பொழுது நம்பிக்கை ஆழமாக வளர இடமுண்டு.

(மிகுதி அடுத்தமாத இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# காணாமல்போன கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் இன்றும் அழுதுகொண்டே இருக்கின்றனர்


## மக்களின் துயர் துடைப்பது அரசின் பொறுப்பாகும்

### ஆயர் ஜோசப் பொன்னையா

காணாமல்போன, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் இன்றும் அழுதுகொண்டே இருக்கின்றனர். அந்தவகையிலே இவர்களின் துயரைத் துடைக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும் என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களினால் இறந்த மற்றும் காணாமல்போனவர்களுடைய உறவினர்களின் ஒன்றிய மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் கடந்த 28.12.2013 அன்று மட்டக்களப்பு தாமரைக்கேணி வீதியில் திறந்துவைக்கப்பட்ட வைபவத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், காணாமல்போன, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் இன்றும் அழுதுகொண்டே இருக்கின்றனர். கடந்த யுத்த அனர்த்தத்தினால் காணாமல்போன, கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தரவேண்டியது அரசாங்கத்தினதும் ஏனையோரினதும் பொறுப்பாகும். காணாமல்போன, கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் உறவினர்களின் அழுகையை நிறுத்த முடியும். காணாமல்போன, கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது மனித உரிமையாகும். அந்த வகையில் இந்த அலுவலகம் இங்கு திறக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கையாகும். இத்தகைய நல்ல பணிக்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் உதவியும் அவசியமாகும் என்றார்.



## புனித செபஸ்தியாரின் திருப்பண்டம் இலங்கையில்

புனித செபஸ்தியாரின் திருப்பண்டம் (Relics) கடந்த 12.01.2014 அன்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இத்திருப்பண்டம் அங்கிருந்து பவனியாக பக்தியோடு கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருச்சடங்குகள் நிறைவுபெற்றன. இத்திருப்பண்டமானது இத்தாலி நார்கோள் நகரத்தில் இருந்து கொண்டுவரப்பட்டதாகும். அதேவேளை பாதுவா புனித அந்தோனியார் பசிலிக்கா திருத்தல முதல்வரின் அன்பளிப்பாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



### யாழ். ராணுவத் தளபதியாக உதய பெரேரா பொறுப்பேற்பு

யாழ் மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக கத்தோலிக்கரான மேஜர் ஜெனரல் உதய பெரேரா உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட சமய ஆராதனைகளைத் தொடர்ந்து அவர் பதவியேற்றுக் - கொண்டார்.

## ‘அமைதிப் பூங்கா’ சிறுவர் நாடகநூல் வெளியீடு







யாழ் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையின் ஆசிரியரும் திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குனருமான திரு. யோ. யோண்சன் ராஜ்குமார் எழுதிய ‘அமைதிப் பூங்கா’ என்னும் சிறுவர் நாடகத்தொகுதி அண்மையில் யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையின் முத்தமிழ் மன்றத்தினால் வெளியீடு செய்யப்பட்டது. இப்பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. மேற்படி வெளியீட்டு விழாவுக்குத் திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. மதிவாணி விக்னராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

வாழ்த்துரையை அமலமரித்தியாகிகள் சபையின் சிறிய குருமட அதிபர் அருட்திரு. செ. அன்புராசா அடிகளும், ஆய்வுரையை யாழ். பல்கைலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளர் திருமதி நவதரிசினி கருணாகரன் அவர்களும் நிகழ்த்தினர். நூலானது பிரதம விருந்தினரால் வெளியிடப்பட அதன் முதற்பிரதியை மூத்த மெல்லிசைக் கலைஞர் வி. அன்ரன் டேவிற் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## மேற்குலகத்தை குறை கூறாமல் தவறுகளைத் திருத்த வேண்டும்

### கர்தினால் மல்கம் ஆண்டகை

மேற்குலக நாடுகளைக் குறைகூறுவதால் எந்தப் பயனுமில்லை. நாட்டின் தவறுகளை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச ரீதியில் இலங்கை அவப்பெயருக்கு உள்ளாகும் என்று கொழும்புப் பேராயர் மேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆயர் பேரவை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு உடனடியாக நடைமுறைபடுத்த வேண்டும். இதனைச் செய்யாது மேற்குலக நாடுகள்மீது குறைகூறுவதில் பயனில்லை. எமது தவறுகளை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி மாற்றங்களைச் செய்யக்கூடாது. மாறாக, செய்யப்போகும் மாற்றங்களை முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


## மாகாண சபை சுயாதீனமாக செயற்பட வழிவிடுங்கள்

### யாழ். ஆயர் அரசாங்கத்திடம் கோரிக்கை

அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை உரிய முறையில் நடைமுறைபடுத்தி வடமாகாண சபையின் சுதந்திர செயற்பாட்டிற்கு வழிவிடுமாறு யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்கள் வழங்கிய ஆணையை மதிக்க வேண்டியது ஜனநாயக அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் ஆயர் சுட்டிக்காட்டினார். ஞாயிறு தினக்குரலுக்கு கருத்து வெளியிட்ட ஆயர், ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு கூடுதல் அழுத்தங்களை சர்வதேச நாடுகள் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். படிப்பினைகள் மீளிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில நல்ல பரிந்துரைகளை அரசாங்கம் இன்னும் நடைமுறைபடுத்தவில்லை. வடக்கு - கிழக்கு மக்களின் அமைதியான வாழ்வுக்கான நல்லிணக்க வெளிப்பாடுகளை அரசாங்கம் உருவாக்க வேண்டும். தேர்தல் முடிவடைந்து வடமாகாண சபை பதவியேற்றுள்ளது. ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது. மாகாணங்களுக்குரிய சகலவிதமான அதிகாரங்களையும் அரசாங்கம் உடன்டியாக வழங்க வேண்டும் என்றார்.

## தன்னை இயேசுக் கிறிஸ்துவின் மறுபிறப்பு என நம்பும் ஓர் நபர்



தன்னை இயேசுக்கிறிஸ்துவின் மறுபிறப்பு எனக் கருதி கடந்த 35 வருடங்களாக இறை போதனை செய்வதில் நபர் ஒருவர் ஈடுபட்டுள்ள சம்பவம் பிரேசிலில் இடம்பெற்றுள்ளது.

பிரேசிலியா நகரைச் சேர்ந்த இன்றி கிறிஸ்டோ (66 வயது) என்பவரே இவ்வாறு தன்னை இறைவனின் மகனது மறுபிறப்பாக கருதி இயேசுக்கிறிஸ்து போன்று ஆடைதரித்து வாழ்ந்து வருகிறார். இன்று கிறிஸ்டோவை பிரித்தானியா பிரான்ஸ் உள்ளடங்கலான உலகமெங்குமுள்ள நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் ஏற்றுக்கொண்டு அவரது கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். அவர்களில் சிலர் பிரேசிலியா நகருக்கு வெளியிலுள்ள அவரது தேவாலய வளாகத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

1979ஆம் ஆண்டிலிருந்து உலகெங்குமுள்ள 27 நாடுகளுக்கு பயணம் செய்துள்ள அவர், தனது சர்ச்சைக்குரிய கண்ணோட்டம் காரணமாக அமெரிக்கா, பிரித்தானியா, வெனிசுவலா ஆகிய நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவர் 40ற்கும் மேற்பட்ட தடவைகள் பொலிஸ்சாரால் i f J nraaggl L தடுத்து வைக்கப்பட்டார்.

இன்றி கிறிஸ்டோவின் சீடர்களில் அநேகர் பெண்களாவர். அவர்களில் மிகவும் வயதுகூடியவராக 86 வயது அபெவெரி விளங்குகிறாள். அவர் கடந்த 32 வருட காலமாக அவரைப்பின்பற்றி வருகிறார்.

அவரது சீடர்களில் இளையவரின் வயது 24 ஆகும். அவர் தனது இரண்டு வயது முதல் இன்றி கிறிஸ்டோவின் சீடராக உள்ளார். தனக்கென சொந்தத் திருச்சபையைச் செயற்படுத்தி வரும் அவரும் அவருடன் தங்கியுள்ள அவரது சீடரும் நமது தோட்டத்தில் விளைந்த வாழைப்பழம், மாம்பழம் போன்ற பழங்கள் மற்றும் மரக்கறிகளை உணவாக உண்டு வாழ்கின்றனர்.

# யாழ் பல்கலைக்கழகத்தில் ஒளிவிழாக்கள்

யாழ்பல்கலைக்கழகத்தில் நீண்டகால இடைவெளியின் பின்னர் அனைத்துப்பீட மாணவர்களையும் ஒன்றிணைத்து கைலாசபதி மண்டபத்தில் கடந்த 17-12-2013 அன்று ஒளிவிழாவானாது மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

புனித சூசையப்பர் குருமட அதிபர் அருள்திரு. செபமாலை அன்புராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். ஆன்மீகம் நிறைந்த இளைஞர்களுக்கு இயேசு முன்னுதாரணமாக விளங்குகின்றார் என்றும் இன்றைய சமூகத்திற்கு ஆன்மீகமும் நற்பண்புகளும் கொண்ட இளைஞர்கள் யுவதிகள் தேவை என்றும் பிரதம விருந்தினர் தன் உரையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழகக் கத்தோலிக்க மாணவர்களின் ஆன்மீக இயக்குனர் அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் மற்றும் நிர்வாகக் குழுவினரும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் செல்வி தேன்மொழியும் இந்நிகழ்வை முன்னின்று நெறிப்படுத்தினர். நிகழ்ச்சிகள் தரமாக அமைந்ததால் அனைத்துச் சமய மாணவர்களும் மகிழ்ச்சியடைந்து பாராட்டையும் தெரிவித்தனர். இதில் கத்தோலிக்க சிங்கள



மாணவர்கள் சிறிய தொகையினராயினும் பௌத்த மாணவர்களையும் இணைத்து சிங்களக் கரோல் கீதத்தை இசைத்து மகிழ்வித்தனர்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட

# மறைக்கல்வித் தேர்வு – 2013

# 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்

| பங்கு | பாடசாலை | தரம் | பெயர் |
|---|---|---|---|
| 01. வவுனியா | வவு/ இ.ம.ம.வி | 3 | யே. சதுர்சிகன் |
| 02. வவுனியா | வவு/ இ.ம.ம.வி | 3 | பி. சிபியா |
| 03. வவுனியா | வவு/ இ.ம.ம.வி | 3 | பு. பிராங்கா |
| 04. வவுனியா | வ.இ.ம.ம.வி | 3 | யூ.நே. கிஷானி |
| 05. வவுனியா | வ.இ.ம.ம.வி | 3 | சா. அன்ரனி ஷெரோன் |
| 06. வவுனியா | வ.இ.ம.ம.வி | 4 | எ. த. அன்ரனிஸ்ரா |
| 07. வவுனியா | வ.இ.ம.ம.வி | 6 | த. மதுஷானி |
| 08. வவுனியா | வ.இ.தி.த.ம.வி | 3 | ம. கிறிஸ்திகன் |
| 09. வஞ்சியன்குளம் | மன்/ பு.அ.த.க.பா | 3 | அ. ஆன் பியூமிக்கா |
| 10. சிலாவத்துறை | மன்/ கொ.றோ.க.த.க.பா | 3 | அ. மேரி. தக்சிக்கா |
| 11. சிலாவத்துறை | மன்/ கொ.றோ.க.த.க.பா | 3 | செ. றொசினா |
| 12. சிலாவத்துறை | ம.ச.றோ.க.த.க.பா | 3 | நீ. நிக்கொலின் |
| 13. சிலாவத்துறை | ம.மு.றோ.க.த.க.பா | 3 | அ. சானுக்கா குருஸ் |
| 14. சிலாவத்துறை | ம.மு.றோ.க.த.க.பா | 3 | எ. மேரி டிவைனிக்கா கூஞ்ஞ |
| 15. சிலாவத்துறை | ம.மு.றோ.க.த.க.பா | 3 | செ. ஸ்டர்ளினி வாஸ் |
| 16. சிலாவத்துறை | ம.கா.றோ.க.த.க.பா | 4 | சே. ஜெக்குலின் டயஸ் |
| 17. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 3 | டி. டிக்ஷன் கூஞ்ஞ |
| 18. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 3 | அ. யூடித் மியூரிக்கா |
| 19. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 3 | பி. அபிசினி |
| 20. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 3 | றோ. எவாருசலின் |
| 21. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 6 | பா. அன்ரனி ஜினோசன் |
| 22. தலைமன்னார் | ம.பு.லோ.றோ.க.த.க.பா | 7 | பி. பிவிலியன் |
| 23. தலைமன்னார் | ம.த.பி.றோ.க.த.க.பா | 3 | சி. அன்ரனி டிவைன் |
| 24. தலைமன்னார் | ம.த.பி.றோ.க.த.க.பா | 3 | சி. ஆன் டிவைன்சி |
| 25. தலைமன்னார் | ம.த.பி.றோ.க.த.க.பா | 3 | நி.பி. கெப்ரியா சபாடினி |
| 26. தலைமன்னார் | ம.த.பி.றோ.க.த.க.பா | 4 | எஸ். அருள்நேசன் டயஸ் |
| 27. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | ஜெ. பென்சியன் |
| 28. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | மா. ஜொனாவரன் குருஸ் |
| 29. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | ச. ஜோய்சன் |
| 30. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | து. ஜான் கிளறிசன் |
| 31. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | மை. இமான் ஹரிசன் கூஞ்ஞ |
| 32. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | வி. விதுர்சிக்கா ஏஞ்சல் |
| 33. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 3 | ஜோ. மேரி ஜோஜினா |
| 34. தலைமன்னார் | ம.த.பி.அ.த.க.பா | 4 | கு. ஆன் பொபிஷா |
| 35. தலைமன்னார் | ம.த.அ.மு.க.பா | 9 | எஸ். பிராங்கிளின் பெவன் |
| 36. மன்னார் | ம.சா.அ.த.க.பா | 3 | யூ. யூட்ஸ் றொமிசியா |
| 37. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | ஜே. விரோன் |
| 38. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | கே. பஸ்ரியன் மதுஷன் |
| 39. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | எம். ஆன் றோசன் |
| 40. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | என். அபிஷேக் |
| 41. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | டி. ஐசாக் அக்ஷயன் |
| 42. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | எ. றைற்றன் அனோன் |
| 43. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | எஸ். அபிஷேக் |
| 44. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | எ. கிறிஸ் றதிஷன் |
| 45. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | சி. சிகான் |
| 46. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | டி. பெனிங்டஸ் |
| 47. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | நா. டேவிதன் |
| 48. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 3 | அ. டிவேய்ன் |
| 49. மன்னார் | ம.பு.ச.ஆ.தே.பா | 4 | ஜே.கே. நிருஷன் |
| 50. மன்னார் | ம.சி.இ.தே.பா | 4 | என். டேமியன் |
| 51. மன்னார் | ம.சி.இ.தே.பா | 3 | பி. ஜெப்ரி ஆன் பிகிறாடோ |
| 52. மன்னார் | ம.சி.இ.தே.பா | 3 | மோ. நினுஷிகா டன்ஷானி |
| 53. மன்னார் | ம.சி.இ.தே.பா | 4 | யோ. றுபேஸ் |
| 54. மன்னார் | ம.சி.இ.தே.பா | 4 | கு.ஜெ. நிபோனிக்கா பெர்ணாண்டோ |
| 55. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | ஜெ. எலின் ஜனுஷா |
| 56. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | இ. பசிலிக்கா ஷியோனா |
| 57. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | க. ஜொயனா ஷோபிகா |
| 58. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | அ. ஆன் அனுஸ்கா |
| 59. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | அ. றுக்சிக்கா |
| 60. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | பி. சுவிற்றிக்கா |
| 61. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | வ. ஜெனாட்வின் |
| 62. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 3 | ஜெ. மேரி சாருக்கா |
| 63. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | றொ. ஜக்குலின் புளோரிடா |
| 64. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | செ. மதுஷாலினி |
| 65. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | ஜெ. ஆன்பிரித்திகா பீரிஸ் |
| 66. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | ஜெ. மேரி திவிஷா |
| 67. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | சே. கிறிஷேறா |
| 68. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 4 | ரெ. ஆன் அஸ்விக்கா லெம்பேட் |
| 69. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 6 | இ. மரிய றியான்சி |
| 70. மன்னார் | ம.பு.ச.பெ.தே.பா | 6 | ஜெ. ஜெனிஷா |
| 71. பள்ளிமுனை | ம.பு.லூ.ம.வி | 3 | ஜெ. சஞ்சீவ் குமார் |
| 72. பள்ளிமுனை | ம.பு.லூ.ம.வி | 3 | கி. ஜோர்ச் கென்றி பெரேறா |
| 73. பள்ளிமுனை | ம.பு.லூ.ம.வி | 3 | தி. அபிஷேக் |
| 74. பள்ளிமுனை | ம.பு.லூ.ம.வி | 4 | யு. லூட்ஸ் செறின் |
| 75. தாழ்வுபாடு | ம.பு.வ.றோ.க.த.க.பா | 3 | எல். மேரி துஸ்யந்தி பீரிஸ் |
| 76. தாழ்வுபாடு | ம.பு.வ.றோ.க.த.க.பா | 4 | ச. அன்ரனி தனோஜன் பீரிஸ் |
| 77. தாழ்வுபாடு | ம.பு.வ.றோ.க.த.க.பா | 7 | ச. டேமியன் பீரிஸ் |
| 78. தாழ்வுபாடு | ம.பு.வ.றோ.க.த.க.பா | 9 | நி. நிமல்சினி பேரேரா |
| 79. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 3 | ச. துவாரகா |
| 80. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 4 | ச. சிபோறின் |
| 81. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | பொ. எப்சியா டலிமா |
| 82. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | கு. செனோறியா சோசை |
| 83. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | ச. வினுஷா லியோன் |
| 84. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | சி. டவ்வியா |
| 85. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | ச.கி. ஸ்ரெபிக்கா பெர்ணான்டோ |
| 86. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | பூ. திரிஷா |
| 87. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | ஜெ. அபினா கூஞ்ஞ |
| 88. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | ம. கிஷானிக்கா துரம் |
| 89. பேசாலை | செ.மே.பெ.வி | 3 | அ. மதுநிதா குருஸ் |
| 90. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 3 | ச.கி. எப்சியா பெர்ணாண்டோ |
| 91. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 3 | தோ.லி. நிகித்தா பச்சேக் |
| 92. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 3 | ச. அனர்ஷா பர்னாந்து |
| 93. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 4 | கி. ஜெகன்ஷா பீரிஸ் |
| 94. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 4 | ஒ. மெரின் டிவ்வோனா பர்னாந்து |
| 95. பேசாலை | ம.சி.றோ.க.த.க.பா | 4 | யூ. அதுஷா |
| 96. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 3 | ஜெ. நிலேஸ் அனுபன் |
| 97. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 3 | பே. பிரவின் பாய்வா |
| 98. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 3 | ச. விஷால் |
| 99. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 3 | உ. யூட் சதுர்சன் |
| 100. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 3 | ம. மகிழ்வன் துரம் |
| 101. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 4 | ம. ஜீவ சிவாங்சன் |
| 102. பேசாலை | ம.செ.ப.ம.ம.வி | 9 | அ.ஜெ. யப்சன் பீரிஸ் |
| 103. கீளியன் குடியிருப்பு | ம.து.றோ.க.த.க.பா | 3 | ப. றொனேஸ் |
| 104. கீளியன் குடியிருப்பு | ம.து.றோ.க.த.க.பா | 3 | யோ. துவாரகை |
| 105. கீளியன் குடியிருப்பு | ம.து.றோ.க.த.க.பா | 4 | அ. பிரவின் |
| 106. கீளியன் குடியிருப்பு | ம.து.றோ.க.த.க.பா | 4 | அ. டனுஷன் |
| 107. கீளியன் குடியிருப்பு | ம.து.றோ.க.த.க.பா | 4 | கி. கிறிஸ்ரிகா |
| 108. கீளியன் குடியிருப்பு | ம.க.கு.றோ.க.த.க.பா | 3 | ஜே. பெனனிஸ் |
| 109. கீளியன் குடியிருப்பு | ம.க.கு.றோ.க.த.க.பா | 4 | ஜே. அஸ்வின் ஜீவிதன் |
| 110. கீளியன் குடியிருப்பு | ம.க.கு.றோ.க.த.க.பா | 4 | வி. பிரான்சிஸ்கா |
| 111. வங்காலை | ம.பு.ஆ.ம.ம.வி | 5 | க. ஆன் நிஷியா டலிமா |
| 112. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | ரொ. பஸ்ரியன் குருஸ் |
| 113. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | ஜெ. டெனாக்ஷன் டலிமா |
| 114. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | யூ. மேரி டிறொக்சினி மொறாய்ஸ் |
| 115. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | செ. மேரி ஏஞ்சலின் குருஸ் |
| 116. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | மே. மேரி றொசேன் குருஸ் |
| 117. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | றொ. றொஷாந்தினி |
| 118. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | ப. மேரி சிறோஜன் பீரிஸ் |
| 119. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | நி. அனோஜா லெம்பேட் |
| 120. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | கே. ஸ்ரெப்னி டலிமா |
| 121. வங்காலை | ம.பு.ஆ.ஆ.பா | 3 | செ. ஆன்ஸ்ரீபனி மார்க் |
| 122. தோட்டவெளி | ம.தோ.அ.த.க.பா | 3 | ரொ. ரொபின்சியா பேளின் |
| 123. தோட்டவெளி | ம.தோ.அ.த.க.பா | 3 | அ. டெல்சிக்கா |
| 124. தோட்டவெளி | ம.தோ.அ.த.க.பா | 4 | அ. அனுஷாந் சார்லஸ் |
| 125. உயிலங்குளம் | ம.உ.றோ.க.த.க.பா | 3 | சே. நெகோமியா |
| 126. உயிலங்குளம் | ம.உ.றோ.க.த.க.பா | 3 | சி.ஸ். ரெபானி |
| 127. உயிலங்குளம் | ம.உ.றோ.க.த.க.பா | 3 | தெ. ஜெயப்பிரவின் |
| 128. உயிலங்குளம் | ம.இ.றோ.க.த.க.பா | 3 | ஜெ. ஜெயந்தி நிலோசிகா |
| 129. உயிலங்குளம் | ம.நொ.றோ.க.த.க.பா | 3 | த. தனுஷன் |
| 130. உயிலங்குளம் | ம.நொ.றோ.க.த.க.பா | 3 | இ. சினேகா |
| 131. கற்கிடந்த குளம் | ம.க.றோ.க.த.க.பா | 3 | யூ. ஆன் பியற்றிஸ் |
| 132. நானாட்டான் | ம.நா.ஆ.பா | 3 | செ. ஜோயஸ்டன் யெரினா |
| 133. நானாட்டான் | ம.நா.ஆ.பா | 3 | ஆ. டேனியஸ் |
| 134. நானாட்டான் | ம.நா.ஆ.பா | 3 | ம. மெகன்சிகா |
| 135. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | செ. எக்சியோன் துரம் |
| 136. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | செ. டிஷாந்தன் டபரேரா |
| 137. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | கொ. டிலக்ஷனா குருஸ் |
| 138. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | றெ. வொட்சினி கூஞ்ஞ |
| 139. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | இ. மாதுறு மெக்ரலின் மாரா பர்னாந்து |
| 140. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 3 | யூ. மேரி அபிஷா பர்னாந்து |
| 141. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | இ.அ. நிதுஷன் பர்னாந்து |
| 142. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | றெ. ஜொக்ஷன் மனோஷா |
| 143. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | யோ.ஜி. கிளாறின் லோகு |
| 144. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | ஏ. ஆன்டல்சி குலாஸ் |
| 145. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | அ. செறினாமிலஸ் |
| 146. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | சு. செலின் சரண்ஜா |
| 147. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | இ. ஆன் பிறின்சிகா பர்னாந்து |
| 148. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | இ. கிறிஸ்ரலின் மதுரா குருஸ் |
| 149. அரிப்பு | ம.அ.றோ.க.த.க.பா | 4 | ச. மேரி றொசேல் குருஸ் |
| 150. அளவக்கை | ம.அ.அ.த.க.பா | 3 | அ.கிர்ஷான் |
| 151. அளவக்கை | ம.ம.அ.த.க.பா | 3 | பு. கிஷோன் |
| 152. அளவக்கை | ம.மா.றோ.க.த.க.பா | 3 | செ. டனுசியா |
| 153. அளவக்கை | ம.மா.றோ.க.த.க.பா | 6 | அ. ஆபித் |
| 154. தேவன் பிட்டி | ம.தே.றோ.க.த.க.பா | 3 | அ. ரஜீபன் லாசரஸ் |
| 155. தேவன் பிட்டி | ம.தே.றோ.க.த.க.பா | 7 | ம. அமல றோஜா |
| 156. தேவன் பிட்டி | ம.மூ.அ.த.க.பா | 3 | அ. அபிஷா |
| 157. விடத்தல் தீவு | ம.தூ.யோ.ம.வி | 5 | வி. ஆன் சௌமியா |
| 158. விடத்தல் தீவு | ம.ஈ.அ.த.க.பா | 3 | ர. அபிஷா |
| 159. பண்டிவிரிச்சான் | ம.சி.அ.த.க.பா | 3 | அ. திபிசா மேரி |
| 160. பண்டிவிரிச்சான் | ம.சி.அ.த.க.பா | 3 | அ. டெய்சி கிம்சியா |
| 161. காத்தான் குளம் | ம.க.றோ.க.த.ம.வி | 3 | யோ. ஜெனோன் |
| 162. காத்தான் குளம் | ம.க.றோ.க.த.ம.வி | 4 | கொ. மகிதுசாரா |
| 163. காத்தான் குளம் | ம.க.றோ.க.த.ம.வி | 5 | யூ. சிபானி |
| 164. காத்தான் குளம் | ம.வ.அ.த.க.பா | 3 | தெ. பெனட் கெவின் |
| 165. சிறுக்கண்டல் | ம.ப.அ.த.க.பா | 3 | ச. அலோஜினி |
| 166. சிறுக்கண்டல் | ம.ப.அ.த.க.பா | 3 | யூ. மிக்கேலா |
| 167. சிறுக்கண்டல் | ம.ப.அ.த.க.பா | 4 | ஜே. சேபா |
| 168. சிறுக்கண்டல் | ம.ப.அ.த.க.பா | 6 | பே.ச. கிறிஸ்ரோ பிரவீஜினி |
| 169. சிறுக்கண்டல் | ம.சி.அ.த.க.பா | 3 | அ. அருசன் யூட் |
| 170. சிறுக்கண்டல் | ம.சி.அ.த.க.பா | 3 | ஜீ. அபிநயா |
| 171. முருங்கன் | ம.மு.ம.வி.ஆ.பா | 3 | தே. ஜொனாத்தன் |
| 172. வேப்பங்குளம் | வ.வி.க | 3 | ம. யசிந்தா |
| 173. வேப்பங்குளம் | வ.கூ.சி.வி | 3 | செ. வினோஜன் |
| 174. ஓமந்தை | வ.நொ.க.உ.வி | 4 | வே. இளமாறன் |
| 175. ஓமந்தை | வ.நொ.க.உ.வி | 4 | அ. புகழினி |

**100 புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவியர்
அனைவருக்கும் மன்னாவின் மகிழ்வான
பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# சகோதரத்துவமே அமைதிக்கு அடித்தளமும் வழியும்

## திருத்தந்தை பிரான்சிஸ்

சகோதரத்துவம் இன்றி, ஒரு நீதியான சமூகத்தையும், உறுதியான மற்றும் நிலைத்த அமைதியையும், கட்டியெழுப்ப இயலாது என்பதால், சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் குடும்ப உறுப்பினர்களின் பொறுப்புணர்வை வலியுறுத்தி 2014ம் ஆண்டின் ஜனவரி முதல் நாளன்று கொண்டாடப்படும் உலக அமைதி தினத்திற்கான தன் செய்தியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



"சகோதரத்துவம், அமைதிக்கு அடித்தளமும் வழியும்" என்ற தலைப்பில் உலக அமைதிதினச் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை, உலகின் பல பகுதிகளில், அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிராக, குறிப்பாக வாழ்வுரிமை மற்றும் மதச் சுதந்திர உரிமைக்கு எதிராக நிகழும் கடும் குற்றங்கள், மனித வியாபாரம், ஆயுதச் சண்டைகளுக்கு இணையான பொருளாதார மற்றும் நிதித் துறைகளில் இடம்பெறும் சண்டைகள், ஏற்றத்தாழ்வுகள், வறுமை, அநீதியின் பல வடிவங்கள் போன்றவை சகோதரத்துவம் பெரும்பாலும் இல்லை என்பதையும் ஒரு தோழமைக் கலாச்சாரம் உலகில் இல்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றன என்று கூறியுள்ளார்.

மட்டுமீறிய தனியுரிமைக் கோட்பாடு, தன்னையே மையப்படுத்தும் நான் எனும் முனைப்பு, பொருளாதார நுகர்வு ஆகியவற்றை ஆதரிக்கும் புதிய கருத்துருவாக்கங்கள் சமூகப் பிணைப்புகளைப் பலவீனப்படுத்துகின்றன எனத் திருத்தந்தை கவலை தெரிவித்துள்ளார்.

சகோதரத்துவத்துக்கு நாம் இயல்பாகவே அழைக்கப்பட்டிருந்தாலும் அந்த அழைப்பை மறுதலிக்கும் தீய சக்தியும் நம்மில் உள்ளது என்பதை பழைய ஏற்பாட்டின் காயின், ஆபேல் கதை நமக்கு உணர்த்துகிறது எனக் கூறும் திருத்தந்தை, மனித சகோதரத்துவம் சிறப்பான முறையில் இயேசு கிறிஸ்துவில், இயேசு கிறிஸ்துவால் அவரது மரணம் மற்றும் உயிர்ப்பு வழியாகப் புத்துயிரளிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். சகோதரத்துவம் ஏழ்மையை ஒழிப்பதற்கு ஒரு முன்நிபந்தனை. பொருளாதாரத்தில் சகோதரத்துவத்தை மீண்டும் கண்டுணர்தல் போரைத் துடைத்தழிக்கின்றது. ஊழலும் திட்டமிட்ட குற்றமும் சகோதரத்துவத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளன. சகோதரத்துவம் இயற்கையைப் பேணிப் பாதுகாக்க உதவுகின்றது என்ற தலைப்புகளிலும் அமைதிக்கு சகோதரத்துவத்தின் தேவை குறித்து தன் அமைதி தினச் செய்தியில் திருத்தந்தை விளக்கியுள்ளார்.

## புற்றுநோயால் இறந்துகொண்டிருந்த எட்டு வயதுக் குழந்தையின் இறுதி ஆசை!
## 4000 பேர் ஒரே சமயத்தில் கூடி நத்தார் கீதம் இசைப்பு



அரிதாக ஏற்படும் குருதிப்புற்று நோயால் பாதிக்கப்பட் 8 வயது சிறுமியின் விருப்பத்தை பூர்த்திசெய்யும் வகையில் பல்லாயிரக்கணக்கானோர் கூடி நத்தார் கீதம் இசைத்து நெகிழவைக்கும் சம்பவம் அமெரிக்க பென்சில்வேனியா மாநிலத்தில் கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. டான்லி பிறவுண் என்ற மேற்படி சிறுமிக்கு அரிய வகை குருதிப் புற்றுநோய் ஏற்பட்டிருப்பது கடந்த 2013 மே மாதம் அடையாளம் காணப்பட்டது. இந்நிலையில் சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் இன்னும் சில நாட்கள் மட்டுமே உயிர்வாழ்வார் என்ற அதிர்ச்சியை வெளியிட்டனர்.

இதனையடுத்து சிறுமியின் பேஸ்புக் இணையதளத்தில் சிறுமியின் நத்தார் கீதத்தை செவிமடுப்பதற்கான இறுதி ஆசையை அறிந்துகொண்ட மேக் ஏவிஷ் மன்றம் என்ற அமைப்பு சிறுமியின் ஆசையை பூர்த்திசெய்வதற்கு தீர்மானித்தது. அமெரிக்க பிரபல பொப் இசைக்கலைஞரான டெய்லர் சுவிப்டுடன் அந்நிறுவனம் தொடர்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து அம்மன்றத்தின் ஏற்பாட்டில் 4000 பேருக்கு அதிகமானோர் கடந்த டிசம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை வெஸ்ட் றீடிங்கிலுள்ள சிறுமியின் இல்லத்திற்கு முன் ஒரே சமயத்தில் ஒன்றுகூடி நத்தார் கீதம் இசைத்து சிறுமியை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். இந்நிகழ்வில் டெய்லர் சுவிப்ட்டும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்மஸ் தினத்தன்று அதிகாலையில் சிறுமியின் உயிர் பிரிந்தது.

## 19 புதிய கர்தினால்கள்

பாப்பரசர் பிரான்சிஸ் புதிய கர்தினால்களை பெப்ரவரி மாதம் நியமிக்கவுள்ளார். அவர்களில் 16 பேர் 80 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாவர். இதன் பிரகாரம் அவர்கள் பாப்பரசர் பதவி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படக்கூடிய நிலையிலுள்ளவர்களாவர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இடம்பெறவுள்ள வைபவத்தில் உத்தியோக பூர்வமாக இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். புதிய கர்தினால்கள் இத்தாலி, ஸ்பெயின், ஜேர்மனி, நிகரகுவா, கனடா, பிரேசில், ஆர்ஜென்டினா, தென்கொரியா, சிலி, பிலிப்பைன்ஸ், சென்லூசியா தீவு, ஹெயிட்டி மற்றும் புர்கினோ பஸோ ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் ஸ்பெயின், இத்தாலி சென்லூசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 80 வயதுக்கு மேற்பட்ட 3 கர்தினால்கள் உள்ளடங்குகின்றனர்.

## வத்திக்கான் சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில்
## நபர் தீக்குளிப்பு

வத்திக்கானில் சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் 51 வயது நபரொருவர் கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் திகதி அன்று தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி தீக்குளித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அந்நபர் உடலின் மேற்பகுதி தீயில் கருகிய நிலையில் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்நபர் எதற்காக தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டார் என்பது அறியப்படவில்லை.

அந்நபரின் உடலில் பரவிய தீயை இரு பொலிஸார் போர்வையை மூடி அணைத்தனர். மேற்படி நபர் தன்னுடன் தனது மகளின் விலாசத்தை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

## திருத்தந்தையின்
## நோயாளர் தினச் செய்தி

2014ம் ஆண்டு பெப்பரவரி 11ம் திகதி கொண்டாடப்படும் 22வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கான செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார். திருஅவை, கிறிஸ்துவின் பிரசன்னத்தை நோயாளிகளில் சிறப்பாகப் பார்க்கின்றது என்றும், நாம் ஒவ்வொரு துன்பத்தையும் அவரோடு ஒன்றித்து அவரில் எதிர்கொள்வதற்குத் தேவையான துணிச்சலை கடவுள் தருகிறார் என்றும் உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கான செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

ஐந்து முக்கிய கருத்துக்களை இச்செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், பிறரன்பில் ஈடுபடுவது குறிப்பாக, துன்புறுவோர், ஒதுக்கப்பட்டோர் போன்றோருக்குப் பிறரன்புப் பணிகளைச் செய்வது கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு வைக்கப்படும் உண்மையான பரிசோதனை எனவும் கூறியுள்ளார்.

நமது அக்கறை தேவைப்படும் மக்களிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். நாமும் நமது சகோதரர்களுக்காக நம் வாழ்வை வழங்க வேண்டும் என்பது 22வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்தின் மையக் கருத்தாகும்.

## 'அல்லாஹ்' சொற்பிரயோகத்தில் சர்ச்சை
## மலேஷியாவில் பைபிள்கள் பறிமுதல்

மலேசியாவில் அல்லாஹ் என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலைக்கு மத்தியில் அந்நாட்டு இஸ்லாமிய நிர்வாகிகள் கிறிஸ்தவ குழுவொன்றிடம் இருந்து நூற்றுக்கணக்கான பைபிள்களை பறிமுதல் செய்திருப்பதோடு அந்தக் குழுவின் இரு அதிகாரிகளையும் கைது செய்துள்ளனர். மலாய் மொழியில் கிறிஸ்தவர்கள் இறைவனை 'அல்லாஹ்' என்று பயன்படுத்துவதைத் தடைவிதித்து அந்நாட்டு கத்தோலிக்க பத்திரிகைக்கு எதிராக மலேஷிய நீதிமன்றம் கடந்த ஒக்டோபரில் உத்தரவிட்டது. இந்த தீர்ப்பை முஸ்லிம் பழைமைவாதிகள் வரவேற்றபோதும் இது மதங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

# புனிதர்களின் பாதையில்

## புனித அருளானந்தர், சே.ச
(மறவ மண்ணில் மலர்ந்த மறைசாட்சி - கி.பி. 1693)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் உயர் குலத்தில் தோன்றியவர். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். இவரும் இவர்தம் இரு சகோதரர்களும் அரச அவையில் உள்ள குழந்தைகளுடன் விளையாடும் அளவுக்கு அவர்களின் குலப்பெருமை விளங்கியது. சிறுவன் ஜோன் தொடக்கத்திலிருந்தே உடல் நிலையில் பின்னடைவைச் சந்தித்து வந்தார்.

11 வயதில் உயிர் பிரிந்துவிடும் என அஞ்சும் அளவிற்கு இவரை நோய் தாக்கியது. தாய் புனித பிரான்சிஸ் சவேரியாரை நோக்கித் தன் பிள்ளைக்குக் குணம் பெற்றுத் தரவேண்டும் என்று மன்றாடினார். புதுமையாக ஜோன் பிழைத்துக்கொண்டார்.

பின்னர் 1662ல் இவர் இயேசு சபையில் சேர்ந்தார். குருப்பட்டம் பெற்றபின் இந்தியாவுக்குக் கிறிஸ்துவின் ஒளியைக் கொண்டுவந்தார். முதலில் கோவாவில் தங்கி இறுதிப் படிப்புகளை முடித்துக்கொண்டார். பிறகு மதுரை மறைபரப்புத் தளத்திற்கு வந்தார். தமிழைத் திறம்படக்கற்றுக்கொண்டார். இன்று போற்றப்படுகின்ற "தாயகமாக்குதல்", "பண்பாட்டுமயமாக்குதல்" என்ற முறைகளை, ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே, எவரின் தூண்டுதலும் இல்லாமலேயே செயல்படுத்தினார். இதனால் இயேசு சபை மாநிலத் தலைவர்கள் உட்பட பலரும் இவருக்கு எதிராக வெகுண்டு எழுந்தனர். மீண்டும் இவரை இத்தாலிக்கு அனுப்பிவிடவும் எண்ணினர். இவரோ இந்தியத் துறவிபோல் காவி உடை அணிந்து, இந்தியனாகவே வாழ்ந்து, தமிழக மக்களின் அன்பையும் வணக்கத்தையும் பெற்றார். அதன் வழியாக ஆயிரக்கணக்கானவர்கள் மெய்மறையைத் தழுவினர்.

இராமநாதபுரத்தில் மறவர் குலத்தைச் சேர்ந்த அரசு குடும்பத்தினர்கள்கூட இவரால் மெய்மறையில் சேர்க்கப்பட்டனர். இதன் பொருட்டே இவர் உயிர் துறக்க வேண்டியதாயிற்று.

இவரது கடைசி நாட்களில் இவர் புதுமை வரமும் பெற்றிருந்தார். இவரது செபத்தின் பயனாகக் கொடிய நோயுற்றோர் பலரும் புதுமையாக நலம் பெற்றனர். இதைப் பார்த்த அந்தணர்கள் இவர் பேய் வித்தையின் கார்ணமாகக் குணப்படுத்துகிறார் என்று குற்றஞ்சாட்டினர். குறு மன்னர் தடியத்தேவர் கொடிய நோயினால் அல்லலுற்ற வேளையில் அருளானந்தரின் செபத்தினால் நலமடைந்து திருமுழுக்குப் பெற்றார். இந்தச் சிற்றரசனுக்கு ஐந்து மனைவிகள் இருந்தனர்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 28.

## வாழ்க்கைத் தெரிவுக்கு முன் தீர்க்கமான தீர்மானம் முக்கியம்

### மனைவிமார் 'மாபியா' (mafia) போன்றவர்களா?

'மாபியா' (Mafia) என்றால் 'குற்றச்செயல்களில் ஈடுபட்டு பணம்பறிக்கும் குற்றவாளிகளைக் கொண்ட இரகசியமான குழுவினர்' என அகராதி விளக்கம் தருகிறது. இவர்கள் வழிப்பறிக் கொள்ளையர்களாகவும், கடல் கொள்ளையர்களாகவும் அடையாளம் காணப்படுகின்றனர். பொதுவாக பணம், பெறுமதியான சொத்துக்களைச் சூறையாடுவது, கடத்திச்சென்று கப்பம் வாங்குவது போன்றவை இக்குழுக்களின் நோக்கங்களாக இருக்கின்றன. அதேவேளை, ஆங்காங்கே பணத்திற்காக 'மாபியா'க்கள் உயிர்களைப் பறித்த சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இத்தாலி, ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், சோமாலியா, நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளிலும் 'மாபியா' குழுக்கள் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

'மாபியா'வுக்கான விளக்கம் இவ்வாறிருக்க, மேற்சொன்ன தலைப்பிலுள்ள கேள்வி, "மனைவிமார் 'மாபியா' போன்றவர்களா?" என்பதற்கான பதில், "இல்லை, இருக்காது, இருக்கவே இருக்காது!" என்றாகத்தான் அமையவேண்டும்! எனினும், "'மாபியா'க்களிலும் பார்க்க மனைவிமார் பயங்கரமானவர்கள்" எனக் குறிப்பிட்ட ஒருவர்," 'மாபியா'க்கள் பணத்தை அல்லது உயிரைப் எடுப்பார்கள், மனைவிமார் இரண்டையும் எடுப்பார்கள்!" எனச் சொல்லி முடித்தார்.

இதனை வாசித்ததன்பின் எத்தனை 'மாபியா மனைவிப் படையணி'களின் முற்றுகைகளுக்கு யான் உட்படவேண்டி வருமோ எனக் கொஞ்சம் பயமாகவும் இருக்கிறது! காரணம், நல்ல பல அன்புள்ள, பாசமுள்ள மனைவிமார்களை 'மாபியா'க்களுக்கு ஒப்பிடுவது எவ்வளவு 'சீரியஸ்' ஆனது? 'அவன் எவனோ இதைச் சொன்னான் என்று, இவன் எவனோ இதை எழுதுகிறான்' எனக்கூறிவிட்டு அன்புள்ள மனைவிமார் தங்கள் பணிகளைத் தொடரவேண்டியதுதான்.

### 'மாபியா' அணுகுமுறை!

சில குடும்பத் தலைவிகளைப் பார்க்கின்றபோது 'மாபியா' குழுக்களில் அங்கத்துவம் வகிப்பவர்கள் போலவும் படுகிறது! ஏனெனில், இக்குடும்பத் தலைவியர் 'மாபியா'க்களைப்போல பயங்கரத் தோற்றத்தையும், நடை உடை பாவனைகளையும் கொண்டிருக்கிறார்கள்! இதனால்தானோ என்னவோ, சில குடும்பத் தலைவர்கள் மிக அத்தியாவசியத் தேவைகளான சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது போன்றவற்றுக்கு மட்டும் வாயைத் திறக்கிறார்கள். மற்றப்படி, இவர்கள் 'அம்மாவின் சொல்கேட்டு நடக்கின்ற நல்ல பிள்ளை'களாக இருந்துகொள்கிறார்கள். தவிர்க்கக்கூடிய உள்வீட்டு அசம்பாவிதங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு இக்குடும்பத் தலைவர்கள் கையாளுகின்ற ஒரு யுக்தியென்றுகூட மேற்குறிப்பிட்ட நடத்தையைக் கூறலாம். எது எப்படியோ, உண்மையில் இக்குடும்பத் தலைவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான வழிகளைத் தெரிந்து வைத்திருக்கின்ற ஞானிகளாகவே அவர்களைக் கருதவேண்டியிருக்கிறது.

அதேவேளை, சில ஆண்களைச் சமாளிக்க சில மனைவியர் 'மாபியா'க்களாக மாறவேண்டிய கட்டாயமும் இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது. ஏனென்றால், பொறுப்புள்ள குடும்பத் தலைவர்களாக அவர்கள் முழுமையாகச் செயற்படாதவிடத்து 'மாபியா' அணுகுமுறைதான் எதிர்பார்க்கப்படும் நேர்மறை விளைவுகளைத் தருமென்றால் குடும்பத்தலைவியர் 'மாபியா' அணுகுமுறையைக் கடைசி ஆயுதமாகப் பயன்படுத்துவதில் குற்றமோ குறையோ இல்லை என்றுதான் நியாயப்படுத்த வேண்டியிருக்கிறது. பொறுப்பற்ற குடும்பத்தலைவர்களை பொறுப்புமிக்கவர்களாக்க இனியாவது உருவாகட்டும் 'மாபியா மங்கையர் படையணியினர்'!

### மனைவியர் ஒளியாக மிளிரவேண்டியவர்கள்

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் சுவாரசியமாகச் சொல்லப்பட்டாலும், 'மனைவி' என்ற வார்த்தை எப்படி வந்தது, எத்தகைய அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டால் மனைவியர் ஒளியாக மிளிர்வர் எனத்துணிந்து கூறலாம். 'மனைவி' என்ற வார்த்தை இரு வார்த்தைகளில் இருந்து வருகிறது. 'மனை' என்றால் வீடு என்று பொருள். 'வி' என்றால் விளக்கு என்று அர்த்தம். அதாவது மனைவி, வீட்டுக்கு விளக்காக இருப்பவள் என்று அர்த்தம் பெறுகிறது. 'மனைக்கு விளக்கு' என்பதுதான் காலோட்டத்தில் மருவி 'மனைவி' ஆனது என்று கூறுபவர்களும் உண்டு. அப்ப, மனைவிமார் வீட்டின் விளக்குகளாக விளங்கவேண்டியவர்கள்தானே!

### "மாங்கல்யம் தந்துநானேன்..."

"மாங்கல்யம் தந்துநானேன் மமஜீவன் கேதுனா கண்டேட் டே பத்நாமி சுபகே சஞ்சீவ சரதஸ்ஸம்..." என்ற மந்திரமானது, 'இது புனிதமான கயிறு. நான் நல்லபடியாக ஜீவித்திருக்க வலிமை தருவது. இதை நான் உன் கழுத்தில் அணிவிக்கிறேன். நீ எல்லாவித நலன்களும் சிறப்புக்களும் பெற்று நூறு வயது வாழ்வாயாக' என்ற அர்த்தத்தில் இந்துசமய திருமணச் சடங்கின்போது தாலிகட்டும்போது ஆசிகூறப்படுகிறது. இதேபோல கிறிஸ்தவ திருமணத் திருவருட்சாதனத்தில், "என் அன்பிற்கும் பிரமாணிக்கத்திற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தைத் தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் அணிந்துகொள்ளுங்கள்/ அணிந்துகொள்கிறேன்" என மணமக்கள் இருவரும் ஒருவருக்கொருவர் வாக்குறுதியளிக்கின்றார்கள்.

ஆயினும், பெரும்பாலான எங்கள் இராஜகுமாரர்களும் இராஜகுமாரிகளும் (திருநிறைச் செல்வர்களும் செல்விகளும்) முறையே தாலி கட்டுவதிலும் தாலி அணிந்துகொள்வதிலும் காட்டுகின்ற ஆர்வத்தை, மேற்சொன்ன ஆசீர்களின் பொருள் உணர்ந்து வாழ்வதில் வெளிப்படுத்துவதில்லை என்று நினைக்கிறபோது இதயம் கனக்கிறது. ஆண்டவர் இயேசுகூட அருள்கொடை பெற்றவர்தான் உண்மையான இல்லறவாழ்வைப் பொருளுணர்ந்து வாழமுடியும் எனத் தமது போதனையில் குறிப்பிடுவதை மத்தேயு 19/11இல் காணலாம். அருள் இல்லையென்றால் வாழ்வதன் பொருள் இருக்காது என்பதனைத் தம்பதியினர் எப்போது உணரப்போகின்றார்களோ?

### மணமக்களும் மல்யுத்தக்காரர்கள் மாதிரியா?

திருமணச் சடங்கின்போது நம்பியும் நங்கையும் (மணமக்கள்) கைகுலுக்கிக் கொள்கிறார்கள் அல்லது கைபிடித்துக் கொள்கிறார்கள். இதன் வெளிப்படையான அர்த்தம் ஒருவரை ஒருவர் வாழ்த்துகிறார்கள், ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இக்கைகுலுக்கலை வேறொரு கோணத்தில் இருந்து பார்த்தால் இதன் ஆழமான இன்னுமோர் அர்த்தம் புலப்படும். உண்மையில், மல்யுத்தக்காரர்களும் மல்யுத்தத்திற்கு முன் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்தானே! அதுபோலதான் மணமக்களும் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்; இனிமேல்தான் மல்யுத்தக்காரர்களைப்போல பிரண்டு உருண்டு விளையாட இருக்கிறார்கள். யாருக்கு வெற்றியென்று அதன் பின்னர்தான் தெரியவரும்!

இவ்விளையாட்டில் பொதுவாக ஆண்கள் தோற்றுப்போனாலும், தாங்கள் தோற்றுப்போவதாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். 'ஆம்பிள (ஆண்) தோற்றுப்போவதா?' என்ற 'கொம்பிளக்ஸ்'இல் (complex) உழல்பவர்கள் தோல்வியை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? தோற்றுப்போனவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வென்றவர்களுக்கு யார் தோற்றவர்கள் என்று விளங்கும்தானே! மல்யுத்த விளையாட்டைப்போல நடுவரை வைத்துத் தீர்மானிக்கின்ற போட்டியென்றால், ஒரு நடுவரை வைத்து யார் வெற்றிபெற்றவர்கள் என இலகுவாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். என்னசெய்வது?, நடுவரை வைத்துக்கொண்டு விளையாடுகின்ற விளையாட்டா 'அந்த விளையாட்டு'!

### அடுத்தவனுடைய 'ஓடர்'ரைப் (order) பார்த்து ஆசைப்படக்கூடாது

திருமணம் செய்துகொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் 'றெஸ்ரோறன்ற்'க்கு (restaurant) நண்பர்களுடன் சாப்பிடப் போகின்றவர்கள் போன்றவர்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானதை 'ஓடர்' (order) கொடுத்துப் பெற்றுக்கொள்கிறார்கள். பின்னர், அடுத்தவன் தனக்குப் பிடித்ததுபோல் 'ஓடர்' கொடுத்து வைத்திருப்பதைப் பார்த்ததும், "அடே, அதனை நானும் 'ஓடர்' கொடுத்திருக்கலாம்" என யோசிக்கிறார்கள். இதுபோலத்தான் திருமணமும்! தங்களுக்குப் பிடித்தாற்போல்தான் துணையைத் தேடிக்கொள்கிறார்கள் அல்லது தெரிவுசெய்துகொள்கிறார்கள். எனினும் அடுத்தவன் தனக்குப் பிடித்தாற்போல் தன் துணையைத் தெரிவுசெய்ததும், "அடடா, நம்மளும் இவன்ர துணையைப்போல கண்ணழகியா, காதழகியா, கொஞ்சம் சிவப்பான ஆளா தெரிவுசெய்திருக்கலாம்!" என்று பெருமூச்சு விடுகிறார்கள்.

அதனால்தானோ என்னவோ சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் காற்றில் வெப்பநிலையின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது. காரணம், இக்காலங்களில்தானே திருமணங்களும் அதிகமாக நடைபெறுகின்றன. திருமணங்களும் அதிகமாக நடைபெற நடைபெற மேற்சொன்னதுபோல மற்றவர்களின் 'ஓடர்'களைப் பார்த்ததும் பெருமூச்சுக்களும் அதிகரிப்பது இயல்புதானே! சித்திரையில் புத்திரன் கூடாது என்பதால் ஆடி மாதத்தில் பொதுவாகத் திருமணங்கள் நடைபெறுவதில்லை. ஆடிமாதத்தில் திருமணம் நடைபெறுவதற்கும் 'சித்திரை புத்திரன்' பிறப்பதற்கும் என்ன தொடர்பு என சிலர் கேள்வி எழுப்புவது புரிகிறது? இதுகூட விளங்கவில்லை என்றால் என்ன செய்யமுடியும்?

ஆடி மாதத்தில் திருமணம் நடைபெற்றால் அவ்வாண்டைத் தொடர்ந்து வருகின்ற சித்திரை மாதத்தில் பொதுவாகக் குழந்தை கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாயிருக்கும். அதனால்தான், ஆடிமாதத்தில் திருமணங்கள் இடம்பெறுவதில்லைப்போலத் தெரிகிறது. கணக்கைச் சரியாகச் செய்து பார்த்தீர்களே என்றால் ஆடி மாதத்திற்கும் சித்திரை மாதத்திற்கும் இடையிலான தொடர்பு தெரியவரும்! மேற்சொன்னவை எல்லாம் ஒருபுறமிருக்க, புவி வெப்பமடைவதற்கு பல காரணங்களைக் கூறுகிறார்கள். புவி வெப்பமடைவதற்கு சிலவேளைகளில் தம்பதியரின் வெப்பப் பெருமூச்சுக்களும் ஒரு காரணியாக இருக்கலாம்போலவும்படுகிறது.

### அண்ணோய்! புதுப்புது 'மொடர்'களை நம்பி, மோசம் போகக்கூடாது!




வெளிநாட்டவர் ஒருவர் ஆண்களைப்பற்றிச் சொல்கின்றபோது கூறுகிறார்; ஆண்கள் நான்கு விடயங்களில் பொதுவாகத் திருப்திகொள்ள மாட்டார்களாம்! அவை ; 1. கைத்தொலைபேசி, 2.மோட்டார் சைக்கிள்/கார், 3.தொலைக்காட்சி, 4.மனைவி ஆகியவையாம்! ஏன் தெரியுமா? அயலில் எப்போதுமே உயர்தரமான வகைமாதிரிகள் (better models) வந்துகொண்டே இருப்பதால்தானாம்! அண்ணோய்! ஆண் சிங்கங்களே! அயல்வீட்டுகளில் பலவகை 'மொடல்கள்' (models) மாறிக்கொண்டிருக்கும்! அயல்வீட்டு 'மொடல்களை'ப் பார்த்து, அவற்றைப்போல வடிவான 'மொடல்'களாக மாற்ற எண்ணி, கையிலுள்ள சுமாரான 'மொடல்'களைக் கைநெகிழ்ந்து போகாமல் பார்த்துக்கொள்வது புத்திசாலித்தனமானது. 'அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதை'யாகாமல் பார்த்துக்கொள்வது உசித்தமானதுபோல் தெரிகிறது.

### இடம்பெயரும் 'சனிப்பெயர்ச்சி'!

பலருடைய திருமண, குடும்ப வாழ்க்கையில் இராசிப்பலன், சனிப்பெயர்ச்சி, நட்சத்திரம், சாஸ்த்திரம் போன்றவை எவ்வாறு தாக்கத்தைச் செலுத்துகிறது என்பதை இந்தியா திருச்சி மறைமாவட்ட அருள்தந்தை வை. இருதயராஜ் அழகாகக் குறிப்பிடுவார். காதலனும் காதலியும் உல்லாசமாகப் போய்க்கொண்டிருந்தபோது முள் ஒன்று அவள் காலில் குத்த அவன் துடிதுடித்துப் போனான். இங்கு கவனிக்க வேண்டியது: அவள் காலில் குத்த, அவன் துடிதுடித்துப் போவதை! "சனியன் புடிச்ச முள்! இதுல கிடக்கிது. கண்ணே கவனம், நாம்தான் பாத்து நடக்கவேணும்" என்றான் தன் காதலியிடம்.

காதலர்களான இவர்கள், திருமணமாகி, ஆறு மாதங்களின் பின் அதே வழியால் வருகின்றபோது மீண்டும் முள் அவள் குதியில் குத்துகிறது. இப்போது அவன், "சனியனே! உனக்குப் பாத்து (பார்த்து) நடக்கத்தெரியாது? களுத (களுதை), கண்ணிருக்குத்தானே பாத்து நடவன்!" என்றானாம். இவ்விடத்தில் அருள்தந்தை வை. இருதயராஜ் கண்டுபிடித்த கண்டுபிடிப்புத்தான் மிக முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியது. இக்கண்டுபிடிப்புக்களை திருமணத்திற்காக ஆயத்தம் செய்யப்படுகின்ற வகுப்புகளிலோ அல்லது திருமண கருத்தமர்வுகளிலோகூடச் சொல்லிக் கொடுத்திருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு! அந்தக் கண்டுபிடிப்பு இதுதான்: காதலிக்கின்றபோது அதாவது திருமணத்திற்கு முன் முள்ளில் இருந்த 'சனியன்' திருமணமாகியபின் இடம்பெயர்ந்து அல்லது இடப்பெயர்ச்சி அடைந்து மனைவியிடம் வந்த சேர்கிறது. இதற்குப் பெயர்தான் 'சனிப் பெயர்ச்சி'. சில தம்பதிகள் எப்படியான 'சனிப் பெயர்ச்சி'யால் துன்புறுகிறார்கள் என்று இப்போதர்வது புரிகிறதா?

### 'சனிப் பெயர்ச்சி' அல்ல மனப்பயிற்ச்சி வேண்டும்

இத்தகைய 'சனிப் பெயர்ச்சி'யை இராசிப்பலனோ, நாள் நட்சத்திரமோ, சாஸ்த்திரமோ ஒன்றும் செய்துவிட முடியாது. இவ்வாறான 'சனிப் பெயர்ச்சி'களைப் போக்குவதற்கு அல்லது விரட்டுவதற்கு 'மனப் பயிற்ச்சி' அவசியமானது. இவ்விடத்தில் திருமணவாழ்வு பற்றி ஒருவன் குறிப்பிடுவது தம்பதிகளின் ஆழ்ந்த சிந்தனைக்குரியது: "திருமணவாழ்வு சரியாக அமையாவிட்டால் அதற்குக் காரணம் இங்கே இருக்கும் இரண்டு பிடிவாதக்காரர்கள்தானே தவிர, எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்கள் அல்ல" என்ற இந்த வார்த்தைகள் உண்மையில் திருமணவாழ்வு பற்றி அனேகர் வைத்திருக்கின்ற மூடக்கொள்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் தவடுபொடியாக்குகின்றன என்றே கொள்ளவேண்டும். இதுக்குப் பிறகும் ஜாதகம், இராசிப்பலன், நாள்நட்சத்திரம் என நம்மவர்கள் செல்வார்களானால், 'அவர்களுக்கு ஐயோ கேடு' என்ற ஆசீர்வாதத்தைத் தவிர வேறென்ன ஆசீர்வாதத்தை ஆசிக்கமுடியும் என்று சொல்லுங்களேன்? (*'மாபியா' எண்டாலும் மல்யுத்தம் எண்டாலும் இனிக் கவனமாத்தான் இருக்கவேணும்போல கிடக்கு!... அதிர்வுகள்* தொ...ட....ரு.....ம்......உங்கள் கருத்துக்களைப் பதிவுசெய்ய : anpuomi@yahoo.com)!

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13.01.2014 - திருக்குடும்ப கன்னியர் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற ஓராண்டு நிறைவு)

# திருக்குடும்ப கன்னியர் சபை சகோதரிகளுக்கு 13.01.2013ல் பிரியாவிடை

திரு. ச. மாட்டீன் டயஸ், பேசாலை மக்கள் சார்பில்

1927ம் ஆண்டு பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தின் பங்குத்தந்தையாக அருட்பணி. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் இருந்த காலம். பேசாலை ஒரு உள்ளங்கை அளவு சின்னஞ்சிறு கிராமமாக இருந்த நாட்கள். அந்நாட்களில் மன்னார் மாவட்டமும் வவுனியா மாவட்டமும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின்கீழ் மேதகு கியோமர் ஆண்டகை அவர்களினால் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

அந்நாட்களில் பேசாலைப் பங்கில் ஒரு புதிய வரலாறு எழுதப்பட்டது. காலத்தின் தூரதரிசனத்தில் பேசாலையில் ஒரு திருக்குடும்பக் கன்னியர்மடம் இயங்கத்தொடங்கியது. இதை ஆரம்பிப்பதற்கு அடியெடுத்துக் கொடுத்த பேரருட்திரு. கியோமர் ஆண்டகை அவர்களும் அருட்திரு. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளாரும் முதன்முதலில் இங்கு பணியாற்ற வந்த பல அருட்சகோதரிகளும் இறைபதம் அடைந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன.

ஆனாலும், அன்று எழுத ஆரம்பிக்கப்பட்ட திருக்குடும்பக் கன்னியர் சபை மடத்தின் வரலாற்றுப் பேரேடு கடந்த 86 வருடங்களாக தொடர்ந்து எழுதப்பட்டுக்கொண்டே வந்தது. இந்த நீண்ட நெடுங்காலத்தில் பல அருட்சகோதரிகள் தங்கள் மேலான சேவைகளைப் பொன் எழுத்துக்களால் பொறித்து வைத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். இவர்களில் பலர் காலமாகிவிட்டபோதும் இந்த வரலாறு தொடர்ந்து எழுதப்பட்டுக் கொண்டே வந்துள்ளது.

ஆனால் அந்தப் பேரேடு மூடப்பட்டு அரக்கினால் சீல் செய்யப்பட்டு ஒரு வருடம் ஆயிற்று. இது உண்மையா ஆம் உண்மைதான். அந்த விழாதான் 13.01.2013 அன்று பேசாலை வெற்றிநாயகி ஆலய மேடையில் நிறைவேறிற்று. ஆங்கிலேயர் சொல்வதுபோல் இந்த இலக்கம் 13 ஒரு துரதிஸ்ட எண்தானோ 13ம் நாள் 2013ம் ஆண்டு.

பேசாலையின் அக்களிப்பில் களித்து, அதன் சோகத்தில் சோர்ந்து துடிதுடித்து அதன் பெருமையில் பூரித்து அதன் வளமையில் மகிழ்ந்து வளம் குன்றிய காலங்களில் உபவாசித்து செபித்து அதன் ஓலங்களில் கண்ணீர் வடித்து பிரச்சினைகள் சவால்களின்போது இருகரம் விரித்து வேண்டுதல் செய்து பேசாலையும் திருக்குடும்ப கன்னியர்களும் ஒன்றே அன்றி இரண்டல்ல என்றிருந்த நாட்களில் 13.01.2013 அன்று எமது ஆலயத்தில் திருக்குடும்ப கன்னியர்களுக்கு எமது ஆலயத்தில் பிரியாவிடை விழா.

எண்ணிப்பார்த்தால் கண்ணீர் வருகின்றது. இதயம் கரைகிறது. இது எப்படி முடிந்தது. இந்தக் கன்னியர்கள் திருநிறை சகோதரிகள் எம்மைவிட்டுப்போக முடிந்ததா? இதற்கு வேறு முடிவு இருக்கவில்லையா?

நாம் சிறுவர்களாக இருந்த அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றோம். 1950களில் நாம் இந்தக் கன்னியர்களின் அரவணைப்பில்தான் வளர்ந்தோம். அரிவரியில் அரிச்சுவடி சொல்லித்தந்தவர்கள் இவர்கள்தான். ஆண்டவராம் இயேசுவை அறிமுகம் செய்து அவரை எப்படித் தொழுவது என்று பாடம் படிப்பித்தவர்களும் இவர்கள்தான். கவளம் சோற்றுருண்டை கையில் தந்து பசிதீர்த்தவர்களும் இவர்கள்தான். நாங்கள் கிறிஸ்துவின் மறு உருவங்களாக வாழ்வதற்கு வழிசொல்லித் தந்தவர்களும் இவர்களேதான்.

உண்மைதான்!அன்று கையளவு இருந்த பேசாலைக் கிராமம் இன்று மெய் அளவு வளர்ந்துவிட்டது. விசாலித்துவிட்டது. பல்துறையிலும் மக்கள் வளர்ந்துவிட்டனர். அதன் பொருள் இங்கு கன்னியர்களின் தேவை இல்லை என்பது இல்லையே. அவர்களின் சேவை தேவையில்லை என்பதும் இல்லையே. கழுத்தை அழகு செய்த முத்தாரம் கண்முன்னால், பார்த்திருக்க நழுவிப்போனது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது. மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் முழித்துக்கொண்டிருந்தோம். அன்றைய திருப்பலியிலும் மௌன சோகமே இழையோடி இருந்ததை எம்மால் உணர முடிந்தது. பூசையில் இசைக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல கீதங்களாயிருந்தும் ஏன் அவை சோக உணர்வைச் சுரந்தன.

புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் பணித்தளங்களில் இது போன்ற 86 ஆண்டுகளைக் காண அடுத்த நூற்றாண்டுவரை காத்திருக்க வேண்டியிருக்கும். இன்னும் 16ஆண்டுகளை மட்டும் நிறைவுசெய்தால் பேசாலையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முடியும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதுதான் பணிக்குழுமங்களின் நோக்கமாக இல்லாமல் இருந்தாலும்கூட அவ்விதமான நிறைவுகள் சபையின் வரலாற்றில் மைல் கற்களாக நிமிர்ந்து நிற்குமே.

திருக்குடும்பக் கன்னியர்கள் பேசாலையிலிருந்து பிரியாவிடை பெறப்போகிறார்கள் என்ற செய்தி காற்றோடு கலந்து எம்மை வந்து சேர்ந்தபோது கிராமத்தில் இருந்து எழுந்த பாடசாலை (சென். மேரிஸ் பெண்கள் வித்தியாலயம்) சம்பந்தமான கருத்து மாறுபாடுகளும் அவற்றோடு இணைந்த வார்த்தைப் பிரயோகங்களும்தான் காரணம் என்று பேசப்பட்டது. அது உண்மையாக இருக்கமுடியாது என்று நாம் முழுமையாக நம்புகின்றோம். 86 வருடங்கள் கட்டிக்காத்த பிணைப்புக்கள், உறவின் நெருக்கங்கள், உணர்வுகளின் இறுக்கங்கள் - சாதாரண யாரோ சொன்ன ஒன்றுமே இல்லாத சில விமர்சனங்களினால் அறுந்துபோகத் தகர்ந்து போக முடியும் என்று நாம் நிட்சயமாக நம்பவில்லை.

திருக்குடும்பக் கன்னியர் 86 வருடங்களாக ஆற்றிய அளப்பரிய சேவைகள் இன்றும் எம் மக்கள் மத்தியில் அவர்கள் உள்ளங்களில் பசுமையாக – வாடாத மலர்களாகப் பூத்திருக்கின்றன. இந்தத் தலைமுறை வாழும்வரை அந்த உணர்வுகளும் உயிரோட்டமும் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

வாழ்க உங்கள் சேவை!

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக்காணும் அருட்சகோதரி அருள் மரியா

சாவகச்சேரி புனித லிகோரியார் பங்கில் முதலாவது தேவ அழைத்தலைப் பெற்று, கார்மேல் சபையில் சேர்ந்த அருட்சகோதரி அருள்மரியா, 2014ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி, தனது வாழ்வின் 25ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடினார்.

இவர், காலஞ்சென்ற இம்மானுவல், அன்னம்மா தம்பதிகளின் ஒன்பதாவது பிள்ளையாக 1964ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ம் திகதி யாழ் நகரில் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் உயர் தரத்தை, அச்சுவேலி புனித திரேசா கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

1985ம் ஆண்டு கார்மேல் சபையின் நவ சந்நியாசி பயிற்சியை மேற்கொண்டு 1989ம் ஆண்டில் பயிற்சியை நிறைவுசெய்து அதே ஆண்டில் திருகோணமலை புனித சூசையப்பர் மடத்தில் - தன் துறவறப் பணியை ஆரம்பித்தார். 1992ம் ஆண்டில், திருகோணமலை புனித மரியாள் தேசிய பாடசாலையில் முதல் நியமனம் பெற்று, ஆசிரியப் பணியிணை ஆரம்பித்த இவர், 1996 – 1997 வரையிலான காலப்பகுதியில் மட்டக்களப்பு , ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை மேற்கொண்டு, 1999 – 2005 வரையிலான காலப்பகுதியில், கொழும்பு, கொள்ளுப்பிட்டி, புனித அந்தோனியார் பெண்கள் மகா வித்தியாலயத்தில், பகுதித் தலைவராகக் கடமையேற்று, அலுவலகக் கருமங்களிலும், நிர்வாகத்திலும், அதிபருக்கு உறுதுணையாகத் திகழ்ந்தார்.

2005 – 2008 வரையிலான காலப்பகுதியில், சிலாபம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த புத்தளம் தேத்தாப்பளை றோமன் கத்தோலிக்கத் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்று, கஷ்ரப் பிரதேசத்திலமைந்த அப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வகைகளிலும் உழைத்து, ஏழை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவிகள் பல புரிந்தார்.

2006ம் ஆண்டு பாடசாலை முகாமைத்துவப் பயிற்சியைப் பூர்த்திசெய்த இவர் நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் 2007ம் ஆண்டு B.A. பட்டப்படிப்பையும், 2009ம் ஆண்டு டிப்ளோமா பட்டப்பின் படிப்பு பயிற்சி நெறியையும் நிறைவுசெய்து, அதே ஆண்டில், கொழும்பு, மாவத்தை, புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்றார். இன்று வரை இப்பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர், வறிய குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் மட்டில், விசேட கவனம் செலுத்தி, கல்வி வளர்ச்சியிலும், கல்விக்கப்பால் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. தான் கடமையாற்றும் பாடசாலையில், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும், ஒழுக்கநெறி முறைகளிலும் வளர்ச்சி காணப் பெரும் பங்காற்றி வரும் இவர் 2012ம் ஆண்டு தரம் 2-11 அதிபர் சேவைக்கு பதவி உயர்வு பெற்றதைக் குறிப்பிடுவதில் மகிழ்வும் பெருமையும் அடைகிறோம். நல்லாரோக்கியமும் இறையாசிரும் வேண்டி இறைவனைப் பிராத்திக்கிறோம்.

தகவல் : திரு. மரிசால் விக்டர், பிரதி அதிபர்.

காலத்தின் தேவையைக்கருத்தில் கொண்டு சிறப்பான முன்மொழிவுகளைத் தாங்கிய

# ஆயர் மன்றத்தின் அறிக்கை

சென்றமாத தொடர்ச்சி.......

### அரசியலமைப்பு

இலங்கையானது தனது மக்களுக்கு எதிரான பாகுபாடு காட்டக்கூடியதாக விளங்கும் அரசியல் யாப்பின் விதிக்கூறுகளையும் நிபந்தனைகளையும் விலக்க வேண்டும். பாகுபாடு காட்டும் எந்தச் செயற்பாடும் சந்தேகத்தையும் பிரிவினையையும் உருவாக்கும்.

1978 ஆம் ஆண்டில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டு இதுவரை 18 முறை திருத்தி அமைவுபெற்ற தற்போதைய யாப்பானது பிரதம பதவி வகிக்கும் ஒருவரின் கையில் அனைத்து ஆட்சி அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருப்பது மக்களாட்சி முறையின் அடிப்படையிலானதல்ல என்பதை திடமாகக் கூறுகின்றோம். எனவே இப்பேர்ப்பட்ட யாப்பு கைவிடப்பட்டு நிறைவேற்று அதிகாரம் போதுமான அளவு பரிசீலனைக்கு உட்படுத்தக்கூடியதொன்றாக புதிய யாப்பொன்று திருத்தியமைக்கப்பட வேண்டும்.

### சமநிலை அவசியம்

நீதித்துறையினதும் சட்டமன்றத்தினதும் சட்ட விதிகளுக்கான விளக்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சியாளரோடான தொடர்பாடல் உறவு துல்லியமாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். வேற்றுமையிலும் ஒற்றுமை எனும் கொள்கை அடிப்படையில் தோன்றும் யாப்புதான் உண்மையில் ஒரு நாட்டின் கடந்தகாலக் காயங்களுக்கு குணமளிக்கும் மருந்தாக அமையும். ஒற்றுமையை நோக்கிய சமாதானம் நீதி நிறைந்த வளமான வாழ்விற்கு இதுவே வழியமைக்கும். இவ்வகையில் இதயங்களை ஒன்றினைக்கவும் யாப்பு ரீதியான கட்டமைப்புக்களை மக்களின் ஒருமைப்பாட்டிற்காக வழங்கவும் மாகாண, பகுதி ரீதியான அதிகாரப் பரவலாக்கல் இன்றியமையாததாகும். பல்லின சமூகத்தை ஏற்க மறுப்பது உண்மையான ஐக்கியத்திற்கு குந்தகமாக அமையும் ஆதலால் எமது யாப்பு உண்மையான நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு உட்படுமிடத்து அனைத்து தலைவர்களையும் அதிகாரப் பகிர்வுக்கு திறந்த மனநிலையுடன் ஒத்துழைக்க அழைக்கின்றோம்.

### நீதித்துறையின் சுதந்திரம்

இந்தச் செயற்பாட்டில் நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். சட்டங்கள் குறிக்கும் கருத்தை எடுத்துரைத்து அதை நடைமுறையில் பயன்படுத்தும் புனிதமான பணியை ஆற்றும் நீதித்துறையினருக்கு யாரும் மேலானவர்கள் என்று வாதிடுதல் மிகத் தவறானதும் நிருபிக்க முடியாததொன்றுமாகும்.

### சட்டமன்றத்திற்கு மேலாக எவரும் இருக்க முடியாது

சட்ட மன்றம்தான் சட்டங்களை வடிவமைத்து அங்கீகாரம் வழங்கி நாட்டின் சட்ட நூலாக்கத்தை உருவாக்குகிறது. ஆனாலும் நீதித்துறையினரே அவற்றை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்ப நடைமுறைப்படுத்துவார்கள். சட்ட மன்றம் இவ்விரு பணிகளையும் தனதாக்கிக்கொள்ள முடியாது. மேலும் சட்டத்திற்கு மேலாக எவரும் அதிகாரம் பெற்றவராக இருக்க முடியாது. நாட்டுத் தலைவரும்கூட சட்டத்திற்கு மேலானவராக இருக்க யாப்பில் அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் இது நிறைவேற்று அதிகாரம் பெற்றோர் ஜனநாயக முறைக்கோ சட்டத்திற்கோ எதிராக செயற்படும்போது அவர்களுக்கு சவாலாக வினா எழுப்ப முடியாத நிலைக்கு காரணமாகும். இந்த விடயத்தில் மிக முக்கிய கொள்கை என்னவெனில் எவருமே சட்டத்திற்கு மேலானவர்கள் இல்லை என்பதே. அதிகாரத்துக்கு தேர்வுசெய்யப்பட்டோர் மக்களின் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து முன்மாதிரிகைக்குரிய முறையில் நாட்டின் சட்டங்களை கடைப்பிடிப்போராக விளங்க வேண்டும். சட்டமன்றத்தினர் நீதித்துறையினர் பொறுப்பை பறித்துக்கொள்ளும் விதத்தில் யாப்பு அனுசரணை வழங்குமேயாயின் அவ்வதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

### சுயாதீன ஆணைக்குழுக்கள்

தேர்தல் ஆணைக்குழு மற்றும் காவல்துறை ஆணைக்குழு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு என்பவற்றிற்கும் அரசியல் அமைப்பு அவைக்கும் சட்டபூர்வமாக அனுசரணை வழங்க வேண்டும். இதுவே குடியரசைச் சார்ந்த மக்கள் எதிர்பாக்கும் முற்றிலும் தெளிவான நேர்மைமிகு ஆட்சியை உறுதிப்படுத்தும்.

தேர்தல் ஆணைக்குழு எல்லாக் காரணங்களிலும் தமது செயற்பாடுகளில் முழு சுதந்திரமுடையதாக இருக்க வேண்டும். ஜனாதிபதிக்கான பொதுத்தேர்தலோ உள்ளூர் தேர்தலோ அது குறிப்பிட்ட பகுதிக்கோ நாடளாவிய ரீதியிலோ ஒருமுறை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதும் அச்சமயம் பதவிவகிக்கும் ஜனாதிபதி, பிரதம மந்திரி அவரது அரசு அவை மாகாண அல்லது பிரதேச அல்லது நகரசபைகள் அனைவரின் பதவிகளும் இரத்துசெய்யப்பட்டு பதிலாக முதன்மை நீதிபதி, பாராளுமன்ற சபாநாயகர், தேர்தலின் ஆணையாளர் பொலிஸ்மா அதிபர் பாதுகாப்புச் செயலாளர் உள்ளார்ந்த நிறைவேற்று நிர்வாகத் துறையாளர் தேர்தலின் முடிவில் புதிய அதிகாரிகள் முறையே வாக்குப்பிரமாணம் எடுத்துத் தம் பதவிகளைப் பொறுப்பேற்கும்வரை இக்குழுவினரே கண்காணித்து அன்றாட நிர்வாகத்தைக் கவனிப்பார்கள்.

### மனித உரிமைகள்

நாளும் அதிகரித்துகொண்டிருக்கும் மக்கள்மீதான அரசியல் அடக்குமுறை பேரழிவிற்குரியவிதத்தில் பயன்படுத்தப்படும் யாப்பு உரிமைகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மேலும் மீறுவதாக அமைகிறது. அதிகார மோகத்தின் மேலிருந்த தணியாத தாகத்தால் சமுதாயத்தின் சில துறைகளினதும் அரச தலைவர்களினதும் தேவை, செல்வாக்கு என்பவற்றை திருப்திப்படுத்தகூடியதாகவே 1972ஆம் 1978ஆம் ஆண்டுகளில் வெளியான யாப்பு இடம்பெற்றது. இதன் காரணமாகச் சர்வதேச மனித உரிமைச் சாசனம் கடந்த 40 ஆண்டளவாக தொடர்ச்சியான சிதைவு நிலைக்கு உள்ளாயிற்று. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்பட அவசரகாலச் சட்டங்களும் அரசியல் சார்புடைய சவால்களை மேற்கொள்ள கிடைக்கப்பெற்ற சில அதிகாரங்களும் இந்நிலைப்பாட்டை மிகவும் மோசமான நிலைக்கு உட்படுத்தியது.

### மனித உரிமை ஆணைக்குழு

ஆள் கடத்தலும் காணாமல்போதலும் 1971ஆம் ஆண்டு கலவரம் முதல் இன்றுவரை இடம்பெறும் மிக மோசமான செயல்பாடுகளில் ஒன்றாகும். இதற்குப் பொறுப்பேற்கும் தன்மையும் வெகுவாகக் குறைந்துள்ளது. இந்தக் கால எல்லைக்குள் பலதரப்பட்ட அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்தபோதிலும் எவரும் நடந்த சம்பவங்களுக்கான போதுமான விளக்கம் கொடுக்கவில்லை. நாட்டின் மனித உரிமை ஆணைக்குழு இவ்விடயங்கள் மட்டில் செயற்பட அதற்கு முழுசுதந்திரம் இருக்கவில்லை.

### விசாரனைகள்

40 வருட காலப்பகுதியில் அரசியல் தலைவர்களின் படுகொலைகள் பத்திரிகை மற்றும் சமூக ஆர்வலர்களின் உயிர் பறிப்புக்கள் பற்றி இதுவரையும் தீர்க்கமான விசாரனைகள் எதுவுமே கையாளப்படவில்லை. சந்தேகங்களைத் தீர்க்கக்கூடிய இவ்வாறான விசாரனைகள் உரிய நேரத்தில் உரிய இடத்தில் இடம்பெறாதது எமக்குப் புரியாத புதிராகவே இன்றும் இருக்கின்றது. உண்மையாகவே வெவ்வேறான அரசாங்க ஆட்சிகாலத்திலேயே இவை நடந்தேறின. மேலும் அவ்வாறான ஒரு சில விசாரனைகளில் தீர்வு அறிக்கைகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதத்தையும் எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## முருங்கன் ஜெயா பாலாஜியின் கவிதைகள்

### கடலோடு என் காதல்



மலை என்ன பெரிய மலை
உம்மணாமூஞ்சியாய் இறுகிப்போய்
எப்போதும் ஒரேமாதிரி....!
என்ன ஒரு அற்புதம் இந்தக் கடல்!
எத்தனை ஆச்சரியங்களை உள்ளடக்கிக்கொண்டு
சின்னச் சின்ன சந்தோஷங்களுக்கும் சந்தோஷப்பட்டு
சின்னத் துக்கங்களுக்காகவும் துயரப்படுகின்ற
ஒரு கவிஞனின் மனம்போல
ஆரவாரிப்பதும் அடங்கிப்போவதும்
சில சமயங்களில் நிர்ச்சலனமாய் ....!
என்ன ஒரு அற்புதம் இந்தக் கடல்!
சூரியோதயமும் அஸ்தமனமும்
சூரியனையே அழகுபடுத்துகின்றதே.
இந்தக் கடல் என்ன ஒரு அற்புதம்!
கடலே உன்னோடு காதல்கொண்டிருந்தேன்
சுனாமி வரும் வரைக்கும்!



### வேறுபாடு

மெழுகுவர்த்தியே!
ஆலயத்தில் உனை ஏற்றும்போது
உன் ஒளி தெரிகிறது.
"ஒளிர்தல் என்கின்ற என் தமிழின்
அழகு தெரிகிறது.
கல்லறைகளில் உனை ஏற்றும்போது
உருகி உருகி உருமாறி
உள்ளே உறங்குகின்றவர்களை
ஒத்ததான உன் தியாகம் தெரிகிறது.
மின்வெட்டு நேரங்களிலோ
உனை ஏற்றிவிட்டு
மின்சாரம் எப்போ வருமென்று
காத்திருக்கும் வேளைகளில்
நீ உருக உருக
உன் விலை மட்டும்தான் தெரிகிறது.
உன் விலை மட்டுமேதான் தெரிகிறது.



### முடிந்ததும் முடியாததும்

என் தம்பியின் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்று.
அவன் விரும்பி அணியும் அந்த நீல நிற மேற்சட்டை.
என் பிறந்த நாளுக்கு அவன் அனுப்பிய வாழ்த்து மடல்.
நிலாவில் சோறுண்டோம்.
இன்றோ ஒன்றாய்ச் சாப்பிட
அமாவாசைக்காக காத்துக்கொண்டிருக்கிறேன்.
அவன் எழுதிய அந்த வரிகள்.
சிலுவையோடுகூடிய அவனது
அழகான ஒரு திறப்புக் கோர்வை.
எத்தனை இடப்பெயர்வுகளுக்கு மத்தியிலும்
அவன் சம்பந்தப்பட்ட இவற்றை எல்லாம்
பத்திரப்படுத்திக்கொள்ள முடிந்த என்னால்
என் தம்பியை மட்டும்
காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை!



### பெண் விடுதலை

குழந்தைகளுக்கு தாய்ப் பாசத்தையும்
கணவனுக்கு அன்பையும்
பெற்றோருக்குப் பராமரிப்பையும்
சகோதரர்களுக்கு கவனிப்பையும்
உறவுகளுக்கு மதிப்பையும்
தர மறுப்பதற்குப் பெயர் பெண் விடுதலை அல்ல.
பெண் விடுதலை என்ற சொல்லே
வெறுப்பூட்டுவதாய் மாற வேண்டாம்.
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைக்க வேண்டாம் என்று
பாரதி சொன்னானே தவிர
வீட்டைப் பூட்டிவைத்துவிட்டு
எந்நேரமும் வெளியே இருங்கள்
என்று சொல்லவில்லை.
பெண் அன்பும் பரிவும்
உள்ளவளாய் இருப்பது
பெண்ணுக்கும் மரியாதை.
பெண்களுக்காய் பரிந்து பேசிய
பாரதிக்கும் மரியாதை.



# சிறுகதை

கெ.சோபியா,
எமில்நகர் (6ம் குறுக்கு), மன்னார்.

## பாசம்

என்றும் போலவே பிரமை பிடித்தவன்போல் சிந்தனையில் மூழ்கியிருந்தான் மதுஷன். மனதில் அந்த அகோர விபத்து மீண்டும் தோன்றி திகிலூட்டியது. தாய் தந்தையுடன் மகிழ்வாகச் சென்ற அச்சுற்றுலாவானது விபத்தில் முடிந்ததால் எஞ்சியவை அவனது தங்கை எல்சியும் அந்தத் திகில் நினைவுகளுமே. ஸ்தலத்திலேயே மரணமான பெற்றோர் அக்கடைசி நேரத்தில் கூறிய வார்த்தைகள் கல்வெட்டுப்போல் அவன் நெஞ்சில் பொறிக்கப்பட்டிருந்தது. "எல்சி கவனம்! அவளை நன்றாகப் படிப்பிக்க வேணும்..." வார்த்தைகள் முற்றுப்பெறாமலே காலனோடு அவசரப்பயணமாகி விட்டார்கள்.

"அண்ணா ... அண்ணா..." எல்சியின் வார்த்தைகள் மதுஷனுக்கு சுயநினைவு ஊட்டின.

"அண்ணா நாளை இன்ரநெற்றில் பெறுபேறு பார்க்க முடியுமாம். எனக்கு கட்டாயம் நல்ல ரிசல்ஸ் வரும். அதற்குப் பிறகு நான் என்ன செய்வது?" தங்கையின் குரல் மதுஷனை மீண்டும் கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது.

பெற்றோர் இறந்தபின் தங்கையுடன் தனி மரமாய் நின்ற மதுஷனின் கண்களில் எதிர்காலம் பற்றிய அச்சமே குடிகொண்டிருந்தது. தற்கொலை செய்து கொள்வோமா என்ற எண்ணம்கூட அவனைச் சலனப்படுத்தியது. ஆயினும் எல்சியின் பிஞ்சு முகமும், பெற்றோரின் இறுதி வார்த்தையும் அவனது உள்ளத்தில் இலட்சிய வெறியை விதைத்தது. எதையும் தாங்கும் திடமான உள்ளம் கொண்டவனானான்.

தங்கையை வளர்க்க, படிப்பிக்கப் பணம் தேவைப்பட்டது. வேலை தேடி அலைந்தான். அலுவலகங்கள், கடைகள் வீடுகள் எல்லாம் ஏறி இறங்கினான். வேலைக்குப் பதில் கேள்வியே கேட்டனர். "நீ சின்னப் பொடியன். உன்னால் என்ன செய்ய முடியும்?" அதற்கு அவன் கூறிய பதில்களெல்லாம் கடலில் பெய்த மழைபோல் பயனற்றுப் போயிற்று. இலட்சியத்திற்கும் ஏமாற்றத்திற்கும் இடையே ஒரு குருஷேத்திரமே நடந்தது. இலட்சியத்தின் கை ஓங்கத் தொடங்கியது. உறவினர் ஒருவரின் உதவியுடன் கடையொன்றில் வேலை கிடைத்தது. மதுஷனின் நேர்மையும் கடமையுணர்ச்சியும் அவனது கஷ்டங்களை வென்றது. எல்சியும் அண்ணனது இலட்சியக் கனவினை உணர்ந்து கல்வியில் கண்ணானாள். அண்ணன் கூறிய அறிவுரைகளும் பெற்றோரின் ஆசையும் அவளை வகுப்பில் முதல் நிலையில் வைத்திருந்தது.

இன்று உயர்தர பெறுபேறுக்காய் காத்திருக்க வைத்தது.

மறுநாள் அதிகாலையில் மதுஷன் தங்கையின் சுட்டிலக்கத்துடன் இணையதளத்தில் பெறுபேறு பார்ப்பதற்காய்க் காத்திருந்தான். பெறுபேறு கிடைத்ததும் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தான். எல்சிக்கு மூன்று பாடங்களிலும் A சித்தி வந்திருந்தது. அண்ணனும் தங்கையும் ஆகாயத்தில் மிதந்தனர். ஊரவர்கள் மதுஷனின் தங்கையையும் அவனையும் புகழ்ந்தனர். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டும் என தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறினர்.

பட்டப்படிப்பின் பின் எல்சியை ஓர் ஆசிரியை ஆக்க வேண்டும். மாணவர்களுக்கு நல் அறிவின் மூலம் சமூகத்தில் அவர்களை நற்பிரஜைகளாக்க வேண்டும். வீதி விபத்துக்களைத் தடுக்க வேண்டுமாயின் அதற்கு நல்ல சாரதிகளை உருவாக்க வேண்டும் என்ற அவனது ஆசைகள் நிறைவேறத் தடையில்லாது போயிற்று.

# கொஞ்சம் சிரிங்க

ரவி : அவர் திடீர் பணக்காரர் ஆன பிறகும் ஆள் மாறல்ல.
கரன் : பரவாயில்லையே.... உண்மையாகவா?
ரவி : ஆமாம்! அவர் எனக்குத் தரவேண்டிய நூறு ரூபா பணம் இன்னும் தரவேயில்லையே.
*ஞா. குயின்சி, சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

தலைவர் : நீங்கதான் எங்க கழக விழாவுக்கு சீ:.ப் கெஸ்ட் ஆ வரணும்.
டாக்ரர் : அப்படியா...... நல்லது......
தலைவர் : ஆமா சார்..... எங்க கழக உறுப்பினர்களில் அதிகம் பேர் உங்களால வந்து சேர்ந்தவங்கதான் சார் .....
டாக்ரர் : அப்படியா .....? ரொம்ப மகிழ்ச்சி. உங்க கழகத்தின் பெயர்?
தலைவர் : ஆவிகள் முன்னேற்றக் கழகம்.
*பீ. மயூறி, முதலைகுத்தி, உயிலங்குளம்.*

ராஜா : மேல் நோக்கி வீசும் பொருள் கீழே நோக்கி விழக் காரணம் என்ன?
மதன் : மேலே அதைப் பிடிப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால்தான் கீழே விழுகின்றது ராஜா.

.........................................

மகன் : அம்மா எங்கள் வகுப்பில் ஒரு சிறுவன் கீழே விழுந்து விட்டான். எல்லோரும் சிரிச்சாங்க, நான் மட்டும் அழுதேன்.
அம்மா : உனக்கு ரொம்பத்தான் இரக்க குணம்.
மகன் : விழுந்ததே நான்தான் அம்மா.
*கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை*

கண்ணன் : டேய் மச்சான்! உன் மனைவியை நீ அடிக்கிறது உண்டா?
குலேசன் : சே..சே.. திட்டிறதுகூட இல்ல. ஆனால்... அடிக்கிறதெல்லாம் அவள்தான்.
*யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.*

# மன்னா விளம்பரப் பலகை

"நீ எதைச் செய்தாய் என்பதைவிட எந்த அளவுக்கு அவற்றை அன்போடு செய்தாய் என்பதே முக்கியம்" – அன்னைத்திரேசா

"நம்மிடம் ஏதும் இல்லை என்று நினைப்பது ஞானம். நம்மைத் தவிர ஏதும் இல்லை என்று நினைப்பது ஆணவம். ஞானம் பணிந்து வீழ்ந்து வெற்றிமேல் வெற்றி குவிக்கின்றது. ஆணவம் நிமிர்ந்து நின்று அடிமேல் அடி வாங்குகின்றது"
*எஸ். சோணியா, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.*

"முட்டாளின் தற்பெருமை அழிவைத் தரும்.
அதிக தேவைகள் அதிக துன்பங்கள் தரும்"
*பி. றொக்சி, கண்டல், அடம்பன்.*

நன்றாக வாழ வேண்டுமானால் முன்கூட்டியே திட்டமிடு.
நேரத்தைத் தள்ளிப்போடாதே, தாமதங்கள் அபாயமான முடிவைக் கொடுக்கின்றன.
சுருங்கச் சொல்வதே பேச்சுத் திறனின் உயிர் நாடி.
*யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.*

"தூய மனம் படைத்தவன் எதையும் தூயதாகவே நோக்குவான்"
*தே. ஜெர்மா, சாளம்பன்.*

நம்பிக்கை எதிர்பார்க்கிறது, பற்றுறுதி நம்புகின்றது.
பொறுமையோ அமைதியுடன் காத்திருக்கின்றது.
*ஜே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்.*

காத்திருக்கக் கற்றிருப்பதே செயல் வெற்றிக்கு அடிப்படை.
*தே. ஜெகன், சாளம்பன்.*

"பொன்னையும் முத்துகளையும்விட அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்"
*மெ. மெக்டலோஸ், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.*

## திருத்தந்தையைச் சந்தித்த 12.000 இலங்கை மக்கள்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

உங்களது தாய் நாட்டின் இயற்கை அழுகு மற்றும் அதன் அமைப்புக் காரணமாக அது இந்து சமுத்திரத்தின் முத்தாக அழைக்கப்படுகிறது. சிப்பிகளின் கண்ணீரில் இருந்தே முத்து உருவாவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக, பலரது இழப்புகளுக்கும் அதிக சேதங்களுக்கும் காரணமான உள்நாட்டு யுத்தத்தால் சமீபத்திய வருடங்களில் பெருமளவு கண்ணீர் சிந்தப்பட்டிருக்கின்றது என்று பாப்பரசர் தெரிவித்ததாக அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நல்லிணக்கத்துக்கான அவசியம் பற்றியும் பாப்பரசர் பிரான்சிஸ் இதன்போது பேசியுள்ளார். யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை குணமாக்குவதும், நேற்றைய எதிரியுடன் இணைந்து ஒன்றுபட்ட நாளையை கட்டியெழுப்புவதும் இலகுவான விடயமல்ல என்பது எனக்குத் தெரியும். எனினும், அபிவிருத்திக்கும் சமாதானத்துக்குமான எதிர்காலத்துக்குரிய நம்பிக்கையை அளிக்கும் ஒரே வழி அதுமட்டும்தான் என்று பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2013 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

## வினாக்களும் விடைகளும்

01. தூய ஆவியின் செயல்கள் எவை என்பதைப் பெயரிடுக?
அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்.

02. கிறிஸ்தவ மாணவன்/ மாணவியாகிய நீர் உம்மில் வளர்த்துக்கொள்ளவேண்டிய நற்பண்புகள் நான்கு எழுதுக.
- தியாகத்துடன் வாழ முன்வருவேன்.
- பாரபட்சமின்றி அனைவரையும் அன்புசெய்வேன்.
- மனித மாண்பை மதித்து பிறருடன் பகிர்ந்துவாழ்வேன்.
- தீய வழிகளில் செல்லாமல் கல்வியைக் கருத்துடன் கற்பேன்.

03. ஊனியல்பின் செயல்களைத் தவிர்ப்பதற்கு நீர் எவ்வாறு செயற்படுவீர்?
பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலை வழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டைசச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சிமனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் போன்றவற்றைத்தவிர்த்து ஒரே இறைவனை ஆராதித்து அவருக்கு உகந்தவற்றை நாடி வாழ்வேன்.

04. மனிதனுக்கு ஏன் வேலை முக்கியமானதாகின்றது?
மனிதன் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, சமூக ரீதியாக வளர்ச்சியடைவதற்கு.

05. மனித வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும்?
- மனித மாண்பைப் பேணுவதாக, - பகிர்வுடையதாக
- உண்மையான மகிழ்ச்சியைத் தருவதாக
- எல்லோருக்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

06. தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவ சமுதாயம் மேற்கொண்ட வாழ்க்கைமுறைபற்றிக் கூறும் திருவிவிலியப் பகுதி எது?
திருத்தூதர் பணிகள் நூல் 2:42-47.

07. 'அகாபே' விருந்துமுறை எதனுடன் இணைந்த நிகழ்வாகும்?
நற்கருணைக் கொண்டாட்டத்துடன்.

08. 'நற்கருணைப் பலி' என்றால் என்ன?
நற்கருணை உணவை உண்டு, இயேசுவைப்போல் வாழ்கின்ற வாழ்க்கை.

09. இஸ்ராயேல் மக்களின் விடுதலை நிகழ்வைப்பற்றிக் கூறும் நூல் எது? விடுதலைப் பயணம்

10. 2014ம் ஆண்டில் எந்தக் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மறைமாவட்டங்களில் செயற்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன? மனித மாண்பும் குடும்பமும்

11. பாஸ்கா அறிக்கையில் மையப்படுத்தப்படுவது எது?
இயேசுக் கிறிஸ்துவில் நாம் பெறுகின்ற புதுவாழ்வு.

12. பாஸ்கா திருவிழிப்பு வழிபாட்டுப் புகழ்பாடல் யாரால் பாடப்படுகின்றது? குரு அல்லது திருத்தொண்டர்.

13. நீர் உம்மில் வளர்த்துக்கொள்ளவேண்டிய இறையரசின் மதிப்பீடுகள் 5 எழுதுக?
உண்மை, நீதி, நேர்மை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை

14. மனித உடலின் உறுப்புக்களின் செயற்பாடுபற்றிக் கூறப்படும் திருவிவிலியப் பகுதி எது? 1 கொரிந்தியர் 12:13-30

15. எமக்கு இறைவனால் தரப்பட்ட ஆற்றல் திறமைகளை நாம் எவற்றுக்காகப் பயன்படுத்த வேண்டும்?
பொது நன்மைக்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும்.

16. இயேசுவின் உன்னத குருத்துவச் செபம் திருவிவிலியத்தில் எந்தப்பகுதியில் கூறப்பட்டுள்ளது? யோவான் 17:20-21

17. இயேசுவின் மீட்புப் பணியின் செய்திகள் எவற்றினூடாக வெளிப்படுத்தப்பட்டது? புதுமைகள், உவமைகள் ஊடாக.

18. யாருக்கு நற்செய்தியை அறிவிக்க இயேசு வந்தார் எனக் கூறப்படுகிறது? ஏழைகளுக்கு.

19. மத்தேயு 19:24இல் கூறப்படும் செய்தி யாது?
செல்வந்தர் விண்ணரசில் நுழைவது அரிது.

20. இறைமக்களாக நாம் வாழ இறைவன் எமக்களித்தவை எவை? பத்துக் கட்டளைகளும், நீதிச்சட்டங்களும்.

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 126

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் எசாயா நூலின் 59ம் அதிகாரத்திலிருந்து 66ம் அதிகாரம் வரை (இதுதான் எசாயா நூலின் இறுதி அதிகாரங்கள்) உள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன.

எசாயாவின் இறைவாக்குகள் கடவுளை மக்களின் பாவங்களின் நிமித்தம் தண்டிக்கின்ற இறைவனாகவும் - பின்பு அவர்களைத் தமது மட்டற்ற தயவினால் மீண்டும் கட்டியெழுப்புகின்ற இறைவனாகவும் காட்டுகின்றன.

கிறிஸ்துவின் பிறப்புப் பற்றியும் - பாவப்பரிகாரப் பலியாக அவர் பாடுகள்பட்டு அவமானப்படுத்தப்பட்டு தன்னை ஒப்புக்கொடுத்து மக்களை மீட்டார் என்ற செய்தியும் கூறப்படுகின்றது.

கிறிஸ்து கடவுளை நமது தகப்பனாக அறிமுகம் செய்து தந்திருக்கின்றார். "பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படி சொல்லித் தருகின்றார். கடவுளை நாம் நேசிக்க வேண்டுமாயின் நம் அயலவரை - சகோதரரை நேசிக்க வேண்டும் என்றும் சொல்கின்றார். உணவு தரும்படி கேட்கச் சொல்கின்றார். தீமைகளில் நின்றும் சோதிக்கும் சாத்தானிடமிருந்தும் காத்துக்கொள்ளும்படி கேட்கச் சொல்கின்றார். இறைவன் இரக்கமுள்ளவர், மன்னிப்பவர், பாவிகளை நேசிப்பவர், தேவைகளில் அருளுபவர். அவர் எங்கும் எல்லாரிலும் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவர்.

### இனி எமது வினாக்களுக்குள் செல்வோம்.

01. மீக்க இயலாதவாறு ஆண்டவரின் கைகள் குறுகிவிடவில்லை. கேட்க முடியாதவாறு ஆண்டவரின் காதுகள் மந்தமாகிவிடவில்லை. ஆயினும் உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே பிளவு உண்டாகி உள்ளது. எதனால்?

02. 60ஆம் அதிகாரம் ஒரு நகரத்தின் எழுச்சி பற்றியும், அதன் எதிர்கால மேன்மை பற்றியும், அதை ஆண்டவரே முன்னின்று நடத்துவார் என்பது பற்றியும் கூறுகின்றது. அது எந்த நகரம்?

03. "ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது ... ". எனத் தொடங்கி, "நலிவுற்ற நெஞ்சத்திற்குப் பதிலாக புகழ் என்னும் ஆடையைக் கொடுக்கவும் என்னை அனுப்பினார்." என்று நிறைவுறும் பகுதி யாரைப் பற்றிக் கூறுகின்றது?

04. "கைவிடப்பட்டவள் என்று நீ இனி பெயர்பெற மாட்டாய். பாழ்பட்டது என இனி உன் நாடு அழைக்கப்பட மாட்டாது. நீ எப்சிப்பா என்று அழைக்கப்படுவாய்." எபிரேய மொழியில் எப்சிப்பா என்றால் பொருள் என்ன?

05. ஆண்டவரின் பேரன்புச் செயல்களை எடுத்துரைத்து அவருக்குப் புகழ் சாற்றுவேன். ஏன்?

06. யாருக்கு இறைவன் துணைசெய்ய விரைகின்றார்?

07. எம் மூதாதையர் உம்மைப் போற்றிப் பாடிய தூய்மையும் மாட்சிமையும்மிக்க எங்கள் திருக்கோவில் நெருப்புக்கு இரையாயிற்று. எங்களுக்கு அருமையானவை அனைத்தும் அழிந்துபோயின! இவற்றைக் கண்டும் ஆண்டவர் என்ன செய்கின்றார்?

08. பல்வேறு வகையான தீச்செயல்களை வகை தொகை இன்றிச் செய்யும் மக்களுக்கு இறைவன் என்ன செய்வேன் என 65ம் அதிகாரத்தில் கூறுகின்றார்?

09. யாரை இறைவன் கண்ணோக்குவேன் எனக் கூறுகின்றார்?

10. நான் படைக்கின்ற புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் என் கண்முன்னே நிலைத்திருப்பதுபோல் உங்..... என்கிறார் ஆண்டவர். இந்தப் புதிய விண்ணுலகையும் - புதிய மண்ணுலகையும் பற்றி எசாயா முன் அதிகாரத்திலும் திருவெளிப்பாட்டிலும் குறிப்பிடப்படுகின்றது. எந்த அதிகாரத்தில் எந்த வசனத்தில்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 124 இற்கான கேள்விகளுக்கு 17பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. சி. வினோதினி, கட்டையடம்பன், மடுறோட்.
2. எஸ். கத்தறின், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
3. A. போசன்னா பீரிஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
4. எ. திலீப், பட்டித்தோட்டம், மன்னார்.
5. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
6. இ. நிறஞ்சலா, கோமரசன்குளம், வவுனியா.
7. ஜீவரெத்தினம் ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
8. செ. இன் வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
9. எ. கில்டா, காத்தான்குளம், நானாட்டான்.
10. வி. ஆன் நிதர்சினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.

## பேராலயப் பங்கின் .....

16ஆம் பக்கத் தொடர்ச்சி

அத்துடன் அதன் தொடர்நிகழ்வாக 26.12.2013 தொடக்கம் 30.12.2013 வரையிலான காலப்பகுதியில் பேராலயப் பங்கு மக்கள் வாழும் பகுதிகளான பெரிய கமம், குழந்தை யேசுபரம், நூறுவீட்டுத்திட்டம், ஜீவநகர், எமில்நகர், சவுத்பார், புகையிரத நிலையம், சாந்திபுரம், இருதயபுரம், ஜிம்பிறவுண் நகர், பனங்கட்டுக்கொட்டு, பெரியகடை போன்ற பகுதிகளில் "நத்தார் தாத்தாக்களுடன்" கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டு, இருள் அகற்றி ஒளியூட்டும் பாலகன் இயேசுவின் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை ஆடல், பாடல்கள், இறைவார்த்தையோடு மக்களுக்கு நத்தார் வாழ்த்துக்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு அனைத்து மக்களினதும் வரவேற்பும், ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றதுடன் பாராட்டுக்களும் நன்றிகளும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்செய்தியோடு தொடர்புடைய சில படங்களைக் கீழே காணலாம்.




*தூய செபஸ்தியார் பேராலயம் மன்னார்.*




**விளம்பர சேவை**

**தேவை**

**வீட்டில் கையுதவிப்பெண்**

வீட்டில் தங்கியிருந்து வயோதிப தந்தை தாய்க்கு சமையல், கையுதவி செய்யக்கூடிய நடுத்தர அல்லது இளம் கத்தோலிக்க பெண் ஒருவர் தேவை. உணவு தங்கும் வசதியுடன் மாதம் ரூபா 10,000/- வழங்கப்படும்.
தொடர்வு: T.P : 077-6795435, 023-2050038


## புனிதர்களின் பாதையில் .........

09ஆம் பக்கத் தொடர்ச்சி

இவர் மெய்மறையைத் தழுவும்போது முதல் மனைவியை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த கடலை என்பவள் இரகுநாதனை அணுகினாள். (அரசர் இவளுக்கு நெருங்கிய உறவினர்.) ஓரியூரிலிருந்த தன் தம்பி உடையத்தேவரிடம் சுவாமி அருளானந்தரைப் பற்றிய குற்றச் சாட்டைக் கவனிக்கக் கேட்டுக்கொண்டான். இந்த உடையத் தேவரின் ஆணைப்படி கி.பி 1693ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாள் ஒரு மணல் மேட்டில் புனிதர் தலைவெட்டப்பட்டு விண்ணகம் சென்றார்.

**சிந்தனைக்கு:**

"எல்லா வகையிலும் வேதனையுறுகிறோம். ஆனால் ஒடுங்கிப் போவதில்லை. மனக்கலக்கம் அடைகிறோம். ஆனால் மனம் உடைவதில்லை. துன்புறுத்தப்படுகிறோம், ஆயினும் இறைவனால் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்படுகிறோம் ஆனால் அழிவுறுவது இல்லை. போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்" (2 கொரி 4,8-10)

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்
காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்
[illegible]

## யாழ் பல்கலைக்கழகத்தில் .....

7ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும் இந்து, இஸ்லாமிய, பௌத்த மாணவர்களும் இவற்றில் கலந்துகொண்டமை பெருமகிழ்ச்சி அளித்ததோடு சமய உறவாடலை வளர்த்தெடுக்கும் வாய்ப்பாகவும் அமைந்தது.

சமூகவியல் துறையினர் முதன்முறையாக 18-12-2013 அன்று மகிழ்ச்சியோடு ஒளிவிழாக் கொண்டாடினர். ஒவ்வொரு வருடமும் போலவே மருத்துவப்பீட மாணவர்கள் 21-12-2013 அன்றும் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பணியாளர்கள் 22-12-2013 அன்றும் ஒளிவிழாவை கொண்டாடி மகிழ்ந்தனர். இவை ஒவ்வொன்றிலும் அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் கலந்துகொண்டு நத்தார் செய்தி வழங்கி மகிழ்வித்தார்.


**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.139

## சீராக்கின் ஞானம் 21 முதல் 40 முடிய

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | | | | | | | | | 11 |
| | | 22 | | | 06 | | | | |
| 07 | | | | | | 20 | | 21 | 17 |
| 10 | | | | | | | 18 | 15 | |
| | 09 | | | | ❖ | | | | |
| 23 | | | | 01 | | 19 | | | |
| | | | 05 | | | | | | 13 |
| | | | | 14 | | | | 16 | |
| | ❖ | 08 | | 03 | | | | | |
| 02 | | | | | | | | | 12 |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. மதிகெட்டோரைப் பொறுத்துக்கொள்வதைவிட மணல், ......................, இரும்புத்துண்டு ஆகியவற்றைச் சுமப்பது எளிது.
2. நலம் ................. சில வேளைகளில் மருத்துவர்கள் கையில் உள்ளது எனக் கூறக்கூடிய நேரமும் உண்டு.
3. ........... அறிவாற்றலால் ஆண்டவர் அவர்களை வேறுபடுத்தினார்.
4. .......... அவரைத் தேடுவோர் அவரது பரிவைப் பெற்றுக்கொள்வர்.
5. இறந்தோருக்காக ......................
6. நெறிகெட்டோரின் கூட்டம் .................... குப்பை போன்றது.
7. வனப்பையும் அழகையும் ...................... நாடுகிறது.
8. அதன் முடிவில் கீழுலகின் ..................... உள்ளது.
9. ............... இல்லையேல் மனிதன் பெருமூச்சு விட்டு அலைவான்.
10. என் உதடுகளை நுண்ணறிவு எனும் முத்திரையிட்டு ............... யார்?

### வலமிருந்து இடம்

1. ..................... இறைவனே நலம் அருள்கிறார்.
5. அவற்றை ................ செய்வதில் விழிப்பாய் இருக்கிறார்கள்.
6. ...................... தழும்பை உண்டாக்கும்:
11. சலிக்கின்றபோது .................... உமி தங்கிவிடுகின்றது.
12. ..................... அழகினில் மயங்கிவிடாதே.
13. ............... கலன்களை, சூளை பரிசோதிக்கின்றது.
14. ............... போன்று நறுமணம் பரப்புங்கள்.
15. ................ வெறுமையான, பொய்யான நம்பிக்கை கொண்டுள்ளனர்.
16. இரைக்காகப் பதுங்கிச் .................. காத்திருக்கின்றது.
17. மனம் ..................... அழு:
20. நல்ல மனிதர் தமக்கு அடுத்திருப்பவருக்குப் ............ நிற்பர்.

### மேலிருந்து கீழ்

1. அவர்கள் ................ ஓட்டுவதில் தங்கள் உள்ளத்தைச் செலுத்துகிறார்கள்.
11. ................ வளமான வயலைத் தேடு:
15. .............. வாழ்க்கை, நாள்களின் எண்ணிக்கையில் அடங்கும்.
16. கட்டளைகளை நினைவில்கொள்: அடுத்தவர்மீது ................ கொள்ளாதே:
18. ................. வாக்குவாதம் நெருப்பை மூட்டுகிறது.
22. பேறுகாலப் பெண்போன்று உள்ளம் .................. செய்கிறது.

### கீழிருந்து மேல்

1. எளிய உணவே ஏழைகளுக்கு ........................
2. ................ அழகு அவளுடைய கணவனை மகிழ்விக்கும்.
7. மருந்துசெய்வோர் இவற்றால் ................... செய்கின்றனர்.
12. இலவங்கப் பட்டைபோலும் பரிமளத்தைலம்போலும் .................... கமழ்ந்தேன்.
19. எல்லா நீர்நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் வளரும் நாணல் ................ வகைகளுக்கு முன்னரே பிடுங்கி எறியப்படும்.
21. அவர்கள் வைகறையில் .................... எழுகின்றார்கள்.
23. நீதிமான்களின் ................... ஏற்றுக்கொள்ளத்தக்கது.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 137ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
மே. பி. றோ. கிறிஸ்ரோபர்,
18, கோவில் வீதி, ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:**
கே. மேரி பிரபாளினி,
ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
றொ. றெஸ்மியா,
தோணிக்கல், வவுனியா.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 57 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 137ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப்பெறும் போட்டியாளர்கள்

1. ராணி அரசரத்தினம், புகையிரத நிலைய வீதி, மன்னார்.
2. அ. தயாபரன் நிலா, ஆத்திக்குழி, முருங்கன்.
3. திருமதி. அ. விஜி, சின்னக்கடை, மன்னார்.
4. ஜே. போசன்னா பிரிஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
5. அகுஸ்தின் இசைக்கியேல், ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
6. பி. சந்தாம்பிள்ளை சில்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
7. டெபோறா மோகன்ராஜ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
8. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
9. ஆர். ரெறன்ஸ், எமில்நகர், மன்னார்.
10. ச. அனோச், காத்தான்குளம், நானாட்டான்.
11. A. மனோஜ் பீரிஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
12. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதாவீதி, சின்னக்கடை, மன்னார்.
13. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
14. யு. மனோஜ் பீரிஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
15. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
16. அ. மிதுசா, கங்காணிதீவு, நானாட்டான்.
17. செ. ரெத்தினம் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
18. திருமதி. வசந்தி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
19. ச. அஜந்தன், காத்தான்குளம், நானாட்டான்.
20. அ. யூடிற்றா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
21. திருமதி. பி.வி.சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
22. செ. இன்பென்ரா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
23. அ. கரோலினி, கீர்த்திக்கா, 57 தபால்நிலையவீதி, திருகோணமலை.
24. டோ. சுபாஜினி, அ.சி.இ. பூவரசங்குளம், வவுனியா.
25. க. கரிஸ் மிரண்டா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
26. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
27. எஸ். ஆனந்தமலர் கொடுதோர், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
28. எம். அபினாஸ், எழுத்தூர், மன்னார்.
29. மரிய சிலோஜனா அலோசியஸ், 4ம் வட்டாரம், மண்டைதீவு.
30. எஸ். ஸ்ரீபன், சிறுக்கண்டல், முருங்கன்.
31. நோ. மெறிக்சன், பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
32. அ. அனுஸ்கா, வெத்திலைகேணி, கட்டைக்காடு.
33. பா. மேரி சுகந்தினி, நித்தாவத்தை, கரணவாய்கிழக்கு, கரவெட்டி.
34. எ. லீஜன் ராஜ் சில்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
35. ரி. ஸ்ரெபின், முள்ளிக்குளம், மன்னார்.
36. சி. கமிலேஸ் கொடுதோர், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
37. க. கான்ஷிகன், கட்டையடம்பன், மடுறோட்.
38. ஜெ. ஜெனிஸ்ரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
39. எ. அபிஷின், பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
40. கிறிஸ்டர்வின் பீரிஸ், அரிப்பு
41. அ. ஆன்றிகா, வெத்திலைக்கேணி, கட்டைக்காடு.
42. புனிதா வேலுச்சாமி, தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா.
43. பி. றாஜி, கற்கிடந்தகுளம், முருங்கன்.
44. கே. மேரி பிரபாளினி, ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
45. அ. நிலோஜன், மாதாகிராமம், மடுறோட்.
46. சி. கமிலேஸ், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
47. கு. தயாநிதி, குஞ்சுக்குளம், மடுறோட்.
48. அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
49. சம்சோன் ஜெயராஜ், பூவரசங்குளம், வவுனியா.
50. அ. கொலின்ஸ் றெவல், முள்ளிக்குளம், மன்னார்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.138ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# திருநிலைப்படுத்தப்படவுள்ள புதிய குருக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

### அருட்பணி. யேசுதாசன் டெனிஸ் குரூஸ்

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தைச் சேர்ந்த திரு.திருமதி. குருசுப்பிள்ளை யேசுதாசன் குரூஸ், சூசையப்பு அன்னம்மா குரூஸ் தம்பதிகளின் புதல்வனாக 13.10.1977 இல் இவர் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியையும், உயர் கல்வியையும் பேசாலை மன்/ பற்றிமா மகா வித்தியாலயத்தில் நிறைவுசெய்தார்.

வவுனியா மதவுவைத்தகுளம் செபமாலை ஆச்சிரமத்தின் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

17.08.2013 அன்று திருத்தொண்டராக உயத்தப்பட்ட இவர் உசன் சென். யோசப் ஆச்சிரமம், மிரிசுவில், யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமம் ஆகியவற்றில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை மார்ச் 01ஆம் திகதி 2014 அன்று காலை 9.30 மணிக்கு பேசாலை புனித. வெற்றிநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்பணி. ஞானப்பிரகாசம் ஞானறூபன்

வவுனியா பெரிய கோமரசன்குளம் புனித பரலோகமாதா ஆலயத்தைச் சார்ந்த திரு. திருமதி. பிலிப்பு ஞானப்பிரகாசம், ஞானப்பிரகாசம் ஞானப்பூ தம்பதிகளின் புதல்வனாக 22.07.1979இல் இவர் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

வவுனியா மதவுவைத்தகுளம் செபமாலை ஆச்சிரமத்தின் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியையும் நிறைவுசொய்தார்.

17.08.2013 அன்று திருத்தொண்டராக உயத்தப்பட்ட இவர் உசன் சென். யோசப் ஆச்சிரமம், வவுனியா செபமாலை ஆச்சிரமம் ஆகியவற்றில் தனது திருத்தொண்டர் பணியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை மார்ச் 02ஆம் திகதி 2014 அன்று காலை 9.00 மணிக்கு கோமரசன்குளம் புனித/ பரலோகமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# அமெரிக்க போர்க்குற்ற நிபுணரிடம் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

### கொத்துக்குண்டுகள்

போரின் இறுதிக் கட்டத்தில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள் இரசாயண ஆயுதம் என்பவற்றை படைகள் பயன்படுத்தியுள்ளன. இவர்கள் இதனைச் சண்டையில் எப்போது, எங்கே பாவித்தார்கள் என்பதையும் மக்கள் எங்களுக்கு விவரமாகத் தந்துள்ளனர். அதனை அமெரிக்க தூதுவரிடம் ஒப்படைத்துள்ளோம் என்றார் மன்னார் ஆயர்.

### ஸ்ரீபன் ராப்பிடம் ஆயர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு

வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளாக பாவிக்கப்பட்ட பாடசாலைகள்மீது ஷெல் வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதன் காரணமாகப் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. வள்ளிபுரம் பிரதேசத்தில் (செஞ்சோலை சிறுவர் இல்லம்) முதலுதவிப் பயிற்சிக்காகச் சென்றிருந்த மாணவர்கள்மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மருந்தையும் உணவையும் போர் ஆயுதமாகப் படையினர் பயன்படுத்தினர். போர்நடைபெற்ற பகுதிகளுக்கு மருந்து மற்றும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

### போர்தவிப்பு வலயம்மீது தாக்குதல்

இலங்கை அரசு பிரகடனப் படுத்திய மோதல் தவிர்ப்பு வலயங்களிலும் தஞ்சமடைந்திருந்த மக்கள்மீது அரச படையினர் ஷெல் வீச்சுத் தாக்குதல் நடத்தினர். இதனால் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இடம்பெயர்ந்து கோயில்களில் தங்கியிருந்த மக்கள்மீது விமானக்குண்டுவீச்சு நடத்தப்பட்டு ஏராளமானோர் கொல்லப்பட்டனர். தமிமீழ விடுதலைப் புலிகளைக் கொல்ல வேண்டும் என்பதற்காக மக்களைக் கொல்ல முடியாது.

### ஒவ்வொருவர் தொடர்பிலும் விசாரணை தேவை

இலங்கையில் காணாமற்போன ஒவ்வொருவர் தொடர்பிலும் விசாரனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போரின் இறுதி எட்டு மாதங்களிலும் ஒரு இலட்சத்து 46ஆயிரம் பேர் வரையில் காணாமற்போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது கண்டுபிடிக்கபட வேண்டும். செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 3 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதுடன் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. அதில் ஐநூறுக்கு அதிகமானோர் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது கைவிடப்பட்டது. மன்னாரில் மீட்கப்படும் புதைகுழி மற்றும் செம்மணி புதைகுழி தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

### நல்லிணக்கத்துக்கு அரசே முட்டுக்கட்டை

தென்னாபிரிக்காவில் ஏற்படுத்தப்பட்டதைப் போன்று இங்கும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் இங்கு அதற்கு உரிய புறச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் அரசியலில் தழம்பல் ஏற்படுத்துவதற்காக அரசு திட்டமிட்ட ரீதியில் சிங்கள குடியேற்றத்தை முன்னெடுக்கிறது. அத்துடன் மக்கள் இயல்பு வாழ்கைக்குத் திரும்ப முடியாத வகையில் இராணுவக் குவிப்பு செயற்பட்டுள்ளது. இது நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்குரிய புறச்சூழல் அல்ல.

# 600 வறிய மாணவர்களுக்கு உதவி புரிந்த மன்னார் வர்த்தகர்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின்கீழ் வாழும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை மன்னார் மாவட்டத்தின் பிரபல வத்தகர் இருதய நாதன் சார்ளஸ் தொடர்ந்து வழங்கிவருகிறார். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மீள்குடியேற்றக் கிராமங்களான சன்னார், ஈச்சளவக்கை, பெரியமடு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி விஜயம் செய்த வர்த்தகர் இருதய நாதன் சார்ள்ஸ், சுமார் 500 மாணவர்களுக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பாடசாலை உபகரணங்களை சுமார் 100 மாணவர்களுக்கு வழங்கினார். மன்னார் நூறு வீட்டுத்திட்டம் மற்றும் முப்பது வீட்டுத் திட்டம் ஆகிய கிராமங்களுக்குச் சென்ற வர்த்தகர் சாள்ஸ் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை 100 மாணவர்களுக்கு வழங்கினார்.

நீண்ட நாட்களாக குறித்த கிராமங்களில் உள்ள வறிய மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வி கற்றலுக்கு தேவையான உபகரணங்களின்றி பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வந்தனர். இவ்விடயம் தொடர்பாக சமூக சேவகரும் பிரபல வர்த்தகருமான இருதயநாதன் சாள்ஸின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்தே மாணவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்ட குறித்த வர்த்தகர், உடனடியாகக் குறித்த கிராமங்களுக்குச் சென்று அந்த வறிய மாணவர்களுக்குத் தன்னால் இயன்ற கற்றல் உபகரணங்களை வழங்கி இந்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தார். வர்த்தகரின் செயற்பாட்டிற்கு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07 09 1917 | உதிர்வு 12 02 2008

### திருமதி. திருச்செல்வம் பிச்சைக்குட்டி
(பனங்கட்டிகோட்டு. மன்னார்.)

*"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)*

ஆண்டு ஆறு போனாலும் அன்னையே
உன் அன்புமுகம் மறவோம் நாம்
பதினாறும் பெற்ற பாக்கியவதியம்மா நீ
பரமன் யேசுவின் மலர்ப்பாதம் பதியம்மா நீ....

*உம் பிரிவால் துயருறும் :*
*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*
*பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.*

தகவல் : பி. பொன்னம்பலம் (J.P),
"ஓசான்னா", பிரதான வீதி, கல்பிட்டி.

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 02 1927 | உதிர்வு 09 02 1984

### திருமதி. செபமாலை சத்தியசீலன்
(விடத்தல்தீவு)

புன்னகையானது உன் முகம், புண்படுத்தாதது உன் முகம்
பாசமானது உன் கரங்கள், பார்த்திருக்கப் பிரிந்து சென்றாயோ!
நேசமாகப் பழகுவாயே, நினைத்துக்கொண்டிருக்கின்றோம் நாளுமே.
உன் நீங்காத நினைவுகளை தினம் தினம் இரைமீட்டுகின்றோம்.
நித்திய இறைவனோடு சங்கமமாக - உனக்காக செபிக்கின்றோம் எப்போதும்.

*அன்புடன் நினைவுகூரும் :*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## 04ம்ஆண்டு. 4 1/2ம் ஆண்டு நினைவஞ்சலி



### திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)



### ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 29. 04. 1952
உதிர்வு : 08. 02. 2010

மலர்வு : 27. 08. 1945
உதிர்வு : 06. 08. 2009

*"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்" (2 திமொத்தேயு 4:7)*

இவர்களின் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், மைத்துனிகள்,

மகள் அருணி, பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், மைத்துனிகள்,

மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், (லண்டன், பிரான்ஸ்)

*தகவல் : கசியன் பிலிப்புபிள்ளை, லண்டன்*

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 01 1940 | உதிர்வு 02 02 2004

### சந்தியா பெனடிக்ற் டயஸ்
(யூட்ஸ்வீதி, பேசாலை.)

*"நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன் உன்னைவிட்டு விலகமாட்டேன்." (எபி 13:5)*

அருமை ஐயா,
எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பத்து சென்றாலும்
எம்மை விட்டு விலகாது
உம் நினைவு
இரக்கம் நிறைந்த இறைவன்
ஈந்திடுவார் விண்ணகமே
ஓயாது இறைஞ்சுகின்றோம்
நித்திய சாந்திபெற.

*உங்களது பிரிவால் துயருறும் :*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்.*

## 31 நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 05 1922 | உதிர்வு 10 02 2014

### திரு. செபமாலை சந்தியோகு மொத்தம்
(சித்தவைத்தியர்)
(நறுவிலிக்குளம், வங்காலை.)

இவ்வுலக வாழ்வை முடித்து
இறை சன்னிதானம் நோக்கி
பயணித்து 31 நாட்கள்
ஆகியும் ஆறவில்லை அப்பா
உங்கள் நினைவு.
இறைவனின் பாதத்தருகில்
அமர்ந்திருக்க நாளும் பொழுதும்
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

*உங்களது பிரிவால் துயருறும் :*
*உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

## இளைஞர் ஆணைக்குழுவின் ......

5ஆம் பக்கத் தொடர்ச்சி

அடுத்ததாக இளைஞர்களின் இசை ஆர்வத்தை வளர்க்க மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்கள் இசைத்தட்டு (இறுவெட்டு) ஒன்றை வெளியிட உள்ளோம். இதற்காக ஒவ்வொரு பங்கிலும் இருந்து இரண்டு பாடல்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. தரமான பாடல்கள் தெரிவுசெய்யப்பட்டு இறுவெட்டுக்களாக வெளியிடப்படும்.

### போட்டி விதிமுறைகள்

- புதிதாக இசை அமைக்கப்பட்ட பாடல்களாக அமைதல் வேண்டும்
- தனிப்பாடலாகவோ, குழுப்பாடலாகவோ அமையலாம்.
- இப்பாடல்கள் திருப்பலியிலே பாடக்கூடியதாகவோ, தியானப்பாடலாகவோ, மரியன்னைப்பாடலாகவோ, இளைஞர் எழுச்சிப்பாடல்களாகவோ, இவ்வாண்டு மையக்கருத்தைக் கொண்ட பாடலாகவோ அமையலாம்.
- ஏற்கனவே பயன்படுத்தப்படுகின்ற பாடல்களின் தளுவல்களாகவோ, இசையாகவோ அமைதல் கூடாது.
- தரமான 10 பாடல்கள் மாத்திரமே இசை தட்டுக்காக தெரிவு செய்யப்படும்.
- இசை அமைப்பதற்கும் பாடல்வரிகளை எழுதுவதற்கும் பங்கில் உள்ள கலைஞர்களின் உதவியை நாடலாம். ஆனால் பாடல் பாடுவது இளைஞர்களாக அமைதல் வேண்டும்.

ஒவ்வொரு பாடல்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பாடல்களுக்கும் தலா 2000 ரூபா வழங்கப்படும்.

- இப்போட்டிக்கான முடிவுத்திகதி மாசிமாதம் 28ம் திகதி ஆகும்.

இப்போட்டி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பங்குகள் முடிவுத்திகதிக்கு முன்னர் தம் பெயர் விபரங்களை எமது பணியகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தெரிவு செய்யப்படுகின்ற பாடல்கள் உள்நாட்டு, வெளிநாட்டு கலைஞர்களின் உதவியுடன் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்கள் அமைப்பினாலே வெளியிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம். ஏனைய மேலதிக தகவல்களுக்கு இயக்குனரிடம் தொடர்புகொள்ளவும்.

**அருட்பணி. நெவின்ஸ் யோகராச், இளைஞர் ஆணைக்குழு**

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான
ஆக்கங்களை சுருக்கமாகவும்,
இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி
அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா


## துறவற வாழ்வில் வெள்ளி விழா வாழ்த்துக்கள்

**07.01.2014**



### அருட்சகோதரி அருள் மரியா (அ.கா)

வடக்கின் முத்தாம் யாழ்நகரில்
வளமாய் இம்மானுவல் தம்பதிக்கு
வரமாய் இறைவன் அருளினார்
வனிதை அஞ்சலா எனும்மகளை!

டிறிபேக் கல்லூரியில் ஆரம்பம்
திரேசா கல்லூரியில் உயர்தரம்
விரிவாய்க் கல்வி கற்றுணர்ந்து
நிறைவாய் ஏற்றார் துறவறத்தை.

சாவகச்சேரி பங்கதனில்
சந்நியாசம் முதல் பெற்றிட்ட
சாதனை படைத்த மகளாக
அருள்மரியாஎனும் பெயர்ஏற்றார்.

தூய்மை. நிறை துறவறத்தின்
தொடக்கம் சூசை மடத்தினிலே
தாய்மை நிறை ஆசானாய்
தொடக்கம் மரியாள் பள்ளியிலே.

தேற்றாப்பளையில் தொழிலிலே
மாற்றம் பெற்றார் அதிபராய்
ஏற்றம் பெற்றுக் கல்வியிலே
ஏற்றார் பட்டம் நாவலயில்.

பதுவை நகரின் புனிதரின்
நாமம் கொண்ட பள்ளியில்
அதிபர் என்னும் பதவியால்
அன்பால் ஆட்சி புரிகின்றார்.

எட்டுத் திக்கும் கதிர்விரித்து
படரும் கதிரவன் ஒளிபோல
பட்டுக் கரத்தால் உதவிபல
புரிவார் ஏழை மாணவர்க்கு.

பரிவாய் பாலர் பசி போக்கி
படிப்பில் நாட்டம் காட்டிடுவார்
சரியாய் உலகில் வாழ்ந்திடவே
ஒழுக்கநெறிகள் புகட்டிடுவார்.

கார்மேல்சபையின் ஒருமலராய்
கடவுள் சேவை புரியவந்து
ஈர் பத் தைந்து ஆண்டுகளை
இனிதாய் நிறைவு செய்திட்டார்.

கால் நூற்றாண்டு சேவைகளின்
காலம் வெள்ளி விழாவாக
கோலம் காணும் இந்நாளில்
உள மாறவே வாழ்த்துகிறோம்.

நீளும் வாழ்வுப் பாதையிலே
நாதன் கர்த்தர் சேவையினை
நாளும்செய்து பொன்விழாவை
காண ஆசி வேண்டுகிறோம்.

- ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
புனித அந்தோனியார்
மகா வித்தியாலயம்,
கொழும்பு - 14


(அருட்சகோதரி பற்றிய சிறப்புக் கட்டுரையை பக்கம் 11 இல் காணலாம்.)


## அந்தோனியார் புரத்தில் அன்பியப் பொங்கல்





தமிழர் திருநாளாம் தைத்திருநாளன்று அந்தோனியார்புரம் குதூகலித்தது. 13 அன்பியங்கள், ஆலயசபையினர், பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் அனைவரும் ஆனந்தமாய் இணைந்து உள்ளங்களும் இல்லங்களும் எண்ணங்களும் பொங்கிவழிய, பதினான்கு பானைகளில் பொங்கல் வைத்து நன்றியின் விழா, உறவின் விழா பகிர்வின் விழா கொண்டாடப்பட்டு கல்வாரிப்பலியுடன் இனிதே நிறைவுற்றது. தகவல்: அருட்சகோதரி சகாயம் (CIC)

## பேராலயப் பங்கின் கிறிஸ்மஸ் நிகழ்வுகள்



பேராலயப் பங்கில் பணியாற்றும் 'இயேசுவே ஆண்டவர்' பணிக்குழுவினரால் கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு முப்பத்தைந்து அடி (35) உயரமான கிறிஸ்மஸ் மரம் (Christmas Tree) 20,000 அலங்கார மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளியூட்டப்பட்டிருந்தது. இதனையே மேலே காண்கிறீர்கள். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 26 07 1928



உதிர்வு 19 01 2014

### திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை

(மனேச்சர், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்)

இல்லறத்தின் இன்ப ஒளியின்
தீச்சுடராய் நீங்கள் இருந்தீர்கள் ஐயா!
இன்பமான - இனிமையான
நல்வாழ்வுகளை பெற்றிருந்தோம்.
உந்தன் வாய்மொழியின்
மகிழ்வான மொழிகேட்டு மகிழ்ந்தோமே
இனி உந்தன் வாய்மொழிதான்
கேட்பது எப்போது?
ஒருமாத காலம் ஓடி மறைந்தாலும்
உன் நினைவு என்றும்
நிலைத்திருக்கும் எம் மனதில்!



ck; gphpthy; JaUWk; :
gps;isfs;> kUkf;fs;> Ngug;gps;isfs;

jfty; : n[Ndh (fdlh)> khpajh]; (N[h;kdp)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 11 1945



உதிர்வு 20 12 2013

### திருமதி. சூசைதாசன் மெற்றில்டா குரூஸ் (பத்மா)

(வங்காலை, மன்னார்.)

அம்மா என்றழைத்தவுடன் அருகே வந்து நிற்கும்
உங்கள் அழகு முகம் காண்பதெப்போ
தந்தையை நாங்கள் சிறு வயதில் இழந்திருந்தாலும்
தனியாக உம் சோகம் மறைத்து எம் பாசம் சுமந்து
கண்கலங்காது எம்மை வளர்த்து விட்டீர்களம்மா!
தந்தைசெய் கடமைகளையும் கண்ணியமாய்ச் செய்து
அவையத்து முந்தியிருக்கச் செய்தீர்கள் அம்மா
கடமை முடிந்ததென கடுகதியில்
கடவுளிடம் விரைந்தீர்களோ அம்மா?
நாம் எப்படியம்மா மறப்போம் உங்களை?
மறக்க முடியவில்லையே அம்மா!
உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் அமைதி
பெற்றிட வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் : பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 02 1956



உதிர்வு 12 01 2013

### திரு. சந்தாம்பிள்ளை மாசிலாமணி (வின்சன்)

(நானாட்டான்)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

பார் உலகில் உதித்திட்ட பரமனின் ஒளி விளக்கே!
அன்பின் திருஉருவே, பண்பின் சிகரமே,
பாசத்தின் நிறைகுடமே, மாசில்லாமணி ஐயாவே!
குடும்பத்தின் தலைவனாய், குவலயம் போற்ற வாழ்ந்தவரே.
ஆண்டொன்று ஆனபோதும் எம் துயரம் ஆறவில்லை.
இப்புவிமீது உம்பெயர் சொல்லி விழிநீரின் வேதனையில்
உங்கள் முகம்தேடி ஏங்கித் தவிக்கின்றோம்.
உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும் உணர்வுகளாலும் என்றும் எம்முன் வாழ்கின்றீர். உம் ஆன்மா இறைவனின் சந்நிதியில் சங்கமிக்க உமக்காக இறைபதம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 10 1941



உதிர்வு 20 02 2013

### திரு. அலஸ் சவரியப்பு

(வஞ்சியன்குளம், வங்காலை)

ஆண்டொன்று போனாலும் அப்பாவே ....!
மீண்டிடுவோமா உம் பிரிவுத்துயரில் நின்று
மாண்புற எம்மையெல்லாம்
உயர்த்திய தந்தையே!
ஆண்டவர் அழைத்திட்டார் உங்களை
கண்டிடுவோமா? உம்
கனிவான திருமுகத்தை.
நீண்டதொரு இளைப்பாறுதலில் ........
பரமனுடன் நீங்கள்
பரலோகத்தில் இன்புற்றிருக்க
வேண்டுகின்றோம் என்நாளும்.......!

உம் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்[illegible]ந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org